# களத்தில்

> நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம். எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்தும் போராடுவோம்.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 ஆடவை 26 (10.07. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


*தேசியத்தின்*
*வேட்கையைச் சுமந்து*
*புறப்படுகிறது புயல்!*
*கண்ணீரின் சரித்திரம்*
*முடிந்து விட்டது!*
*இனி வேறு கதை;*
*இது புதிய கதை!*
*எம் துப்பாக்கிகளின்*
*சுடு குழல்கள்*
*இனி வரலாற்றை எழுதும்!*
*கரிமருந்துப் புகைகலந்த*
*சுவாச மூச்சிலிருந்து பிறக்கும்*
*எம் பூகம்பம் -*
*[illegible] சிங்கத்தின்*
*ஆளுகையை முறிக்கும்.*
*அடக்கு முறையாளரின்*
*முதுகுகளை*
*உடைத்துக் கொண்டு -*
*சுதந்திரத்தின் சிகரத்தில்*
*இனி நாங்கள்*
*முடிசூட்டுவோம்!*
*காலத்தின் கர்ச்சனையாய்*
*செவிகளை*
*எம் தேசியகீதம் நிறைக்கையில்*
*'தமிழீழம்' -*
*உலகத்தின் நெற்றியில்*
*பொறிக்கப்படும்*
*அந்த திருப்பெயர்.*

**தி. இனியவன்**



பணியாது தமிழீழம் போராடும் - எங்கள் பகைமீது இனிமேலும் வெடிதீரும்.

# கிழக்கில் புலிகள் பெறும் மேலாதிக்கம்: சிங்கள அரசு நெருக்கடியை எதிர்கொள்கிறது !

**கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்க நிலை பரவத் தொடங்கியிருப்பதால், சிங்கள அரசு அரசியல் - இராணுவ நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.**

**இடைவிடாத - தொடரான - அதிரடித் தாக்குதல்களை நடாத்திவருகின்ற புலிகள், இப்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் நிலப்பரப்பைக் கட்டுப்படுத்துவதுடன் - திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் தமது செயற்பாடுகளை முன்னெப்போதுமில்லாத வகையில் தீவிரப்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக - கிழக்கு மாகாணத்தில், சிங்கள அரசின் நிர்வாகக் கட்டமைப்பு படிப்படியாகச் சீர்குலையத் தொடங்கியுள்ளது.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கேந்திர முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்ட ஒரு நிலப் பரப்பாகவே, கிழக்கு மாகாணம் எப்போதும் விளங்கி வருகிறது. தமிழீழப் போரை அடியோடு முறியடித்துவிட வேண்டுமெனில், கிழக்குமாகாணத்தைத் தமது இறுக்கமான பிடிக்குள் வைத்திருந்தே ஆகவேண்டுமென்ற கருத்தைக் கொண்ட சிங்கள அரசுகள் -

ஆரம்பம் முதலே, கடுஞ்சிரமங்களுக்கு மத்தியிலும், அந்தத் தேவையை உறுதியோடு நிறைவு செய்து வந்தன.

'தமிழர் தாயகக் கோட்பாட்டை இல்லாமலாக்கி – தமிழினத்தின் தேசியத் தன்மையைச் சிதைத்து – அவர்களது விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே தகர்த்து விடுவதற்கென – அத்துமீறிய நிலப்பறிப்பின்மூலம் குடியேற்றப்பட்ட, பலபத்தாயிம்


தொடர்ச்சி 18 ம் பக்கம்...


## தளபதி கிட்டு சென்ற கப்பலை தடுத்தது தவறானது

### இந்திய நீதிமன்றம் தீர்ப்பு

**தளபதி கேணல் கிட்டு சென்ற கப்பலை, இந்தியா சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தடுத்து; அக்கப்பலை வலுக்கட்டாயமாக இந்தியக் கரைக்கு இழுத்தமை தவறு என, ஆந்திரா மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டினம் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

1993 ஆம் ஆண்டு தை மாதம், ஒன்பது போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு சென்ற கப்பலை, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியப்படையினர் தடுத்து நிறுத்தி, அவர்களை வலுக்கட்டாயப்படுத்தி இந்திய



எல்லைக்குள் கொண்டு சென்று கைது செய்ய முயன்றவேளை, கேணல் கிட்டு, அக்கப்பல் பணியாளர்களாகவிருந்த ஒன்பது பேரையும் பத்திரமான முறையில் கப்பலில் இருந்து வெளியேற்றிய பின்னர், கப்பலை வெடிக்கச் செய்து தம் இன்னுயிர்களைத் தற்கொடையாக்கியது யாவரும் அறிந்ததே.

இவ்வாறு, கப்பலில் இருந்து வெளியேறிய பணியாளர்கள் 9 பேரையும் இந்தியக் கடற்படையினர் கைது செய்து 'தடா' சட்டத்தின் கீழ் சிறை வைத்திருந்தனர். இவர்களின் இறுதித் தீர்ப்பு வழக்கு ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினத்தில் 29.06.96 அன்று நடைபெற்றது.


தொடர்ச்சி 18 ம் பக்கம்...


## திருமலையில் புலிகள் அதிரடி

### ✻ 32 படையினர் பலி ✻ 2 போராளிகள் வீரச்சாவு

**தி**ருகோணமலையில், சிறிலங்காப் படைமீது 01-07-96 அன்று காலை 7.40 மணியளவில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி நடாத்திய தாக்குதலில், இரு அதிகாரிகள் உட்பட 32 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் – கல்லாறு இராணுவ முகாமில் இருந்து சுமார் 40 பேரைக் கொண்ட இராணுவ அணியொன்று தேடியழிக்கும் நோக்கத்தோடு புறப்பட்டு, திருமலை – கந்தளாய் வீதியில் அமைந்துள்ள சாம்பல்பிட்டி இராணுவ முகாமை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில், அவர்களை எதிர்கொண்ட புலிவீரர்கள் கடுமையான தாக்குதலைத் தொடங்கினர். கடுமையான துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. சுமார் 45 நிமிடமே நடைபெற்ற இத்தாக்குதலில்,


தொடர்ச்சி 18 ம் பக்கம்...




# தமிழீழத்தில் கரும்புலிகள் நாள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு எழுச்சிமிகு வரலாற்றைப் பதித்துவிட்டுச் சென்ற, கற்பனைக்கும் எட்டாத அற்புதத் தியாகிகளான கரும்புலிகளின் நினைவுநாளான யூலை 5ம் நாள் தமிழீழமெங்கணும் அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் மக்களாற் நினைவு கூறப்பட்டது.

வன்னியில் என்றுமில்லாத வகையில், இம்முறை கரும்புலிகள் நாள் வெகு எழுச்சியுடன் நினைவுகூறப்பட்டுள்ளது. மக்கள் நினைவு நாளுக்கு முதல் நாளிலிருந்தே, தாமாக முன்வந்து சிரமதானப் பணிகளிலும், வீதிகள், பொதுவிடங்கள், சந்தைகள், வீடுகளைச் சிவப்பு, மஞ்சள், கறுப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரித்திருந்தனர்.

இதேபோற் தென்தமிழீழத்திலும், வன்னியிற் கிளிநொச்சி, முல்லை, மற்றும் கரும்புலிகள் நாள் கொண்டாடப்பட்ட அனைத்து இடங்களிலும் பெரும்திரளான மக்கள் கலந்துகொண்டு தேச விடுதலைக்காய் விதையாகிய அத்தேசிய வீரர்களை மானசீகத்துடன் நினைவு கூர்ந்தனர். மேலும் கரும்புலிகள் நினைவு நாள் சிறப்புற நடைபெற அனைத்து மக்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டது மட்டுமல்லாது சகல விதத்திலும் ஒத்துழைத்தும் உள்ளனர்.

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்திகள், விடுதலைக் கீதங்கள் இசைக்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது வீதியிற் காத்திருந்த மக்கள் கும்பம் வைத்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சியில் இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட ஊர்திகள் கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்துக்குச் சென்றடைந்ததும், அங்கு மாபெரும் நினைவெழுச்சிக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இவ்வெழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி சந்திரிகா பேசுகையில், "எமது விடுதலைப் போராட்டத்திற் பின்னடைவுகள் ஏற்படும்போதெல்லாம் அதை முன்னோக்கி நகர்த்தியவர்கள் கரும்புலிகள். இங்கு ஏற்றப்பட்டுள்ள ஒவ்வொரு தீபமும் ஒவ்வொரு கரும்புலிகளையும் நினைவுக்குக் கொண்டுவரும். அத்தீப ஒளி தரும் உறுதியான வெளிச்சத்தில் நாம் திடமாக நின்று, இனவாதச் சிங்கள அரசின் பிடியிலிருந்து தமிழீழத்தை முழுமையாக மீட்டெடுப்போம்" எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்கையில், "சிறிலங்கா அரசு, தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரிப்பதுடன், தமிழீழ விடுதலையைத் தடுப்பது என்ற இரு நோக்கங்களுடன் செயற்படுகின்றது. இதனை விடுதலைப் புலிகள் உறுதியாக நின்று முறியடிப்பர்" என்று தெரிவித்தார்.

முல்லை மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் பேசுகையில், "கரும்புலிகள் வெல்லப்பட முடியாதவர்கள், அவர்களின் சாவையே வென்ற செயற்பாட்டைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது" என்று மிகவும் கருத்தாழத்துடன் தெரிவித்தார். ✷

# அமைச்சர் மயிரிழையில் தப்பினார்

## ✷ யாழ். நகரில் குண்டுத் தாக்குதல்
## ✷ பிரிகேடியர் உட்பட 21 பேர் பலி



யாழ் நகர், ஸ்ரான்லி வீதியில் கடந்த யூலை மாதம் 4ஆம் நாள் ஓர் குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இத்தாக்குதற் சம்பவத்தின்போது சிறிலங்கா வீட்டுவசதித்துறை அமைச்சர், தலையிற் காயத்துடன் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்தபின் யாழ் நகருக்குப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவப் பிரிகேடியர் ஆனந்த கமங்கொடவுடன் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் 55 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தைத் திறந்து வைத்துவிட்டு வீதிவழியாக 'பஜிரோ' வாகனத்திற் தனது மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் வந்து கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவரே அமைச்சரின் வாகனத்துடன் மோதிக் குண்டை வெடிக்க வைத்தார் எனச் சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு தெரிவிக்கின்றது. எனினும் தான், இருக்கையில் இருந்து விழுந்து வாகனத்தின் தளத்தோடு பாதுகாப்பு எடுத்ததினாற் காயங்களுடன் தப்பிவிட்டதாகவும், துரதிஸ்டவசமாக தன்னுடன் கூடவந்த தனது மெய்ப்பாதுகாவலர் உட்படப் பிரிகேடியரும் இறந்துவிட்டார் என மருத்துவமனையில் இருந்து செய்தியாளர்களுக்குச் செவ்வி வழங்கியுள்ளார். தன்னை இலக்கு வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆயினும் இவ்வாறான தாக்குதல்களால் வடக்கைப் புனரமைக்கும் தமது திட்டம் பாதிப்படையாது எனவும், சிறிலங்கா அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ✷

# ''அமைச்சர் கதிர்காமா இந்தியாவை விட்டு வெளியேறு!" "

## -தமிழகத்தில் மாணவர் சங்கம் ஆர்ப்பாட்டம்

பாட்டாளி மக்கள் கட்சியின் மாணவர் சங்கமும், தமிழக இளைஞரணி ஒன்றும் இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் அண்மையிற் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நிகழ்த்தியுள்ளன.

சிறிலங்கா வெளியுறவுத் துறை அமைச்சரைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் குரல்கொடுத்து இக் கண்டன ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப்பட்டுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சி மாணவர் சங்கச் சார்பிலும், இளைஞரணிச் சார்பிலும் சிறிலங்காத் தூதரகத்திற்கு முன் கடந்த 22 யூன் மாணவர் சங்கத் தலைவர் அறிவுச் . செல்வன் என்பவர் தலைமையிலும், மாநில மாணவரணி அருள் மற்றும் இளைஞரணி வேல்முருகன் என்பவர்கள் முன்னிலையிலும் அமைச்சர் கதிர்காமரின் இந்திய வருகைக்குக் கண்டனம் தெரிவித்து இவ் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.

காலையில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவரணி மற்றும் இளைஞரணித் தொண்டர்கள் கையிற் கண்டன வாசகம் தாங்கிய பதாகைகளுடன் குவிந்து நின்றனர்.

"எம் தமிழர் ஈழத்தில் வாழ்விழந்து; இங்கென்ன உனக்கு விருந்து"

"இலங்கை அமைச்சரே கதிர்காமா! இந்தியாவை விட்டு வெளியேறு"

"ஈழத் தமிழன் சிங்களரால் படுகொலை! உனக்கென்ன இங்கு வேலை!"

"அங்கீகரி அங்கீகரி தமிழீழத்தை அங்கீகரி!"

"காப்பாற்று காப்பாற்று மத்திய அரசே ஈழத்தமிழரைக் காப்பாற்று" போன்ற கண்டன முழங்கங்களை அவர்கள் உணர்வுபூர்வமாக எழுப்பினார்கள். இறுதியாகத் தூதரகத்தின் செயலாளர் சிவலிங்கத்தைச் சந்தித்து மனுக் கொடுத்தனர்.

## சென்னை வந்த சிறீமாவைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம்

கடந்த யூலை மாதம் 3ஆம் நாள், சென்னை சென்ற சிறிலங்காவின் பிரதமர் சிறீமாவோவைக் கண்டித்தும் விமானநிலையத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியுள்ளனர். சிறீமாவோவுடன் எதிர்கட்சியான ஐ.தே.கட்சியில் இருக்கும் அவரது மகனான அனுராவும் சென்றிருந்த வேளையிலேயே சென்னை விமான நிலையத்தில் இவ் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. சிங்கள அரசின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் அவர்களது தமிழக வருகையைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கடும் கண்டனக் குரல்களை எழுப்பினர்.

இவ்வாறாகத் தமிழகத்திலும் தற்போது ஈழத்தமிழருக்கு ஆதரவாக மீண்டும் மக்கள் தமது உள்ளக்கிடக்கையை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகின்றனர். ✷

# "தமிழீழப் போராட்டம் நீதியானது"

## -அமெரிக்க சட்டசபை உறுப்பினர்

''தமிழீழ விடுதலைப் போராட்டம் நீதியானது. அது சட்டவரம்பிற்குட்பட்டது. அமெரிக்காவில் வாழும் தமிழர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான தமது ஆதரவை, அமெரிக்கத் தலைவர்களுக்கும் ஏனைய தலைவர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டியது மிகவும் அவசியமானது" இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க சட்டசபை உறுப்பினர் திரு. சரோட் பிறவுண். அமெரிக்க மாநிலமான கொனக்டிகட் (Connecticut) மாநிலத்தில், கடந்த 4ஆம், 5ஆம், 6ஆம் நாட்களில் அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையினாலும், தமிழ்நாடு அறக்கட்டளையினாலும் நடத்தப்பட்ட ஆண்டு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

31 தமிழ்ச்சங்கங்கள் ஒன்றிணைந்து நடாத்திய இவ் விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்துகொண்டனர். அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால், தமிழீழத்தின் தற்போதைய நிலையை வெளிப்படுத்தும் கண்காட்சியும் அங்கு சிறப்பம்சமாக நடைபெற்றது. அத்துடன் கனடா, அமெரிக்கத் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகங்கள் கலைநிகழ்ச்சியினை மிகவும் தரமாக வழங்கின. இங்கு, நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்காத் தொலைக்காட்சியின் முன்னாள் தலைவர் திரு. வசந்தராஜா, சிங்கள அரசின் கபடத்தனத்தையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையையும் எடுத்து விளக்கினார். அமெரிக்காவைச் சேர்ந்த சட்டத்தரணியும், அமெரிக்க மனித உரிமைகள் குழுவின் அங்கத்தவருமான கரன் பார்க்கர் அவர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டம் சட்டரீதியாக, அது சரியானது; நீதியானது என்பதை உதாரணங்களுடன் விளக்கிப் பேசினார். ✷

# தமிழீழச் செய்தித்தொடர்புச் சேவை

## ✷ வன்னியில் விஸ்தரிப்பு

தமிழீழத்தில் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த 'நிதர்சனம்' என்றழைக்கப்படும் செய்தித்தொடர்புச் சேவை தனது சேவையை வன்னிப் பெருநிலப்பரப்பில் மேலும் விஸ்தரிப்புச் செய்து வருகின்றது.

தமிழர் பகுதி மீதான சிறிலங்கா அரசின், மின்சாரத்தடை, எரிபொருள் தடை, மின்கலத் தடை போன்ற பல பொருண்மியத் தடையினால் தம்மைச் சூழவும் உலகிலும் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய முடியாத நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு நிதர்சனம் சேவை ஓர் உன்னதமானதாகவே மக்கள் மத்தியில் இருக்கின்றது.

இந்நிலையத்தினால் 'ஒளிவீச்சு' எனும் பெயரில் வெளியிடப்படும் மாதாந்த 'வீடியோ' சஞ்சிகை தமிழீழத்தில் மட்டுமல்ல; வெளிநாடுகளிலும் தமிழரின் நன்மதிப்பையும், வரவேற்பையும் பெற்ற தாகும்.

இந்நிலையத்தின் அலுவலகங்கள் தற்போது மாங்குளம், முருங்கன், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு மற்றும் புளியங்குளம் ஆகிய இடங்களிலும் திறக்கப்பட்டுள்ளன. வளர்ந்து வரும் இச்சேவையை மேலும் சிறப்பாக நடாத்த இந்நிறுவனத்திற்கு மேலும் பல அலுவலர்கள் தேவையாக இருந்ததால் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும்படியும் கேட்கப்பட்டிருந்தது. இதற்கு மக்கள் மத்தியிற் பெரும் வரவேற்பும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த யூலை மாதம் 6ஆம் நாள் கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள இதன் அலுவலகத்திற் பல இளைஞர்கள், யுவதிகள் தேர்வுத் தகமைக்காகச் சமூகமளித்திருந்தனர்.

கடந்த யூலை 2ஆம் நாள் மாங்குளத்திற் திறக்கப்பட்ட அலுவலகம் பட விநியோகம் மற்றும் செய்தி சேகரிப்பு நிலையமாகவும் தொழிற்பட ஆரம்பித்துள்ளது. ✷



## வரலாற்று உண்மை

"சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்திற் தனது ஆக்கிரமிப்புக் கால்களை அகலப் பதிக்கலாம். பெருந்தொகையான படையினரைக் குவித்துச் செயற்படுத்துவதினால் எல்லைகளைப் பிடிப்பதென்பது சிரமமான காரியமல்ல. ஆனாற் பிடித்த எல்லைகளைத் தக்கவைத்துக் கொள்வது என்பதுதான் பிரச்சினையான விடயம். இந்த வரலாற்று உண்மையை உலகின் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் எல்லாம் அனுபவித்து உணர்ந்துள்ளன. சிறிலங்கா இராணுவமும் இந்த வரலாற்று உண்மையை விரைவில் உணர்ந்து கொள்ளும்."

யாழ்ப்பாணத்தைச் சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்ததின் பின்னர் மாவீரர் தினச் செய்தியில் (நவம்பர் 27, 1995) தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கூறிய வார்த்தைகள்தான் மேற்கூறப்பட்டுள்ளன.

தற்பொழுது யாழ். குடாநாடு உட்படத் தமிழீழத்தில் ஆக்கிரமிப்பு இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகள் எங்கணும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், "வரலாற்று உண்மை" என்றால் என்ன என்பதற்கான முகவுரையைச் செயலளவிற் சிறிலங்காப் படையினருக்கு வழங்கத் தொடங்கிவிட்டன. யாழ். ஸ்ரான்லி வீதிச் சம்பவத்திற்குப் பின்னர் சிறிலங்காவின் வீடமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா "இழந்த பகுதிகளை மீட்கப் புலிகள் கடுமையாக முயல்வர்" என அனுபவமொழி பேசியுள்ளார். அவருடைய சொற்களைத் திருத்தி "ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றத் தமிழர் படை எப்பொழுதுமே முயலும்" எனக் கூறுவோமாயின் அது சந்திரிகா அம்மையாருக்கும் - அவரது அரசிற்கும் அவர்கள் செய்து கொண்டிருக்கும் தவறுகள் அவர்களுக்கு எத்தகைய சிக்கல்களைத் தோற்றுவிக்கப் போகிறது என எச்சரிக்கும் மொழியாக அமையும்.

மக்கள், ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றுவதற்கு ஆக்கிரமிப்பாளன் ஏற்படுத்தும் உட்கட்டுமானங்களையே திருப்பிப் பயன்படுத்துவதும் உலக வரலாறு. உதாரணமாக, 60,000 படையினரைக் கொண்டு பலகோடி மில்லியன் ரூபாக்களைப் பயன்படுத்திப் பிரித்தானிய காலனித்துவவாதிகள் இந்தியப் புகையிரதப் பாதைகளை அமைத்தனர். அப்பொழுது அவர்கள் தங்களது படைகளினதும், சேவைகளினதும், சந்தையினதும் நோக்குகளைப் பூர்த்தி செய்வதாகவே நினைத்தனர். ஆனால் அதே புகையிரதப் பாதைகளிற் பயணம் செய்துதான் மகாத்மா காந்தி அதே பிரித்தானிய அரசுக்கெதிரான ஒத்துழையாமை இயக்கத்தை இந்தியா பூராவும் உறுதிப்படுத்தினார். ஆகவே வெறும் உட்கட்டுமானங்களை உருவாக்குவதினாலோ அல்லது சலுகைகள், நிவாரணங்களைத் தற்காலிகமாக வழங்குவதினாலோ சுதந்திர உணர்வுபெற்ற மக்கள் கூட்டத்தைச் சிறிதளவு கூட மனமாற்றம் செய்ய முடியாது.

மாறாக, யாழ். குடாநாடு மீதான படையெடுப்புக்கும் - சந்திரிகா விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் ஓர் இணக்கப்பாட்டிற்கு வராமல் - மனப்பூர்வமாக ஈடுபடாமல் 3ஆவது ஈழப்போர் உருவாகக் காரணமானதற்கும் நிறையத் தொடர்பு உண்டு. பேச்சுவார்த்தை தொடர்ந்தால் "தமிழீழ மக்கள் தேசமக்கள் எனும் தகுதியை, தேசமக்கள் எனும் உண்மையை" ஏற்க வேண்டிவரும் என்பதே சந்திரிகா எதிர்நோக்கிய முதலாவது அரசியற் பிரச்சினை. இதனை இல்லாதொழிப்பதற்கு அதாவது தமிழ் மக்கள் தேசமக்கள் என்பதை இல்லாதொழிப்பதற்கு - அதற்கு ஆதாரமாக உள்ள அவர்களின் கலாச்சாரத்தின் மையமான - வரலாற்றுப் பூமியான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு தனது கொடுங்கோலாட்சியை நிறுவ வேண்டுமென்பதே சந்திரிகாவின் படையெடுப்பின் பிரதான நோக்கமாகும். இவ்வாறு ஆக்கிரமிப்பாளர்கள், வரலாறுகளையும் வரலாற்று உண்மைகளையும் அழிக்க முற்படுவது உலக விடுதலைப் போராட்டங்கள் எல்லாவற்றிலுமே இடம்பெறும் பொதுப்பண்புதான்; அதனாற்தான் ஒரு இனத்தை இன அழிப்பு செய்வதும் அவ்வினத்தின் வரலாற்றுக் கலாச்சார - மொழியியற் தன்மைகளை வலுக்கட்டாயமாக உருமாற்றுவதும் ஒரேவிதமான சர்வதேசக் குற்றச்செயல்களாகக் கருதப்படுகின்றன. ஒரு மக்களை அடிமைப்படுத்துவதற்கு மொழியை, (பண்டாரநாயக்கா செய்தார்) அவர்களுடைய வரலாற்றுத் தடயங்களை (சந்திரிகா செய்கிறார்) அழிக்க முற்படுவது ஆக்கிரமிப்பாளனின் இயல்பு.

எனவே ஒரு ஆக்கிரமிப்பாளன், தன்னை அழித்தொழிக்க முற்படும்போது ஒடுக்கப்படும் இனம் போராடுவது - பயங்கரவாதமல்ல. "நீதியான அமைதி"க்கு ஒரு முயற்சியே. இதனைத்தான் அவுஸ்திரேலியாவிற் கூடிய சர்வதேசப் பிரமுகர்களின் "நீதியான அமைதி" என்ற தலைப்பிலான சிறிலங்காவின் இனமுரண்பாடு தொடர்பான சர்வதேச மாநாட்டு அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நேரத்தில் மக்கள் தமது பாதிப்புக்களிலிருந்து உடனடியாக விடுபடல் வேண்டுமென்றால் ஆக்கிரமிப்பாளன் கைப்பற்றிய பகுதிகளை விட்டுத் தன்முன்னைய நிலைக்குப் பின்வாங்குவதே முதல் நடவடிக்கையாக அமையவேண்டும். ஏனெனில் மக்களைத் தோற்கடிக்கப்பட்டவர்களாக, அல்லது சரணடைந்தவர்களாகக் கருதிக் கொண்டு ஆரம்பமாகும் எந்தப் பேச்சுவார்த்தையிலும் "நீதியான அமைதி" கிடைக்க மாட்டாது. இதனாலேயே விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பகுதிகளைவிட்டுச் சிறிலங்கா விலகினாலே பேச்சுவார்த்தை என்கின்றனர். இது பிடிவாதமல்ல - செயற்பாட்டுத் திறனுக்கான நிபந்தனையாக உள்ளது. இதனைச் செய்யும்வரை சந்திரிகா புனரமைப்புக்கென கூறி, தன் ஆயுத சக்தியை - போர்ச் செலவைப் பெருக்கக் கேட்கும் 270 மில்லியன் ரூபாக்களையும் சர்வதேச நாடுகள் கொடுக்கக்கூடாது என்பதே உலகத் தமிழர்களின் நியாயமான கோரிக்கை. அவ்விதம் சர்வதேச நாடுகளோ அமைப்போ தமிழீழ மக்களுக்கு உதவவிரும்பினால் அதனைத் தமிழீழ மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க ஆற்றலற்ற அரசு எனத் தன்னைத் தானே நிரூபிக்கும் சிறிலங்கா அரசுக்குக் கொடுக்காது, தமிழீழ மக்களின் புனர்வாழ்வு அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்குவதே பாதிக்கப்பட்டவரகள் உடன் உதவி பெறவழிவகுக்கும். ✷

# பலிக்காத தந்திரம்

தமது ஆக்கிரமிப்பிற்குள் வாழும் மக்களது மனங்களை வென்றெடுக்கும் வகையில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வது, என்பது நவகாலனித்துவத்தின் ஒரு தந்திரோபாயமாகும்.

மக்களது எதிர்ப்புணர்ச்சியைத் தணிப்பதற்காக, ஆக்கிரமிப்பு அரசுகள் இவ்விதமான நடவடிக்கைகளில் ஈடுபட முனைவதை, வரலாற்றின் அநேக இடங்களில் காணமுடியும்.

தனது ஆளுகைக்குள் இருந்த வியட்னாமிய மக்களது 'மனங்களை வென்றெடுப்பதற்காக', பெருந்தொகைப் பணச் செலவில் 'சாந்தப்படுத்தும்' திட்டங்களை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்திப் பார்த்தது. இந்திய அரசும் இவ்விதமான சில திட்டங்களைத் தமிழீழத்தில் - நடாத்திப் பார்த்தது. எனினும், ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு இந்தத் தந்திரோபாயம் வெற்றிகளைத் தேடிக் கொடுக்கவில்லை.

ஆக்கிரமிப்பு, அரசுகளது அல்லது படைகளது அடக்குமுறைகளைச் சிற்சில சலுகைகளுக்காகக் குறித்த மக்கள், மன்னித்து மறந்துவிடுவார்கள் என்ற பிழையான கணிப்பின் விளைவே, மக்களைச் சாந்தப்படுத்தும் இத்தகைய திட்டங்கள் தொடர்பான சிந்தனைகள் ஆகும்.

ஆக்கிரமிப்பாளர்கள் எதைத்தான் செய்தாலும், ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் என்றே அவற்றை மக்கள் நோக்குவர். ஆக்கிரமிப்பு இராணுவம் தமது மண்ணில் நிலைகொண்டு இருக்கும்வரை, தாம் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணத்துடனேயே மக்கள் வாழ்க்கையை ஓட்டுவர். இதன் காரணமாக, ஆக்கிரமிப்பு அரசுகள் நடைமுறைப்படுத்தும் எந்த ஒரு திட்டமும், நீண்டகால நோக்கில் வெற்றிபெறச் சந்தர்ப்பமே இல்லை. அதுவும் ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பு இயக்கமொன்று வலுவான நிலையில் செயற்படுமாயின், அத்தகைய கபடநாடகங்கள் வெற்றி பெறுவதற்கு மக்கள் அனுமதிக்கவே மாட்டார்கள்.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியுள்ள சிங்களப் படைகளும், உழுத்துப் போன இந்த நவகாலனித்துவ தந்திரோபாயத்தையே அங்கே நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கின்றன.

TAMIL EELAM

புலிகளின் குரல்

விடுதலைப் போராட்டம் பிறந்து வளர்ந்த வரலாற்றுச் சூழலைப் புறந்தள்ளிவிட்டு, சிற்சில சலுகைகளை, வாழ்க்கை வசதிகளைக் குடாநாட்டு மக்களுக்குச் செய்து கொடுத்தால், அவர்கள் போராட்ட உணர்வைக் கைவிட்டுவிடுவார்கள் என்ற முட்டாள்தனமான சிந்தனைதான் 'சூரியப் பிரகாச'த்தின் அரசியல் இலக்காகவும் உள்ளது.

இதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடாநாட்டிற்குள் புலிகள் கெரில்லாத் தாக்குதல்களை இப்போது தீவிரப்படுத்தி உள்ளனர்.

உறுதியான ஒரு பின்தளத்திலிருந்து நடாத்தப்படும் கெரில்லாத் தாக்குதல்களை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பது, உலகின் அரசியல் இராணுவ மேதைகளே ஒப்புக் கொண்ட ஒரு உண்மையாகும்.

பிரமாண்டமானதும், சிங்களப்படைகளால் வெற்றி கொள்ளப்பட முடியாததுமான வன்னிப் பெருநிலப்பரப்பைப் பின்தளமாகக்கொண்டு, புலிகள் இந்தக் கெரில்லாத் தாக்குதல்களை நெறிப்படுத்தி நடாத்துகின்றனர். குடாநாட்டில் 'சிவில்' நிர்வாகத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சிங்கள அரசின் இன்றைய முயற்சிகள் சீர்குலைந்து சின்னாபின்னமாகும் அளவுக்கு, அங்கே தாக்குதல்கள் விஸ்தரிக்கப்படப் போகின்றன. இது காலப்போக்கில் தீவிரமடைந்து 'எரிமலை மீது குந்தியிருக்கும்' ஒரு உணர்வைக் குடாநாட்டுப் படைகளுக்குக் கொடுக்கும்.

"தாம் மீட்டெடுத்ததாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மக்களே, தமது பிரதான எதிரிகள்" என்று முடிவெடுக்கும் அளவுக்குக் குடாநாட்டுப் படையினர் நெருக்கடிகளைச் சந்திக்கப் போகின்றனர். இது காரணமாக, 'சூரியப் பிரகாச'த்தின் அரசியல் இலக்கு சிதறுண்டு போகப் போகின்றது.

'சூரியப் பிரகாசம்' நடவடிக்கைகள் மூலம் - சிங்கள இனத்திற்கு ஒரு வரலாற்று வெற்றியைப் படையினர் ஈட்டிக் கொடுத்துள்ளனர் எனப் பேரினவாதிகள் இன்று மகிழக்கூடும். ஆனால், "சந்திரிகா அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறுதான் 'சூரியப்பிரகாசம்' நடவடிக்கைகள்" என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறும் அளவுக்கு நிலமைகள் சிக்கலடையப் போகின்றன என்பது நாளைய உண்மையாகும். ✷

# வன்னிப் படையெடுப்பு...

## எதிரியைப் பயமுறுத்தும் போர்க்களமாகக் குடாநாடு மாறும் !

கிழக்கைக் கைவிட்டு அது குடாநாட்டைக் கைபிலெடுத்தது.

அப்படியாயின், குடாநாட்டைவிடப் பல்மடங்கு நிலப்பரப்பைக் கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பைக் கைப்பற்ற அரசுப்படைகள் எதைக் கைவிடப்போகின்றன – குடாநாட்டையா கைவிடப்போகின்றன.....?

இதேவேளை, குடாநாட்டிற்குள் ஒரு நீண்ட – அத்துடன், அவர்களைச் சோர்வடையச் செய்யப்போகின்ற போரொன்றுக்குள் சிங்களப்படைகள் சிக்கிக் கொண்டுள்ளன. இதை எவரும் மறுதலிக்க மாட்டார்கள்.

**இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள மக்கள்தான் இராணுவத்தின், பிரதான எதிரிகள் என்ற நிலையை அரசுப்படைகள் விரைவில் எதிர்கொள்ளப்போகின்றன. அப்போது - குடாநாடு எதிரியைப் பயமுறுத்தும் போர்க்களமாக மாறும்.**

இந்தவகையில் – குடாநாட்டிற் செய்ததைப்போல பாரிய படையெடுப்புக்களை வன்னிப் பெருநிலப்பரப்பிற் செய்வது என்பது சிங்களப் படைகளின் சக்திக்கு மீறிய ஒரு செயலாகும். இதற்கு வன்னியின் நிலவிஸ்தீரணமும், அதுகாரணமாகச் சிங்களப் படைகள் எதிர்கொள்ளவேண்டிய பல்வேறு சிக்கல்களும், பிரதான காரணமாகும். ஆயினும், வரையறுக்கப்பட்டவகையிற் சில இராணுவ நடவடிக்கைகளை அரசுப்படைகள் மேற்கொள்ளும் சாத்தியங்களுமுண்டு.

சிங்கள அரசின் படைப்பலத்திற் பெரும்பகுதி, இப்போது, குடாநாட்டிற்குள்ளேயே குவிந்துகிடக்கின்றது. குடாநாடு பெரும்பாலும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்ட இன்றைய நிலையில், அங்கிருந்து கணிசமான துருப்பினரை வாபஸ் வாங்கி – அவர்களைப் பயன்படுத்தி, வன்னியிற் பாரிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற கணிப்புச் சிங்கள அரசிடம் நிச்சயம் இருக்கும். ஆயினும், குடாநாட்டிற்குள் பரவலான முறையில் கொரில்லாத் தாக்குதல்களைப் புலிகள் ஆரம்பித்துவிட்டனர். அத்துடன், 'சிவில்' நிருவாகம் என்ற பெயரில் இராணுவ நிருவாகத்தை நடாத்த வேண்டிய அவசியம் அரசுக்கு எழுந்துள்ளது. இதன் மூலமே, குடாநாட்டு இராணுவத்தின் தேவைகளையும் போராட்டத்தை நசுக்கும் நோக்குடனான சதிகளையும் சந்திரிகா அரசு, மேற்கொள்ளமுனையும். இத்தகைய யதார்த்தசூழல் காரணமாக, வன்னியிற் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அரசின் விருப்பை நிறைவேற்றப் படையினருக்குச் சந்தர்ப்பங்கள் இல்லாது போகின்றன.

**குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக அரசுப் படைகள் கிழக்கைக் கைவிட்டன. வன்னிப் பெருநிலப்பரப்பைக் கைப்பற்ற அவை எதைக் கைவிடப்போகின்றன.**




வன்னிப் பெருநிலப்பரப்பின் மீது – சிங்களப் படைகள் – நடாத்தவிரும்பும் இராணுவ நடவடிக்கைகள் சிலவேளை, தோல்விகளைத் தழுவலாம். அல்லது, குறித்த சில நிலப்பரப்புக்கள் எதிரியின் பிடிக்குட் செல்லலாம். இன்றைய நெருக்கடியான நிலையில் இவைபற்றி முன்கூட்டியே கூறுவது கடினம். ஆயினும், வன்னியைப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாத பணி எம் அனைவர் முன்னும் உள்ளது. ✷

---

## பேரழிவு மிக்க யுத்த நெருக்கடிக்குள் சிங்களம் சிக்கப்போகிறது !

# பெரும் கெரில்லாப்போர் அரங்காக குடாநாட்டை மாற்றப் புலிகள் திட்டம் !

### நுட்பமான தந்திரோபாயங்களோடு களத்தில் அதிரடி அணிகள்

**பெருமெடுப்பில் படைகள் நகர்த்தப்பட்ட மரபு வழிச் சமரின் வாயிலாகக் குடாநாட்டைக் கைப்பற்றுவதில் சிங்களப் படை தற்காலிக வெற்றியைப் பெற்றிருக்கிறது.**

**அதனைத் தொடர்ந்து சந்திரிகா – ரத்வத்த அரசானது, யாழ்ப்பாணத்தின் பொது நிர்வாகத்தைப் படைத்துறையின் கைகளில் ஒப்படைத்திருக்கிறது.**

**ஆனால் இவ்வேளையில் –**

**குடாநாட்டில் சிங்களப் படையை முறியடிப்பதன் மூலம், தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான சிங்களத்தின் பேரினவாதப் போரையே வென்றிடும் மூலோபாயத்தைப் புலிகள் செயற்படுத்தவுள்ளனர்.**

**அதற்கான போர்முறைத் திட்டத்தைப் புலிகள் வரைந்துவிட்டனர்.**

**எதிரிக்குப் பேரழிவுகளைக் கொடுக்கும் வகையில் அதிரடித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி – கெரில்லாப் போரைக் குடாநாட்டில் விரிவுபடுத்தி – சிங்களப் படையின் போரிடும் வல்லமையை உடைத்தெறியும் தந்திரோபாயத் திட்டங்களோடு புலிகளின் போரணிகள் தயாராகிவிட்டன.**

யாழ்ப்பாணக் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான தொடர் நடவடிக்கைப் போர்த்திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்த சிங்கள அரசாங்கம், 'சூரியப் பிரகாசம்' படையெடுப்புக்களை நடாத்தி முடித்துவிட்டது.

நீண்ட பெரும் மரபுவழிச் சமரில் ஈடுபடக் கூடிய வளங்கள் பற்றாக்குறையான நிலையில், குடாநாட்டைத் தற்காலிகமாக விட்டுக் கொடுக்க வேண்டியது, புலிகளுக்குத் தவிர்க்க முடியாததாகிப் போனது.

மிகப்பெரிய ஆட்பல, மற்றும் படைபல வளங்களுடன் நடவடிக்கையை ஆரம்பித்த எதிரிப் படைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதென்பது, வளர்ச்சியடைந்து வரும் – மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளையே கொண்ட – புலிகள் போன்ற ஒரு விடுதலை இயக்கத்திற்கு நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு காரியம்தான்.

அத்தகைய ஒரு அமைப்புக்கு, மரபுவழி நேரடிச் சமரின் பொருது களம் சாதகத் தன்மைகளைக் கொண்டதாக அமையாது என்பதால் –

அது நிலங்களை விட்டு விலகித் தற்காலிகமாகப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பது, ஒரு உலகறிந்த இராணுவ உண்மை.

குடநாட்டுப் படையெடுப்பு நடந்து முடிந்துவிட்ட நிலையில், இப்போது, வன்னிப் பெருநிலம் மீதான படையெடுப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்பு, மிக விரைவிலேயே – வன்னிப் படையெடுப்பிற்கான முயற்சியைச் சிங்களப்படைகள் மேற்கொள்ளலாம் என ஊகிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட குடாநாட்டில் நிறுத்துவதற்கெனப் புதிதாகப் 15,000 பேர் படையில் துரிதமாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் –

குடாநாட்டில் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதற்காக முன்னாள் படைத்தளபதிகள் மீண்டும் சேவைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர் எனவும் –

கடந்த மே மாதம் 29ஆம் திகதி நடந்த செய்தியாளர் சந்திப்பில் லெப். ஜெனரல் றொகான் தலுவத்த அறிவித்ததிலிருந்தே, வன்னிப் படையெடுப்புக்குச் சிங்களப் படைகள் தயாராகி வருகின்றன என்பதை ஊகித்து அறிய முடிகின்றது.

குடநாட்டிற்குள் தற்போது பரவலாக நிலைகொண்டிருக்கும் தனது முன்னணித் தாக்குதற் படைப்பிரிவுகளை அங்கிருந்து விலக்கி எடுத்து, வன்னிச் சமரில் ஈடுபடுத்துவதற்காகவே –

அதற்கு மாற்றீடாகப் பழைய தளபதிகளையும், புதிய சிப்பாய்களையும் திரட்டிக் குடாநாட்டிற்குள் நிறுத்தும் திட்டத்தை அரசு துரிதமாக நடைமுறைப்படுத்த முயல்கின்றது.

விடுதலைப் போராட்டத்தின் செயற்பாட்டு மையமாகவும், புலிகள் இயக்கத்தின் பின்னணித் தளப்பிரதேசமாகவும் வன்னிப் பிராந்தியமே இப்போது விளங்குவதால் –

புலிகளையும், அதன் மூலம் போராட்டத்தையும் செயலிழக்கச் செய்யும் நோக்கத்தை அடைவதற்காக வன்னிப் படையெடுப்பை நிகழ்த்தி, போரைப் புலிகளின் வாசற் படிகளுக்குக் கொண்டு செல்லச் சிங்களத் தளபதிகள் தயார்படுகின்ற வேளையில் –

குடாநாட்டிற்குள் கெரில்லாப் போர் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, சிங்களப் படையினரின் நடுக்கூடங்களுக்கு உள்ளேயே பெரும் போர்க்களங்களை உருவாக்கும் தந்திரோபாயத் திட்டங்களுடன் புலிகளின் போரணிகள் தயாராகிவிட்டன.

எதிரி அகலக் கால் வைத்துப் பரவியுள்ள இராணுவச் சாதக நிலையைத் திறம்படப் பயன்படுத்தி, அதிரடித் தாக்குதல்களைத் தீவிரமாக்கி – எதிரிக்குப் பேரழிவைக் கொடுத்து – அவனது உயிரிழப்பு எண்ணிக்கையை ஆச்சரியப்படத்தக்க வகையில் அதிகரிக்கச் செய்து, தமிழர்களுக்கு எதிரான போரின் அடுத்தகட்டம் பற்றிச் சிந்திக்கவே முடியாத நீண்டபோர் நெருக்கடிக்குள் சிக்கவைத்துச் சிங்களப்படையைப் புலிகள் திணரடிப்பர்.

குடாநாட்டு மக்களின் பேராதரவுடன் – உற்ற துணையுடன் யாழ்ப்பாணக் களத்தில் புலிகள் – அறிமுகப்படுத்தவுள்ள புதிய போர்முறைத் திட்டத்தின் நடைமுறை விளைவாக – குடாநாட்டின் ஆளுகை அதிகாரத்தைப் படைகளிடம் ஒப்படைத்து – சந்திரிகா அரசாங்கம் அங்கு நிறுவத் திட்டமிட்டுள்ள இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை அடியோடு சீர்குலைத்துவிட முடியும் என்பது மட்டுமன்றி –

குடாநாட்டில் சிங்களப் படையின் உறுதியான நிலைப்படுத்தலைத் தடுத்து நிறுத்துவதனூடாகப் போராட்டத்தின் பின்னணித் தளப்பிராந்தியமான வன்னியையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பின்னணித் தளப்பிராந்தியமாகப் பாதுகாக்கப்படும் வன்னிப் பிரதேசத்தில் உறுதியாகக் காலூன்றி நின்று, சிங்கள அரசாங்கத்தை முழுமையாகவே நிலைகுலையச் செய்வதற்கான நாடு தழுவிய போராட்டத்தை அங்கிருந்தே நெறிப்படுத்துவதுடன் –

சிங்கள தேசத்துப் படைபலத்தின் பெரும்பான்மை குவிக்கப்பட்டுள்ள குடாநாட்டுக்குள்ளேயே சிங்களப்படைகளை, பேரழிவைக் கொடுத்து – முறியடிப்பதன் மூலமாக, தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான சிங்களப் பேரினவாதத்தின் போரிடும் வல்லமையையும் புலிகள் நிரந்தரமாகவே உடைத்தெறிவர்.

தமிழினத்தின் சுபீட்சத்துக்கான ஆயுதப் புரட்சியானது, இன்றைய வரலாற்றுக் காலகட்டத்திலிருந்து, புதிய தந்திரோபாயங்களுடு – புதிய வழிமுறைகளுடு – இனிப்புதிய பரிமாணங்களில் விரியும். ✦

# வன்னிப் படையெடுப்பு : நடைபெறப் போவது என்ன ?

**வன்னியில்** என்ன நடக்கப்போகின்றது? என்பதுதான் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் அனைத்து மக்களினதும் இன்றைய வினாவாகும்.

வன்னிக்குள்ளும்
இராணுவம் புகுமா?
குடாநாட்டைப்போல
வன்னியையும்
இராணுவம் ஆக்கிரமிக்குமா?
அவ்விதம் நிகழ்ந்தால்
மக்களாகிய எங்களது
நிலை என்ன?

.......என்பனபோன்ற சில கேள்விகளுக்கு விடையறிய மக்கள் ஆவலுடன் இருக்கின்றனர்.

இந்த வினாக்களுக்கு நேரடியாக 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிப்பது சரியான முறையாக அமையாது.

எனவே, வடதமிழீழத்தின் புவியியல் அமைப்பு மற்றும் போராட்டத்தின் பலம், எதிரியின் பலவீனமான அம்சங்கள் என்பவற்றை எடுத்து விளக்குவதன்மூலம் - மக்களுக்குத் தெளிவான கருத்துக்கள் போய்ச்சேர உதவமுடியும்.

போர் நடைபெறும் நிலத்தினது புவியியல் அமைப்புப் போரின் போக்கைத் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக இருக்கின்றது. இந்தவகையில், வன்னியின் பூகோளநிலை தமிழர் படைக்குச் சாதகமானதாகவே உள்ளது.

வடதமிழீழத்தின் நில அமைப்பு இருவேறு யதார்த்தங்களைக் கொண்டுள்ளது.

ஒன்று,
குடாநாடும் அதன்
புவியியல் அமைவிடமும் -

இரண்டு,
வன்னியும் அதன்
தரை அமைப்பும்.

குடாநாடு ஏறக்குறைய ஒரு தீவைப்போன்றே உள்ளது. இந்தத் தீவிற்குள், கடல் நீரேரி சில தீவுகளை உருவாக்கி வைத்திருக்கின்றது. குடாநாட்டின் இந்தத் தரை அமைப்பு மரபுவழிப் போரைப் பொறுத்தவகையில் - ஒருபுறம், சாதகமான அம்சங்களையும் மறுபுறம், பாதகமான அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றது.

இத்தகைய தரை அமைப்பைக் கொண்ட புவியியற் பிரதேசத்தில், மரபுவழிப்போரில் ஈடுபடும் படைகளின் வெற்றிக்கு இரண்டு விடயங்கள் மிகமிகப் பிரதானமாகத் தேவைப்படுகின்றன. ஒன்று, கடற்பலம். இரண்டு, படைக்கலச் சக்திப்பலம் (Fire power).

இந்த இரண்டு விடயங்களிலும் அல்லது, இரண்டில் ஒன்றில் தன்னும் ஒரு படை பலவீனமாக இருக்குமானால், போரை வெல்வது என்பது அதற்குக் கடினமானதாக இருக்கும்.

குடாநாட்டுப் போரிற் தமிழர்படை சந்தித்த இராணுவப் பின்னடைவை இதன் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் நிலயதார்த்தம் குடாநாட்டைப் போல - சிக்கலுக்குரியது அல்ல. **வன்னி, 8885 ச.கி. மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்ட ஒரு பாரிய - தொடரான நிலப்பரப்பாகும். சிங்களப் படையின் 'கைப்பற்றும் சக்தி' க்கு அப்பாற்பட்டதாக வன்னியின் நிலவிஸ்தீரணம் உள்ளது.**

அத்துடன், குடாநாட்டில் இருந்ததைப்போல ஆட்சி அலகுகள் மற்றும், மக்கள் செறிவு ஒரு குறித்த பகுதியில் குவிந்திருக்கவில்லை. அதுபோல, வன்னியின் நிலவளமும் ஒரு குறித்த வட்டாரத்திற்குள் ஒடுங்கிவிடவில்லை.

அதாவது, வன்னியைப் பொறுத்தவரையில், அதன் உயிர்மையம் என்பது, குடாநாட்டைப்போல, ஒருபகுதியில் புதைந்து கிடக்கவில்லை.

மக்கள் நிச்சயம் எதிர்பார்க்க வேண்டும். அவ்விதம் செய்யும்படி அரசை நிர்ப்பந்திக்கப் பல்வேறு காரணிகள் உண்டு.

**ஒன்று:**
குடாநாட்டுப் படைக்கான ஒரு விநியோகப் பாதையைத் திறக்க வன்னியில் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையில் இறங்கவேண்டிய அவசியம் உண்டு.

> வன்னி, 8885 சதுரகிலோ மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்ட ஒரு பாரிய - தொடரான நிலப்பரப்பாகும். சிங்களப் படையின் 'கைப்பற்றும் சக்திக்கு" அப்பாற்பட்டதாக வன்னியின் நிலவிஸ்தீரணம் உள்ளது.

வன்னியின் ஒரு பகுதிக்குள் புகுந்து போராட்டத்தின் உயிர்மையத்தை விரட்டுவதென்பது, சிங்களப்படையால் இயலாதது. இது - வன்னிநிலப்பரப்பிற்கு இருக்கின்ற சாதகத்தன்மைகளில் ஒன்றாகும்.

'சூரியப் பிரகாசம்-1' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் வன்னியில் (இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதிகளில்) ஏறக்குறைய 3 அல்லது மூன்றரை இலட்சம் மக்கள் வசித்துவந்தனர். குடாநாட்டுச் சமரின் விளைவாக 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வன்னி வந்து சேர்ந்தனர்.

இப்போது, வன்னிப்பெருநிலப்பரப்பிற் சுமார் 6 அல்லது 7 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். குடாநாட்டில், தற்போது, 4 அல்லது 5 இலட்சம் மக்களே வசிக்கின்றனர். இந்தவகையில், சிங்களப் **படையின் ஆக்கிரமிப்பிற்குள், தற்போது குடாநாட்டில் உள்ள மக்கள் தொகையைவிட வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகளவு மக்கள் வசிக்கின்றனர்.** இது போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் ஒரு புதியவிடயம் என்பது கவனிக்கத்தக்கது.

போராட்டத்தின் தற்போதைய மையமாக வன்னிப் பெருநிலப்பரப்புத் திகழ்கின்றது. வன்னியைத் தளப்பிரதேசமாகக் கொண்டு போராட்டத்தை முன்னெடுக்கப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது. இதுவரை நாளும் 1035 சதுரக்கிலோ மீற்றரைக் கொண்ட குடாநாட்டிற்குள் நிலைகொண்டிருந்த போராட்ட மையம், இப்போது 8885 சதுரக்கிலோ மீற்றர்களைக் கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இடம்மாறி உள்ளது.

குடாநாட்டில் இருந்த போராட்ட மையத்தைத் தகர்க்கத் தனது பலத்தை ஒருங்குதிரட்டிப் பயன்படுத்தியது போல - வன்னியிற் செய்வது - அரசுக்கு முடியாத ஒன்றாகும். **என்னதான் முயன்றாலும்கூட வன்னித்தளப் பிரதேசத்தைப் புலிகள் இயக்கத்திடமிருந்து அபகரிக்கச் சிங்களப் படைகளால் இயலாது.**

ஆயினும், வன்னிப் பெருநிலப்பரப்பு மீது இராணுவ நடவடிக்கைகளை அரசு செய்ய முயற்சி செய்யும் என்பதை எமது

**இரண்டு:**
புலிகள் இயக்கத்தின் இராணுவபலத்தைச் சிதைப்பதற்காகவும் வன்னியில் ஒரு படையெடுப்பை நிகழ்த்த அரசு விரும்பும்.

**மூன்று:**
தனது நிருவாகத்தை வன்னி மண்ணிலும் புகுத்தும் எண்ணத்துடன் சில இராணுவ நடவடிக்கைகளை அரசுப்படைகள் மேற்கொள்ள முனையலாம்.

இவ்விதம், வன்னி மீதான படையெடுப்பிற்கு அரசைப் பொறுத்தளவிற் பல்வேறு அத்தியாவசியக் காரணிகள் இருக்கின்ற போதிலும், பெரிய அளவிலான படையெடுப்புக்களை நடாத்தக்கூடிய நிலையிற் சிங்களப் படையினர் உள்ளனரா? என்ற கேள்வியை எழுப்பி விடைதேட முயல்வது சிறந்தது.

வன்னியைப் படையினர் கைப்பற்றுவார்களா? என்ற கேள்விக்கு விடைகாணமுன்னர்

குடாநாட்டைப் படையினர் எங்ஙனம் கைப்பற்றினர் என்ற கேள்விக்கு விடைகாண்பது சிறந்தது.

குடாநாட்டைக் கைப்பற்றச் சிங்களப் படைகள் கிழக்கைக் கைவிட்டன என்பதுதான், உண்மை நிலையாகும்.

அதன் மூலமே, தேவையான துருப்புக்களையும் வேண்டிய படைக்கலங்களையும் அரசுப்படைகள் ஒன்று சேர்த்தன. ஒன்று சேர்க்கப்பட்ட அந்தப் படைப்பலந்தான் குடாநாட்டைக் கைப்பற்றியது. இந்த உண்மையை எவரும் மறுக்க மாட்டார்கள்.


புலிகள் இயக்கத்தின் இராணுவப் பலம் காரணமாகவும், அரசுப் படைகளின் இயலாமை காரணமாகவும் அதுவா? இதுவா? என்ற தேர்வுநிலைக்கு அரசுப்படைகள் செல்வது தவிர்க்க முடியாதது.

கிழக்கை விடக் குடாநாடு முக்கியம் என்று சந்திரிகா - ரத்வத்த அரசு உறுதியாக நம்பியதன் விளைவு,

தொடர்ச்சி 4 ம் பக்கம்..




என்னதான் முயன்றாலும்கூட வன்னித்தளப் பிரதேச த்தைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து அபகரிக்கச், சிங்களப்படைகளால் முடியாது.



# சிங்கள இனவாதத்திற்கு ஒரு மறுப்பு

## (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இலங்கை முதலில் தென்னிந்தியாவின் தொடர் நிலப்பரப்பாக இருந்துள்ளது என்பதை, கல்லுருவவியல் ஆய்வுகள் நிரூபிக்கின்றன. காலகதியில் பாக்கு நீரிணையால் இலங்கை இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு தீவாகியது. தீவாக முன்பு தென்னிந்தியாவில் வாழ்ந்த அதே மக்கள் கூட்டமோ அல்லது தீவான பின்பு தென்னிந்தியாவில் இருந்து வந்து குடியேறிய மக்கள் கூட்டமோதான் இலங்கைத் தீவின் மனிதவாழ்விற்கான மூலக்கூறாகும்.

எவ்வாறாயினும், தென்னிந்தியாவில் நிலவிய பெருங்கற் பண்பாடு மக்கள் கூட்டமும் பண்பாடும் போல, கி.மு. ஆயிரமாம் ஆண்டளவில் இலங்கையிலும் நிலவியது. பெருங்கற் பண்பாட்டைக் கொண்டிருந்த திராவிடப் பண்பாட்டு மக்களில் இருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஈழத்தமிழ், சிங்கள–பௌத்தம் எனும் பல கிளைப் பண்பாட்டுப் பிரிவுகள் தோன்றின.

> தேசியவாதம் எனும் நவீன பதத்திற்குச் சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் பதம் "ஜாதி வாதய" என்பதாகும். சிங்களத்தில் "ஜாதி வாதய" என்ற பதத்திற்கு – இருக்கும் வரலாற்றுக் கலாச்சாரப் பொருள் என்னவெனில், சிங்கள இனவாதம் என்பதேயாகும்.அதாவது, ஓரினத்தன்மை வாதமாகும்.

இவை காலகதியில் தனித்தனித் தேசிய இனங்களாய் விருத்தியடைந்தன.

கிறிஸ்துவிற்கு முற்பட்ட சகாப்தத்தில், பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட திராவிடப் பண்பாட்டு மக்கள், இலங்கைத்தீவின் பல பாகங்களிலும் வாழ்ந்து வந்தனர். கி.மு மூன்றாம் நூற்றாண்டளவில் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் பௌத்தம் அரசவை மதமாகப் பரவத் தொடங்கியது. தேரவாத பௌத்தம், மகாயான பௌத்தம் எனப் பௌத்தத்தில் பெரும் பிளவு இந்தியாவில் ஏற்பட்டு, தென்னிந்தியாவிற்கு ஊடாக அப்பிளவு இலங்கைக்கும்

**- மு. திருநாவுக்கரசு**

பரவத் தொடங்கியது. தென்னிந்தியத் தமிழ்ப் பிக்குவினால், மன்னன் மகாசேனன் மகாயான பிரிவிற்கு மாற்றப்படக்கூடிய அளவிற்கு, மகாயானம் செல்வாக்குச் செலுத்தத்தொடங்கியது. தென்னிந்தியாவிற்கு அருகே இருந்த இலங்கையின் வடபகுதியிலும், பௌத்தம் அருகியது: ஆனால் வடமத்திக்கு அப்பால், சூழல் காரணமாகவும் பௌத்தம், பாளி, வடமொழி ஆகியவற்றின் நெருங்கிய தொடர்பு காரணமாகவும், பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டத்தின் மத்தியில் சிங்களம் எனும் மொழி கிளைவிட்டது. இலங்கைத்தீவின் பெருங்கற் பண்பாட்டு மக்களில் மறு தொகுதியினரிடையில், வட இந்திய பிராமணிய மதம் செல்வாக்குப் பெற்றது. ஒரே பொதுப் பண்பாட்டைக் கொண்டிருந்த ஒரே மக்கள் கூட்டத்தின்மீது, இரு மதப்பிரிவுகளும் வேறுபட்ட புவியியல் மற்றும் அரசியற்காரணிகளும் செல்வாக்குச் செலுத்தியதன் தொடர்விளைவாக ஈழத்தமிழ், சிங்களம் எனும் இரு தனித்துவமான பண்பாட்டினங்கள் உருப்பெற நேர்ந்தது. இப்போதைய வளர்ச்சி நிலையில், இப்பிரச்சினையினை வெறும் மதக் கண்ணோட்டத்துடன் பாராது, மானிடவியற் கண்ணோட்டத்திலேயே புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு புரியுமிடத்து, இவற்றினை மானிடவியல் அடிப்படையில் தனிப்பண்பாட்டினங்களாக அங்கீகரிக்க வேண்டும்.

தென்னிந்தியாவிற்கூடாக மகாயான பௌத்தம் இலங்கைக்கு வந்ததுபோல, பின்பு தென்னிந்தியாவில் பௌத்தம் முற்றிலும், அருகியமையால் அவ்வாறே தென்னிந்தியாவிற்கூடாக இலங்கையிலும் பௌத்தம் அருகிவிடும் என்ற அச்சம் இலங்கை மகாசங்கத்தினரிடம் ஏற்படவே, பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்கான ஓர் அரணாகத் தென்னிந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு எனும் சித்தாந்தத்தை மகாசங்கத்தினர் உருவாக்கினர். அரசர்களுக்கும் இது சாதகமாயிருந்ததால், அரசர்களும் மகாசங்கத்தினரும் இதில் ஒன்று கலந்தனர். மகாயான–தேரவாத பிரச்சினையிலிருந்த இத்தகைய பிளவு, தெளிவான ஒரு எல்லைக்கோட்டை உருவாக்கத் துணைபுரிந்தது. தற்போது இலங்கையில் தேரவாத பௌத்தம் நிலவுவதாகப் பெயரளவிற்குச் சொல்லிக்கொண்டாலும், நடைமுறையில் மகாயான பௌத்தமே நிலவுகின்றது.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இனப்பண்பாட்டு அர்த்தத்தில் ஒரே மூலக்கூறைக் கொண்டவர்கள். சிங்கள மக்களிடம் பெருங்கற் பண்பாட்டின் ஆழமான தொடர்ச்சியை இன்றும் தெளிவாகக் காணலாம். கிராமிய வழிப்பாட்டு முறைகள், சிறுதெய்வ வழிபாடுகள், 'கப்புறாள' முறை, கண்ணகி வழிபாடு, மற்றும் வாழ்க்கைமுறை என்பவற்றிலெல்லாம் இத்தகைய பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சிகளைக் காணலாம். **கணனாத் ஒபயசேகரா** எழுதிய Padhini Cult எனும் நூலில் இவற்றிற்கான சான்றுகளை அவதானிக்காலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள 'கப்புறாள' போல தமிழில் பிராமணரல்லாத பூசகர் உண்டு. துவாய் கட்டிப் பூசை செய்தல் இதில் ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தகைய பூசகர் முறையும், பூசை – படையல் முறையும் பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சியாகும்.

பெருங்கற் பண்பாட்டில் நிலவிய சிறப்பான தோல் வாத்தியமான 'பறை' வாசித்தல், தமிழில் இன்னும் கிராமியக் கோவில்களில் உண்டு. ஆனால், நகர்ப்புறங்களில் இது அருகிவிட்டது. அதேவேளை, சிங்கள மக்கள் மத்தியில் இத்தகைய பறைதான் மெருகுபெற்று, கிராமத்திலிருந்து அரசவைபவங்கள் வரை வாசிக்கப்படும் கருவியாய் உள்ளது. சிங்கள மக்களின் கிராமிய வாழ்விலும் கிரிகைகளிலும் பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சிகளை நிறையவே காணலாம்.

இலங்கை தென்னிந்தியாவிற்கு மிக அருகில் ஒரு சிறு கடலால் மட்டும் பிரிக்கப்படுவதால், அக்கடலைக் கடந்து, காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவில் இருந்து அரசியல், மதம் மற்றும் பண்பாட்டுத் தாக்கங்களும் அவ்வப்போது மக்கள் வரவுகளும் ஏற்பட்டு வந்துள்ளன. இவ்வாறாக காலத்திற்குக்காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறும் வர்த்தகர்களும், படையெடுப்பாளரும், புலப்பெயர்ச்சியாளர்களும் தாம் குடியேறும் இடங்களிற்கேற்ப, அதாவது தமிழ்ப் பகுதிகளில் குடியேறுவோர் தமிழராயும், சிங்களப் பகுதிகளில் குடியேறுவோர் சிங்களவராயும் மாறிக்கொண்டனர். இன்று சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் "கறாவ", "துறாவ", "சலாகம" ஆகிய சாதிப் பிரிவினர் கி. பி. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிச் சிங்களவராய் மாறிய மக்களே என்று, வரலாற்றாய்வாளரான **மைக்கல் றொபேட்ஸ்** கூறுகின்றார். இவ்வாறே நீர்கொழும்பில் வாழும் சிங்களவர், கண்ணுக்கு எட்டிய காலத்தில் சிங்களவராய் மாறிய தமிழராவார். சிங்களவர் பிரத்தியேகமான இன மென்பதையோ, தமிழர் மீதான சிங்களவரின் இன வன்மத்தையோ நிராகரிக்க இந்த வரலாற்றுண்மை உதவும். பழைய மகாயன–தேரவாத பிரச்சினைகளுக்கூடாக இன்றைய நவீன தமிழரைச் சிங்களவர் அணுகக் கூடாது. ஈழத் தமிழர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வேரை ஈழமண்ணில் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்களவருக்கு எப்படி இலங்கைத்தீவின் ஒருபகுதி சொந்தமோ, அப்படியே தமிழருக்கும் இலங்கைத்தீவின் ஒருபகுதி சொந்தமாகும்.

சிங்கள–பௌத்தத்திற்குத் தமிழரால் அச்சுறுத்தல் என்று சிங்கள பௌத்தவாதிகள் கூறுவதற்குப் பதிலாக பௌத்தம், பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றின் கூட்டுச்சேர்வால் ஒருபகுதி தமிழர், சிங்கள பௌத்தராய் மாறிவிட்டனர் என்றும், எனவே மூலத் தமிழ் மக்களைப் பௌத்தம், பாளி, சமஸ்கிருதம் என்பன ஆக்கிரமித்ததன் விளைவே இன்றைய சிங்கள – பௌத்தம் என்றும் கூறிக்கவலைப்படும், திராவிடவாதக் கண்ணோட்டம் கொண்டோரும் உளர்.

தென்னிந்தியாவிலிருந்து வந்த மன்னர்களின் படையெடுப்புக்களை வைத்துக்கொண்டு ஈழத் தமிழருக்கு எதிரான வாதங்களை முன் வைப்பது, முற்றிலும் தவறானது. பண்டைய வரலாற்றில் ஒரு மன்னனுக்கு எதிராக இன்னொரு மன்னன் படையெடுப்பது இயல்பு. அதில் தமிழர், சிங்களவர் என்றோ இந்து, பௌத்தர் என்றோ அண்ணன், தம்பி என்றோ வேறுபாடில்லை. தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் படையெடுத்தனர். சகோதரர்களான சிங்கள மன்னர்களிற் பலர், ஒருவருக்கு எதிராக இன்னொருவர் படையெடுத்தனர். உண்மை இவ்வாறிருக்கையில், தென்னிந்திய தமிழ் மன்னர்களின் பழைய படையெடுப்புக்களை வைத்துக்கொண்டு, ஈழத் தமிழ் மக்களை எதிரிகளாக வர்ணிப்பது தவறு.



**பேரினவாதத் திமிர்**

கி. பி. 10ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சோழப் படையெடுப்பு, சிங்கள–பௌத்த இராஜதானியை அனுராதபுரத்தில் இருந்து பொலநறுவைக்கு மாற்றியது உண்மை. ஆனால் அப்படையெடுப்பானது, வடக்கில் கந்தரோடையைத் தலைநகராகக்கொண்டு எழுந்த கதிரமலை அரசை அப்படியே கபளீகரம் செய்து கொண்டது. இங்கு சிங்களவரைப் பொறுத்தவரையில், சோழப் படையெடுப்பால் தலைநகரம் இடம் மாறியதுதான்

> இரு குழுக்களுக்கு இடையே பிணக்கேற்பட்ட போது, ஒரு குழுவை ஆற்றிற்கு அப்பாலும் மறு குழுவை ஆற்றுக்கு இப்பாலும் தனித்தனியே பிரிந்து வாழுமாறு புத்தபகவான் தீர்ப்பளித்தார்.

நிகழ்ந்தது. ஆனால் தமிழரைப் பொறுத்தவரையில், அவர்களது அரசே சோழரால் விழுங்கப்பட்டுவிட்டது. எனவே, என்றோ யாரோ மேற்கொண்ட படையெடுப்புக்களுக்காக இன்று, ஈழத் தமிழரின் உரிமைகளைச் சிங்களவர் மறுப்பது மிகவும் அநீதியானது.

ஈழத் தமிழர் வந்தேறு குடிகள், படையெடுப்பாளர், அந்நியர் என்று சிங்களவரால் முன்வைக்கப்படும் வாதத்திற்கு வேறொரு இலகுவான பதிலையும் நோக்கலாம். மேற் கூறப்பட்டவாறுதான் தமிழர் இலங்கைக்கு வந்தனர் என்பதை வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம். அப்படியான தமிழர் கி. பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து அரசமைத்து (யாழ்ப்பாண இராச்சியம்) வாழ்ந்து வந்துள்ளனர். நவீன நிலைமையை உலகளாவிய ரீதியிற் பார்க்கும் போது, இடையிற் குடியேறிய மக்கள் கூட்டங்கள் பல அரசமைத்து, தேசிய இனங்களாயும் தேசிய அரசுகளாயும் வாழ்வதைக் காணலாம்.

கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பின்பு, மேற்காசியாவிலிருந்து இந்திய உபகண்டத்துள் படையெடுப்பாளராய் வந்து குடியேறிய இஸ்லாமியர் இன்று, பாகிஸ்தான் எனும் புதியதோர் அரசமைத்து வாழ்வதைக் காணலாம். அதேபோல், கி. பி. 15ஆம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவிலிருந்து படையெடுப்பாளராய் அமெரிக்கா, கனடா மற்றும் லத்தீன்

அமெரிக்கப்பகுதிகளிற் குடியேறிய ஐரோப்பியர், அங்கெல்லாம் அரசமைத்து வாழ்கின்றனர். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றனவும் இவ்வாறு குடியேற்றங்களால் உருவாக்கப்பட்ட அரசுகளே. இவ்வாறு 15ஆம் நூற்றாண்டின் பின்பு படையெடுப்பாளராய் அமெரிக்காவுக்குள் குடியேறிய தமிழீழக் கோரிக்கையும் அதற்கான ஆயுதப் போராட்டமுமாகும்.

சிங்கள ஆட்சியாளரின் தொடர்ச்சியான – பல்வேறு வகையான பாதிப்புக்களினாலும் தமிழர் மனமுடைந்தனர்.

தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டமிட்ட

சந்திரிகா 'புதிய இனவாதி" யும் (neo chauvinist) 'புதிய பயங்கரவாதி" யும் (neo terrorist) ஆவார். இவரது சமாதானம் பற்றிய பேச்சென்பது, சாத்தான் ஓதும் வேதம் போன்றது. உலகில் நவீன வளர்ச்சி நிலைகளைக் கருத்திற்கொண்டு அவற்கு ஏற்றாற் போல் இனவாதத்தை நவீனப்படுத்தியவராகச் சந்திரிகா உள்ளார்.

ஐரோப்பியர் அரசமைத்து இன்று, ஏகப் பெரும் வல்லரசாய் இருக்க முடியுமென்றால், ஈழத் தமிழர் ஏன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியாது?

கனடாவில் உள்ள ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் அத்தேசத்தின் இணையான ஸ்தாபகர்கள் (Co-Founders of a new nation) என்று அழைக்கப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் ஈழத் தமிழரும் சிங்களவரும் இத்தீவின் இணை உரிமையாளர்(Co-owners) என்பதே சரியானது. இதன்படி இன்று ஈழத் தமிழர் பெரும்பான்மையாக வாழும் இலங்கைத்தீவின் வடக்கு–கிழக்குப் பிரதேசம் தமிழினத்திற்கு உரிமையான பிரதேசம். சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் சிங்களவருக்கு உரிமையான பிரதேசம்.

நவீன நடைமுறையில் ஓரினத்தன்மை கொண்ட அரசுகள் என்பதைவிட, பல்லினத்தன்மை கொண்ட அரசுகளே (Multi-nation states) உலகில் 90 வீதத்திற்குமேல் உள்ளன. இத்தகைய பல்லினத் தன்மைகொண்ட யதார்த்தத்தைச் சிங்களவர் ஏற்காததன் விளைவே, இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினையாகும்.

தேசியவாதம் எனும் நவீன பதத்திற்குச் சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் பதம் "ஜாதி வாதய" என்பதாகும். சிங்களத்தில் "ஜாதி வாதய" என்ற பதத்திற்கு–இருக்கும் வரலாற்றுக் கலாச்சாரப் பொருள் என்னவெனில், சிங்கள இனவாதம் என்பதேயாகும்: அதாவது, ஓரினத்தன்மை வாதமாகும்.

ஏனைய இனங்களின் உரிமைகளையும் தனித்துவங்களையும் மறுப்பதுதான், தேசிய வாதம் என்பதற்குச் சிங்களத்தில் உள்ள பொருளாகும்.

ஈழத் தமிழர் சிங்கள மக்களுடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் வாழும் தமது விருப்பத்தைத் தெளிவாகவே தெரிவித்திருந்தனர்: ஒற்றை ஆட்சி முறையின் கீழ்க்கூட, மொழியுரிமையுடன் வாழ விரும்பினர். அந்த மொழி உரிமையைச் சிங்கள ஆட்சியாளர் மறுத்தனர். நான்கு மொழிகளை உத்தியோக மொழிகளாகக் கொண்டு சுவிற்சர்லாந்து தேசம் வாழமுடியும் என்றால், இரு மொழிகளை உத்தியோக மொழிகளாகக்கொண்டு ஏன் இலங்கையில் ஐக்கிய தேசியவாதம் கட்டி எழுப்பப்பட்டிருக்கக்கூடாது? ஆனால் இதற்கு மாறாக, 1956ஆம் ஆண்டு, தனிச் சிங்களச் சட்டத்தைச் சிங்கள ஆட்சியாளர் புகுத்தி ஐக்கியத்திற்கு ஆப்பு வைத்தனர்.

சிங்களவரின் இத்தகைய போக்கு, சமஷ்டித் தீர்விற்கான கோரிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் வலுவாக்கியது. சமஷ்டி முறையை உருவாக்குவது நாட்டைத் தமிழருக்குப் பிரித்துக் கொடுப்பதற்குச் சமன் என்று, சிங்கள இனவாதிகள் வாதிடுகின்றனர். சமஷ்டி முறையின் கீழ்த்தான் பல்தேசிய இனங்கள் ஓர் அரச அமைப்பின்கீழ் ஐக்கியமாக வாழ்வதை, சிங்கள இனவாதிகள் ஏன் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்? சமஷ்டி முறையை மறுத்ததன் விளைவுதான் பிரிந்து செல்வதற்கான தனிநாட்டுக் கோரிக்கையாகும்.

ஓரினத்தன்மை கொண்டதாயினும் அரசு அளவாற் பெரியதாயின், நிர்வாக வசதிக்காகப் பிரதேச ரீதியாக சமஷ்டிமுறை உருவாக்கப்பட்டுள்ளதை உலகில் அவதானிக்கலாம். அதேவேளை, சிறிய அரசுகளாக இருப்பினும் பல்லினத்தன்மை கொண்டனவாயின், இனத் தனித்துவங்களைப் பேணுவதற்கும் இன முரண்பாடுகள் எழாது தவிர்ப்பதற்கும் சமஷ்டி முறை தோற்றுவிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். பல்தேசியவாதம் (Multi-nationalism). தேசியவாதத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். பல்தேசியவாதம் சரிவர இயங்குவதற்குச் சமஷ்டி முறை அவசியமாகும்.

முரண்பாடுகள் வலுத்தபோது சமஷ்டிக்கோரிக்கையைத் தவிர வேறு மாற்று வழிகள் தமிழருக்கு இருக்கவில்லை. தமிழர் நீண்டகாலமாக – தொடர்ந்து உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதுடன், சமஷ்டிக் கோரிக்கையும் மறுக்கப்பட்டதன் இறுதி விளைவே, சிங்களக் குடியேற்றங்கள், காலத்திற்குக் காலம் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்படும் இனப் படுகொலைகள், பொலிஸ் ஒடுக்குமுறை, இராணுவ ரீதியான தொடரிச்சியான இன அழிப்பு நடவடிக்கைகள், ஒன்று கூடும் உரிமை, கலாச்சார உரிமைகள், நடமாடும் உரிமை, குடியிருப்பு உரிமை, எண்ண வெளிப்பாட்டுரிமை, உயிர்வாழும் உரிமை, என்பன அனைத்தும் சிங்கள ஆட்சியாளராற் தடுக்கப்பட்டுள்ளதுடன், தமிழரின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பன எல்லாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கவும் பட்டுள்ளன. சிங்களவரால் தமிழர் பாரபட்சமாக எல்லாம் வகையிலும் நடத்தப்படுவதுடன், முற்றிலும் இரண்டாந்தரப் பிரஜைகளாய் ஒதுக்கப்படுகின்றனர். பாரிய இனப்படுகொலை, விமானக் குண்டுவீச்சு மற்றும் குண்டுவீச்சுத்தகர்ப்பு, தீவைப்பு, சொத்தழிப்பு, அவமானப்படுத்தப்படுதல் ஆகிய இவை அனைத்தினாலும் –இனியும் சிங்களவருடன் மத்தியில் இணைந்து வாழமுடியாது என்ற நிலைக்குத் தமிழர் வந்துவிட்டனர்.

நீண்டகால தொடர் ஒடுக்குமுறைகளின் விளைவாகத் தமிழரின் மனம் புண்பட்டு – இட்டு நிரப்பமுடியாத பிளவு வளர்ந்துள்ள சூழலில், கண்துடைப்பு "உரிமைகள்" எதனையும் இன்று அங்கீகரிக்கும் நிலையில் தமிழர் இல்லை.

இத்துணை பகைமை வளர்ச்சி அடைந்த பின்பு, தமிழரை மேலும் ஒடுக்குவதை உலக அரங்கில் நியாயப்படுத்துவதற்காக – கண்துடைப்பு நடவடிக்கையாக–தமிழும் "உத்தியோக மொழிகளுள்" ஒன்றாக இன்று ஆக்கப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் இது அவ்வாறில்லை. இதேபோல் எத்தகைய கண்துடைப்பு "உரிமைகளையும்" தமிழர் ஏற்க மாட்டார்கள். இவை எல்லாம் காலம் கடந்தவையும் பயனற்றவையும் மாகும். அமைதியாக வாழ்ந்த ஈழத் தமிழரை ஆயுதமேந்துமாறு சிங்கள அரசு நிர்ப்பந்தித்தது சிங்களப் பயங்கரவாதத்தின் விளைவே தமிழீழப் போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிங்கள அரசு "பயங்கரவாதம்" என வர்ணிக்கின்றது. சிங்களப் பயங்கரவாதத்தில் இருந்து தப்பிப்பதற்கும், தற்காத்துக்கொள்வதற்கும் தமிழர் போராடுகின்றனர். டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா என்போர் சிங்களப் பயங்கரவாதத்தின் முதலிரு தூண்களாவார்: ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் லலித் அத்துலத்முதலியும் இராணுவ ரீதியான பயங்கரவாதத்தின் மற்றிரு தூண்களாவார்: திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இந்தச் சிங்களப் பயங்கரவாதத்தின் கொடுமுடியாவார். ஏனைய சிங்களத் தலைவர்களும் இப் பயங்கரவாதத்தில் ஆங்காங்கே பங்குடையவராவர்.

சந்திரிகா 'புதிய இனவாதி' யும் (neo chauvinist) 'புதிய பயங்கரவாதி' யும் (neo terrorist) ஆவார். இவரது சமாதானம் பற்றிய பேச்சென்பது, சாத்தான் ஓதும் வேதம் போன்றது. உலகில் நவீன வளர்ச்சி நிலைகளைக் கருத்திற்கொண்டு அவற்கு ஏற்றாற் போல் இனவாதத்தை நவீனப்படுத்தியவராகச் சந்திரிகா உள்ளார். டி. பி. விஜேதுங்காவின் இனவாதத்தை விடவும், சந்திரிகாவின் புதிய இனவாதமும், புதிய பயங்கரவாதமும் மிகவும் கபடம் நிறைந்தவை – வேசம் மிக்கவை – ஆபத்தானவை.

சிங்கள இனவாதிகள் தமது ஒடுக்குமுறைக்குச் சாதகமான வகையில் சிங்கள மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் கருத்துக்களைப் பரப்புகின்றனர். தமிழர், சிங்களப் பகுதிகளில் குடியேறலாம்: அதேபோல் சிங்களவரும் தமிழ்ப் பகுதிகளில் குடியேற ஏன் தடைவேண்டும் என்று கேள்வி எழுப்புகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழரின் உதிரியான குடியேற்றம் வேறு: தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரின் திட்டமிட்ட அரச குடியேற்றம் வேறு என்பது ஒருபுறம் கவனிக்கத்தக்கது.

மறுபுறம், எண்ணிக்கையிற் சிறிய தமிழ் மக்கள் மத்தியில் எண்ணிக்கையிற் பெரிய சிங்கள இனம் குடியேறினால், சிறிய இனத்தின் இனப் பருமன்மாறி, அது இலகுவாகவே விழுங்கப்பட்டுவிடும்: அதேவேளை, பெரிய இனத்தின் மத்தியில் சிறிய இனம் குடியேறினால், பெரிய இனம் பாதிக்கப்படமாட்டாது. அதாவது, பெரிய மீனுக்கும் சின்ன மீனுக்கும் இடையில் யாராவது விரும்பியவர் விழுங்கலாம் என்று ஒரு பொதுவான சட்டம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். சட்டப்படி சிறியமீன் எப்படி முயன்றாலும் பெரிய மீனை விழுங்க முடியாது. ஆனால், பெரியமீன் சிறியமீனை ஒரு கணத்துள் விழுங்கிவிடும். எனவே, இதில் பொதுவான சட்டங்கள் என்பதல்ல பிரச்சினை: சிறிய இனத்துக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதே பிரச்சினையாகும்.

12% தமிழர் அதனை விடவும் பெரிய நிலப்பரப்பைத் தமது தாயகமாகக் கோருகின்றனர் என்றும், அதுவே அவர்களது அநீதியான போக்குக்குச் சான்று என்றும் சிங்கள இனவாதிகள் கூறுகின்றனர். தமிழர் தாம் வாழும்




## திமிருக்கு ஒரு பதில்!

தொடர்ச்சியான பிரதேசத்தைத்தான் தமது தாயகமாகக் கோருகின்றனர். இன விகிதாசாரமும், தாயகமும் எண்கணிதத்திற்குள் அடங்காது. உலகில் சிறியளவு சனத்தொகை விகிதத்தைக்கொண்டுள்ள அவுஸ்திரேலியரும், கனடியரும் சனத்தொகையாற் கூடிய நாடுகளது பிரதேச அளவை விடவும் பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டுள்ளன. அவரவர் வாழும் பிரதேசத்தை வைத்துக்கொண்டுதான் தாயகம் வரையறுக்கப்படுகிறது: சனத்தொகை விகிதத்திற்கும் பிரதேச அளவிற்கும் இதில் தொடர்பில்லை.

சிங்கள – பௌத்த இனவாதத்தின் சாராம்சம் இதுதான். அதாவது, ஈழத் தமிழர் சிங்கள – பௌத்தரால் இனம் மாற்றப்பட வேண்டும்(Policy of assimilation): அவ்வாறு இனம் மாறத் தவறினால், அவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதாகும். சந்திரிகா கூறும் "சமாதானம்", "போர்" என்பவற்றின் அர்த்தம் என்னவெனில் முதலாவதன் விளக்கம், சரணடைந்து இனம் மாறுதல்: இரண்டாவதன் விளக்கம், அப்படிச் சரணடைந்து இனம் மாறத் தவறினால் அழித்தொழித்தல் என்பது.

சிங்கள–பௌத்தர் தம்மிடமுள்ள இந்திய எதிர்ப்பைத் தமிழின எதிர்ப்பாய் உருவமைத்துள்ளனர்: இதனால், ஈழத் தமிழரை இனமாற்றம் செய்தல் அல்லது அழித்தொழித்தல் என்ற கொள்கையை வகுத்து க்கொண்டனர். பண்டைய – தவறான – வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இருந்து, நவீன வரலாற்றை இவர்கள் அணுகுகின்றனர். பொய்யானதும், குரூரம் நிறைந்ததுமான தமது ஐதீகக் கட்டுக்கதைகளுக்குத் தமிழரைப் பலியிடுகின்றனர். இரு குழுக்களுக்கு இடையே பிணக்கேற்பட்டபோது, ஒரு குழுவை ஆற்றிற்கு அப்பாலும் மறு குழுவை ஆற்றுக்கு இப்பாலும் தனித்தனியே பிரிந்து வாழுமாறு புத்தபகவான் தீர்ப்பளித்தார். **இட்டு நிரப்பப்பட முடியாத பகைமைக்கும் முரண்பாட்டிற்கும் மத்தியில், தமிழர் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை !**

# ஆடிக்காற்றில் அம்மிகள் (இந்தியா, கனடா)

# பறக்கும்போது குளவி (சிறிலங்கா) எம்மாத்திரம்?

மாதம் காதவழி போகும் தென்னாலிராமன் குதிரைபோல, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆமைவேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அரசியல் பரவலாக்கல் பொதியைப் பிரசவித்த துணை நிதி, நீதி அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்களே தெரிவுக்குழு நடவடிக்கையில் ஆர்வம் இல்லாது இருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், சனாதிபதி சந்திரிகாவின் அரசின் போக்கில் அதிருப்தியடைந்துள்ள நீதி அமைச்சர் பீரிஸ், தனது அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு, பழையபடி தனது முந்திய தொழிலுக்குப் போய்விட நினைப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகா பதவிக்கு வருமுன், "இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வல்ல, அரசியல் தீர்வுதான் சரியான மாற்றுவழி" என மேடைகளில் பேசிவந்தது போலவே, பேராசிரியர் பீரிசும் இராணுவத் தீர்வை எதிர்த்தும், அரசியல் தீர்வை ஆதரித்தும் பத்திரிகைகளில் எழுதிவந்தார்.

ஆனால், நாய்க்கு வேடம் போட்டால் குரைத்தே ஆகவேண்டும் என்பதற்கொப்ப, அமைச்சரான பின் நீதி அமைச்சர், சனாதிபதி சந்திரிகாவின் 'போர் மூலம் சமாதானம்' என்ற பல்லவிக்கு அனுபல்லவி, சரணம் பாடிவருகிறார்.

அண்மையில் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதிகளின் சங்கக் கூட்டம் இராணுவத் தலைமையகத்தில் நடந்தபோது, அதில் கலந்துகொண்டு சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினரின் முக்கிய பங்களிப்பை சிலாகித்து நீதி அமைச்சர் பீரிஸ் பேசியிருக்கிறார்.

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்திய அமைச்சர் பீரிஸ், வடக்கில் காணப்படும் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாகவே சிறிலங்கா அரசு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வந்தது எனப் பேசியிருக்கிறார்.

அதாவது, ஏனைய சிங்கள–பௌத்த இனவெறிபிடித்த அரசியல்வாதிகளைப் போலவே, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை அமைச்சர் பீரிஸ் பயங்கரவாதம் என்று இழிவுபடுத்துகிறார்.

மறைந்த பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் அடிக்கடி சொல்லும் வாக்கியம் "you scratch a Sinhalese politician and you will find a communalist" என்பதாகும்.

அதாவது, "ஒரு சிங்கள அரசியல்வாதியை ஊற்று நோக்கினால், அவர் ஒரு வகுப்புவாதியாக இருப்பதை நீங்கள் காணலாம்" என்பதாகும்.

பேராசிரியர் சுந்தரலிங்கம் அனுபவசாலி. பட்டுத்தெளிந்தவர். சோல்பரி அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தைத் தமிழர்கள் சார்பாக, டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் வர்த்தக அமைச்சராக இருந்தபோது ஆதரித்து வாக்களித்தவர். பின்பு சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டவர்.

எனவே, பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் மணிவாசகம் அனுபவத்தில் பிறந்தது என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் பீரிஸ் துணை நிதி, நீதி அமைச்சராக ஆட்சிக் கதிரையில் உட்கார்ந்தபின்புதான்,

## குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட நினைக்கும் நீதியமைச்சர்!

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் 'பயங்கரவாதம்' ஆக அவருக்குத் தெரிகிறது.

பயங்கரவாதத்தை இராணுவ பலம் மூலம் ஒழித்த பின்பே, அரசியல் தீர்வை அமுல்செய்யப்போவதாக அதே கூட்டத்தில் நீதியமைச்சர் பீரிஸ் திருவாய் மலர்ந்துள்ளார்.

தமிழினத்தின் பிரச்சினையை

> தமிழினத்தின் அடிப்படை உரிமைப் பிரச்சினையை அரசியல் அடிப்படையில் தீர்க்க மறுத்து தமிழினத்தின் நியாயமான, நீதியான போராட்டத்தை, அமைதியான போராட்டத்தை இராணுவ பலம் கொண்டு அடக்க முயற்சித்த காரணமாகவே பேராசிரியர் பீரிஸ் குறிப்பிடும் "பயங்கரவாதம்" தலையெடுத்தது.

அரசியல் அடிப்படையில் தீர்க்க மறுத்து, தமிழினத்தின் நியாயமான, நீதியான போராட்டத்தை, அமைதியான போராட்டத்தை இராணுவபலம் கொண்டு அடக்க முயற்சித்த காரணமாகவே பேராசிரியர் பீரிஸ் குறிப்பிடும் 'பயங்கரவாதம்' தலையெடுத்தது.

தமிழினத்தின் நியாயமான, நீதியான, அமைதிவழி அரசியல் போராட்டங்களுக்கு அதே அரசியல் அடிப்படையில் நியாயமாகவும், நீதியாகவும், சிறிலங்காவின் சிங்கள–பௌத்த இனவெறியர்கள் செவிசாய்த்திருந்தால் இனப்பிரச்சினை, தமிழர்–சிங்களவர் மோதல் ஏற்பட்டிருக்க வழியிருந்திராது.

இப்போது இராணுவ பலத்தை உபயோகித்ததனால் உருவாகிய 'பயங்கரவாதத்தை', மீண்டும் அதே இராணுவ பலத்தினால் அழிக்க எத்தனிப்பது நோய்க்கு மருந்தாகாது.

இது நீதியமைச்சர் பீரிஸ் அவர்களுக்குத் தெரியாததல்ல. சட்டப் பேராசிரியரான அவருக்கு நோயும் தெரியும். நோய்க்கு மருந்தும் தெரியும். ஆனால், அமைச்சராகி விட்டபடியால் அவர் தனது பதவிக்கு

**- நக்கீரன் -**

இசைவாகவும் வாய்க்குப் பதமாகவும் பேசவேண்டியுள்ளது என்று எண்ண வேண்டியுள்ளது. இது மட்டுமல்ல, சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் பரவலாக்கல் யோசனைகள் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வாகாது என்பதும் அவருக்குத் தெரியும்.

உலக அரசியல் அரங்கை உன்னிப்பாக உற்றுப் பார்ப்பவர்களுக்கு ஒரு உண்மை தெரியும்.

இணைப்பாட்சி அரசியல் அமைப்பைக் கொண்ட நாடுகளில் அப்படியான அரசியல் அமைப்பு ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

இந்தியாவும் கனடாவும் இதற்கு அருமையான உதாரணங்கள்.

இந்தியாவின் புதிய பிரதமர் தேவகௌடா, மாநிலங்களுக்கு அதிக அதிகாரப் பரவலாக்கல் பற்றி ஆராய ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கிறார். இந்த ஆணைக்குழு பற்றிய அறிவித்தல், அவர் பிரதமராகப் பதவியேற்ற இருபத்து நான்கு மணித்தியாலத்துக்குள் வெளிவந்துள்ளமை, அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தையும் அவசரத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்தியா ஒரு நாடல்ல. அது ஒரு உபகண்டம். மக்கள் தொகை 95 கோடியைத் தாண்டிக்கொண்டிருக்கிறது.

இந்தியாவின் 2,500 ஆண்டுகால வரலாற்றில் எந்தவொரு சக்கரவர்த்தியும், அது அசோகன் என்றாலும் சரி, அக்பர் என்றாலும் சரி, இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆண்டது கிடையாது.

இதற்குப் புறநடை அல்லது விதிவிலக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியமே. பிரித்தானியரே இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் 149 ஆண்டுகள் (1799–1947) ஆண்டிருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் இந்தியவைப் பிடிக்குமுன் இந்தியப் பெருநிலப்பரப்பை நூற்றுக்கும் அதிகமான மன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆண்டுவந்தார்கள்.

இந்தியா என்ற சொல்லைக் கண்டுபிடித்ததே வெள்ளைக்காரன்தான் என்றால், மிகுதியை ஊகித்து உணர்ந்து கொள்ளலாம்.

இந்தியா உடைபடாமல் இருக்க வேண்டும் என்ற அவாவினாலேயே, இந்திய அரசியல் யாப்பை உருவாக்கியவர்கள் அரசியல் அதிகாரத்தைப் பெருமளவு மைய அரசின் கையில் கொடுத்தார்கள். இதில் ஒன்றுதான் மாநில அரசுகளை மைய அரசு கலைக்கும் அதிகாரம்.

தமிழ்நாட்டுச் சட்டசபை, இதுவரை மூன்றுமுறை காங்கிரஸ் அரசுகளால் கலைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தியா, ஒரு நாடாகவல்ல, ஒரு ஒன்றியமாகவேனும் (Union of States) நீடிக்க வேண்டும் என்றால், மாநில அரசுகளுக்குக் கூடிய அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பதவிக்கு வந்த கையோடு, தமிழ்நாட்டுக்குக் கஷ்மீர் மாநிலம் போல் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

மொத்தத்தில் இந்திய மாநிலங்களுக்கு இப்போதுள்ள இணைப்பாட்சி யாப்பின் கீழ் கூடுதலான அதிகாரங்கள் விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

இந்திய ஒன்றியத்தைப் போலல்லாது, கனேடிய அரசியல் அமைப்பில் மாகாண அரசுகளுக்கு அதிகளவு அதிகாரங்கள் உண்டு.

இந்திய அரசியல் யாப்பு, இணைப்பாட்சியை (Federation) மையமாகக் கொண்டது.

கனேடிய யாப்பு, சிறப்பு இணைப்பாட்சியை (Confederation) அடிப்படையாகக்கொண்டது.

1867 இல் 4 மாகாணங்கள் இணைந்து இணைப்பாட்சி அரசை உருவாக்கின. கடைசியாக இந்த இணைப்பாட்சியில் இணைந்த மாகாணம் நியூபின்லாந்து ஆகும். 1949இல் இந்த மாகாணம் இணைந்து கொண்டது.

இப்படி மாகாணங்களுக்கு அதிகளவு அதிகாரங்கள் இருந்தும்

பிரான்சுமொழி பேசும் கியூபெக் மாகாணம் பிரிந்து ஏன் தனிநாடாகப் போக வேண்டும்?

தனிநாட்டை ஆதரிக்கும் கட்சியே கியூபெக் மாநிலத்தில் ஆட்சியிலுள்ளது.

சென்ற ஆண்டு ஒக்டோபர் 30ல் நடந்த நேரடிவாக்கெடுப்பில் (Referendum) பிரிவினையை எதிர்ப்போர் ஓர் மயிரிடையில் வெற்றி பெற்றுள்ளார்கள்.

இப்போது இன்னொரு நேரடி வாக்கெடுப்புக்கான முன்னறிவித்தலை கியூபெக் மாகாண முதலமைச்சர் லூசியான் புச்சாட் விடுத்திருக்கிறார்.

கியூபெக் தனிநாடாகப் பிரிந்து போனால், அதனைக் பிரான்சுநாடு இராசதந்திர ரீதியாக அங்கீகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

பிரான்சு நாட்டைக் கியூபெக் மக்கள் தங்கள் தாய்நாடாகக் கருதுகிறார்கள் என்பது வெளிப்படை.

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மனிதவுரிமைப் பிரகடனம் மக்களுக்கு வழங்கும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில்தான், கியூபெக் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன் எடுக்கிறார்கள் என்பதை இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும்.

தற்போது, கனடாவுக்கு உத்தியோக பூர்வமாக வருகை தந்திருக்கும் பிரான்சு நாட்டுப் பிரதமர் Alain Juppe இதனை இராசதந்திர மொழியில் சூட்சுமமாக வெளிக்காட்டியுள்ளார்.

1967இல் கனடாவுக்கு வருகைதந்த அன்றைய பிரான்சு நாட்டு சனாதிபதி மொன்றியலில் பேசும்போது, "Vive le Quebec Libre" என்ற முழக்கத்தோடு அவர் தனது உரையை முடித்ததும், அதனையடுத்து அவரது கனடா வருகையைப் பாதியில் முடித்துவிட்டு நாடு

தொடர்ச்சி 16 ம் பக்கம்.

# புலிகள் இயக்கம் விடுதலை இயக்கமா ? பயங்கரவாத அமைப்பா ?

## கனடாவின் நீதிமன்றில் சுவையான விவாதம்

கனடிய நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு ஒன்று, சர்வதேச ரீதியில், பரவலாகப் பேசப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவருகிறது. சுரேஷ் மாணிக்கவாசகர் என்ற ஈழத் தமிழருக்கு எதிராக, 'கனடிய குடிவரவுத் திணைக்களம்" தொடுத்த வழக்கே அதுவாகும். பயங்கரவாத அமைப்பு ஒன்றின் அங்கத்தவர் என்பதே சுரேஷ் மீதான குற்றச்சாட்டாகும். அதாவது, புலிகள் இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் இவரும் ஈடுபடுகின்றார் என, வழக்குத் தொடுநர் குற்றஞ்சாட்டி உள்ளார். புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக, வழக்குத் தொடுநர் கருதியதுதான் இந்த வழக்கின் முக்கிய அம்சமாகும். எனவே, புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பா அல்லது ஒரு தேசிய விடுதலை இயக்கமா என்பதை முடிவுசெய்யும் வகையில், நீதிமன்றில் வாதப்பிரதிவாதங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. பிரபல்யமான மேற்குநாட்டு சட்ட நிபுணர்கள் பலரும் மற்றும் அறிஞர்களும் இந்த வழக்கில் நேரடியாகப் பங்குபற்றி வருகின்றனர்.

**'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்' ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல: தமிழரின் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட - ஒரு தேசிய விடுதலை இயக்கமே புலிகள் இயக்கமாகும்.**

**தன்னாட்சிக்கான உரிமை தமிழீழ மக்களுக்கு உண்டு. இந்த வகையில், சர்வதேச சட்டத்திற்கு அமைய ஆயுதப் போராட்டத்தை நடாத்தும் உரிமை, தமிழீழ மக்களுக்கு உண்டு. ஆகவே, புலிகள் இயக்கத்தால் தலைமைதாங்கி வழிநடாத்தப்படும் இந்தப் போராட்டம், ஒரு சட்டபூர்வமான நடவடிக்கையாகும். அது பயங்கரவாதம் அல்ல !**

**கனடாவின் ரொறன்ரோ நீதிமன்றம் ஒன்றில், நாடுகடத்தல் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றில் பங்குகொண்டிருந்த மேற்குநாட்டு அறிஞர் பலரால் இணக்கம் காணப்பட்ட கருத்துத் தொகுப்பு இதுவாகும்.**

புலிகள் இயக்கத்தால் நடாத்தப்படும் விடுதலைப் போராட்டத்தின் சட்டபூர்வத் தன்மைபற்றி இந்த அறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை, நீதிமன்றம் கவனமாகச் செவிமடுத்து வருகின்றது. "புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு அல்ல, அது ஒரு விடுதலை இயக்கம்" என்பது அந்த அறிஞர்களது கருத்தாகும். ஒடுக்கு முறைக்குள்ளாகியுள்ள தமிழினத்தின் அரசியல் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தைத் தெரிந்தெடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட, ஒரு தேசிய விடுதலை இயக்கமே புலிகள் இயக்கம் என்றும், சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களின் அடிப்படையில் புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்றும் அந்த நிபுணர்கள் வாதிட்டு வருகின்றனர்.

கடந்த மார்ச் 19ஆம் திகதி, கனடாவின் ரொறென்ரோ நகரில் உள்ள மேல் நீதிமன்றில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போதும் தொடர்ந்து நடைபெறுகின்றது. சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள ஒரு சுவையான வழக்காக இது பார்க்கப்படுவதால், சர்வதேசத்தின் கவனத்தை இந்த வழக்கு விசாரணை ஈர்த்துள்ளது.

## நிபுணத்துவ சாட்சியம்

– பேராசிரியர் ஜொஸ்டன்

அமெரிக்காவின் 'பொஸ்ரன்' பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஜொஸ்டன் அவர்கள், நீதிமன்றில் நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கினார். இவர், 'சர்வதேசச் சட்டமும் போர் விதிகளும்' என்ற தலைப்பில், அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்ரகனில்' இராணுவ அதிகாரிகளுக்கு விரிவுரைகளை நிகழ்த்தியவராவார். நீதிமன்றில் இவர் சொன்னார், "சிறிலங்காவில் நடைபெறும் ஆயுதப் போராட்டம், ஜெனீவா ஒப்பந்த நடைமுறைகளுக்கு அமையவே உள்ளது:

> "தமிழர்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள்""
> - பேராசிரியர் ஜோன் குவிக்லி
> (ஒகியோ பல்கலைக்கழகம் - அமெரிக்கா)

இந்த சர்வதேச ஒப்பந்தத்தின்படி, போர் ஒழுங்குகளை மீறுவது என்பது ஒரு போர்க் குற்றமே ஒழிய, அது பயங்கரவாதமாகாது." அத்துடன் இந்தப் பேராசிரியரின் கருத்துப்படி, தன்னாட்சி உரிமைக்காகத் தமிழர் நடாத்தும் போராட்டத்தை ஒரு விடுதலைப் போராட்டம் என்று ஏற்றுக்கொள்ளாது விட்டாலுங்கூட, கண்டனத்திற்கு உட்படுத்தப்பட்ட புலிகளின் நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகப் பார்க்க முடியாது. தேவையானால், அவற்றை மனித உரிமை மீறல்களாக அல்லது போர்க் குற்றங்களாகவே பார்க்க முடியும். அத்துடன் இவர், "பயங்கரவாதம் என்பது பொதுமக்களைப் பயமுறுத்துவது என்பதை மட்டுமே நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். வஞ்சம் தீர்க்கும் முகமாகவோ அல்லது ஒரு போர்த் தந்திரத்திற்காகவோ அல்லது பதிலடியாகவோ பொதுமக்கள்மீது ஒரு தாக்குதல் நிகழுமானால், அவற்றைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகக் கருத முடியாது. இவை போர்க் குற்றங்களாக அல்லது மனித உரிமை மீறல்களாக அல்லது ஒரு நாட்டின் தேசிய சட்டங்களை மீறும் ஒரு செயலாகவே கருதப்படவேண்டும்" என மேலும் வலியுறுத்தி இருக்கிறார். தன்னுடைய வாதத்தில், "புலிகளின் நடவடிக்கைகள் எவற்றையுமே பயங்கரவாதச் செயல்களாகக் கருத முடியாது" என்று, அவர் நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

## பேராசிரியர் ஜோன் குவிக்லி

அமெரிக்காவின் 'ஓஹியோ' பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோன் குவிக்லியும் தனது நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கினார். "தமிழர்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள்" என அவர் வலியுறுத்தினார். "பயங்கரவாதம் என்பதற்கு சர்வதேச சட்டத்தில், திட்டவட்டமான வரையறை இல்லை. எனவே, புலிகளின் நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகக் கருத முடியாது" என அவர் வலியுறுத்தினார்.

## பேராசிரியர் பிரான்சிஸ் பொயிலி

இவருடன், அமெரிக்க 'இல்லினொயிஸ்' பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயிலியும் நிபுணத்துவ சாட்சியத்தை அளித்துள்ளார். இவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார். இஸ்ரேல்–பாலஸ்தீன ஒப்பந்தத்தில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இவர் கூறினார், "காலனித்துவத்தின் தொடர்ச்சியே சிறிலங்கா அரசாங்கம்: அத்துடன், அது ஒரு இனவாத அரசாங்கமுமாகும்." ஜெனீவா பிரகடனத்தின் மேலதிகக் குறிப்பு ஒன்றின் அடிப்படையில், "புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் ஆகும்." சர்வதேச சட்டம் ஒன்றின் பிரகாரம், "புலிகள் சிறப்பு உரிமை பெற்ற போராளிகளாவர்." ஆகவே, ஜெனீவா பிரகடனத்தின் மேலதிக குறிப்பின் பிரகாரம், "புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் எனக் குற்றம் சாட்ட முடியாது" என, அவர் சட்டவாதம் புரிந்துள்ளார்.

> "சிறிலங்காவில் நடைபெறும் ஆயுதப் போராட்டம், ஜெனீவா ஒப்பந்த நடைமுறைகளுக்கு அமையவே உள்ளது. இந்த சர்வதேச ஒப்பந்தப்படி, போர் ஒழுங்குகளை மீறுவது என்பது ஒரு போர்க் குற்றமே ஒழிய, அது பயங்கரவாதமாகாது. புலிகளின் நடவடிக்கைகள் எவற்றையுமே பயங்கரவாதச் செயல்களாகக் கருதமுடியாது""
> -பேராசிரியர்ஜொஸ்டன்
> (பொஸ்ரன் பல்கலைக்கழகம் -அமெரிக்கா)

## பேராசிரியர் விற்றகர்

பேராசிரியர் விற்றகர் என்பவர் கனடாவின் புலனாய்வுச் சேவை பற்றி நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கியுள்ளார். "கனடாவிடம் வெளிநாட்டு புலனாய்வுச் சேவை இல்லை" எனத் தெரிவித்த அவர், "புலிகள் இயக்கம் பற்றிய புலனாய்வுத் தகவல்களை இந்திய–சிறிலங்கா புலனாய்வு நிறுவனங்களே கனடாவுக்கு வழங்குகின்றன. இவை புலிகளுக்கு எதிரான இரகசிய சேவைகளாகும். ஆகவே, இவை தரும் தகவல்கள் உண்மையானதாக இராது" என விளக்கமளித்தார்.

இந்திய–சிறிலங்கா புலனாய்வு நிறுவனங்களிடமிருந்து மற்றைய வெளிநாட்டு புலனாய்வுச் சேவையினர் புலிகள் பற்றிய தகவல்களைப் பெற்றிருந்தால், அத்தகைய தகவல்கள் நம்பகத் தன்மை அற்றவையாகும்.

## சட்டத்தரணி கரன் பாக்கர்

மனித உரிமைகள் விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்கப் பெண்மணி கரன் பாக்கர் நிபுணத்துவ சாட்சியமளிக்கையில், "1983 இலிருந்து தமிழர் போராட்டம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகத் திகழ்கின்றது" என்றார். அதேவேளை, "1972 இலிருந்து 1983 வரை, உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதியாகும்" என்று காலவரையறை செய்து விளக்கமளித்தார். மேலும் அவர் கூறுகையில், "தமிழரின் தகைமைபெற்ற இராணுவக் கட்டமைப்பாக புலிகள் இயக்கம் இருக்கின்றது: அத்துடன் சீருடை அணிந்தவர்களாக போராளிகள் இருக்கின்றனர். ஒழுங்கான முறையில் கட்டளை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மேற்குறித்த இரண்டு வகையான காலப்பகுதிகளிலும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்ட புலிகளது நடவடிக்கைகள், போர் நடவடிக்கைகளாக அல்லது போர்க் குற்றங்களாகவே கருதப்படமுடியும். பயங்கரவாத நடவடிக்கைகளாக அவற்றைக் கருதக்கூடாது" என்று நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

## கலாநிதி டக்மர் கெல்மன் ராஜநாயகம்

ஜேர்மன்–மலேசிய இணைந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டக்மர் கெல்மன் ராஜநாயகம், தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றை அங்கே விளக்கினார். "இலங்கை என்ற தீவில் இரண்டு நாடுகள் இருந்தன: நிர்வாக வசதிக்காக அவை இரண்டும்

தொடர்ச்சி 16 ம் பக்கம்...




**அத்தியாயம் 7 இன் தொடர்ச்சி**

உதயகுமாரின் பின்னுக்கு இருந்துவந்த தாயார் நாகமுத்துவின் உடலும் கிடந்தது. ஆனால் அவரது தலையை உடலில் காணவில்லை. தலையற்ற முண்டமாகவே அது காட்சியளித்தது.

மோட்டார் சைக்கிளுக்குப் பின்னே சதீஸ்குமார் ஓட்டிவந்த சைக்கிள் நொறுங்கிக் கிடந்தது. சைக்கிள் மட்டும்தானா? சதீஸ்குமாரும் நொறுங்கித்தான் கிட ந்தான். 13 வயதுச் சிறுவன் –அவனது நெஞ்சுக்கு மேறபட்ட பகுதிகள் மட்டுமே எஞ்சிக்கிடந்தன. உசாந்தினியின் கால்கள் மட்டுமல்ல, அந்தச் சிறுமியின் இடையின் பின்பகுதி சிதைந்திருந்தது.... நான்கு சடலங்களைக் கண்டாயிற்று. ஐந்தாவது? உதயகுமாரின் மோட்டார் சைக்கிளில் முன்னுக்கு இருந்துவந்த சிவகுமாரின் மகள் சுரேகா எங்கே? அவளை உயிருடனோ, பிணமாகவோ அங்கு காணவில்லை.... "ஐயோ என்ர பிள்ளையைக் காணேல்ல.... என்ர பிள்ளையைக் காணேல்ல....." என்று சிவகுமார் நெஞ்சிலே அறைந்துகொண்டு கத்தினார். அங்கு எழுந்துகொண்டிருந்த பல நூற்றுக்கணக்கான ஓலங்களுடன் சிவகுமாரின் ஓலமும் கலந்து ஒலித்ததே தவிர, பலன் ஒன்றும் கிட்டவில்லை.

உசாந்தினியும் இறந்துவிட்டாளா? சதீஸ்குமாரின் உடல் சிதறியது...... தாயாரின் தலை சிதறியது....... உசாந்தினியின் இடை சிதறியது....... உதயகுமாரின் முதுகு சிதறியது...... சுரேகாவின் உடல்தானும் கிடைக்கவில்லை.......!

மறுநாள் சவச்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட உடல்கள் –கோண்டாவிலில்– 'ரசிகன்' எனப்படும் இராசதுரையின் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

சிவகுமாரின் பெற்றமனம் கேட்கவில்லை: தன்பிள்ளை சுரேகா ஒருவேளை காயப்பட்டிருப்பாளோ என்ற நப்பாசையுடன் வைத்தியசாலை முழுவதும் சல்லடை போட்டுத் தேடியதுதான் மிச்சம். அவளைப்பற்றிய தகவல்கள் எதுவுமில்லை. அவளுக்கும் சேர்த்து மரணச்சடங்கு செய்யப்பட்டது. மரணச்சடங்குகள் முடிந்ததும் அவர்கள் குடும்பங்கள் கொக்குவிலுக்கு வந்துவிட்டன.

12ஆம் திகதி 'உதயன்' நாளேட்டின் கடைசிப் பக்கத்தில் ஒரு செய்தி– 'சிறுமி பற்றிய தகவல்தேவை' எனும் தலைப்பில் வெளியாகியிருந்தது. "யாழ்ப்பாணப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தலையில் படுகாயமடைந்த நிலையில், சுமார் 12வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார். சுயநினைவிழந்த நிலையில் இச் சிறுமியின் பெற்றோர் மற்றும் ஊர் விபரங்கள் தெரியவில்லை, றமீனா என அச்சிறுமியின் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது.

அச்சிறுமியின் பெற்றோர், அல்லது விபரம் தெரிந்தோர் மற்றும் உறவினர் எவராவது வந்து இவரைப்பற்றிய விபரங்களைத் தந்துதவுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது."

இச் செய்தியை முதலில் படித்தவர் சிவகுமாரின் மைத்துனர் சிறீதான். வயது 12 என்று குறிப்பிட்டிருந்தாலும், றமீனா அல்லவே இவளது பெயர்! எனினும் மைத்துனர் சிவகுமாருக்குச் செய்தியைப் பற்றிக் கூறினார்.

நம்பிக்கை இல்லாத நிலையில் வைத்தியசாலை நோக்கிச் சென்றார். காயப்பட்டோர் சிகிச்சை பெற்றுவரும் அனைத்து விடுதிகளிலும் மீண்டும் தேடினர். பலன் பூஜ்யம்தான்.

இனி அதி தீவிர சிகிச்சைப்பிரிவு ஒன்றுதான் பாக்கி. அதற்குள் எல்லோரும் செல்ல இலகுவில் அனுமதிக்கப்படமாட்டார்களாகையால், நலன்புரிச் சங்கத்தில் வேலைசெய்யும், தெரிந்த ஒருவரின் துணையோடு அனுமதிபெற்றுக்கொண்டு உள்ளே சென்றார். அந்த அறைக்குள் சென்றும் நோயாளர்கள் ஒருவரையும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. டொக்ரரைத்தான் சந்திக்க வேண்டியிருந்தது.

# வித்துக்கள்

டொக்ரர், பிள்ளையின் பெயர், வயது, இடம் ஆகிய விபரங்களைச் சிவகுமாரிடம் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போதுதான் சிவகுமாரின் முதுகுப்புறமிருந்து அந்தக் குரல் ஒலித்தது....... "அப்பா......!" சிவகுமாருக்கு மெய் சிலிர்த்தது. அவர் காதுகளையே நம்பமுடியவில்லை. தாய்ப்பசுவைக் கண்டு கதறி அழைக்கும் கன்றின் குரலது......! திரும்பிப் பார்த்தார்...... அங்கே படுக்கையில் கட்டுகளுடன் சுரேகா கிடந்தாள்.



"மகளே...!" என்று கூவி அழைத்த வண்ணம் மகளிடம் பாய்ந்து சென்று அணைத்துக் கொண்டார். இறந்துவிட்டதாக நினைத்து 'மரணவீடு' நடாத்திய மகள்... அவர் குடும்பத்தின் ஒரே ஒரு பிள்ளையாக இதுவரைகாலமும் வளர்த்துவரும் செல்வப் புதல்வி......

இனி அவளைச் சீவியத்தில் காண மாட்டோமே என்று மாரடித்துக் கடன்முடித்த ஏக புதல்வி.......

எலும்பும் தசைதானும் இல்லாமல் போய்விட்டாளே என்று ஏங்கித் தவிக்கச் செய்த தவச்செல்வி.......

அவள் சாகவில்லை. உயிரோடு இருக்கிறாள்....... ஆனந்தக் கண்ணீர் வடித்தான் அப்பன். இதைவிடவும் மகிழ்ச்சியான செய்தி உண்டா அவனுக்கு........?

டொக்ரர் எச்சரித்தார்....... "அவளோடு அதிகம் பேச்சுக் கொடுக்க வேண்டாம்....... அதிர்ச்சியான செய்திகள் இருந்தால் கூறவேண்டாம்".

"ஐயா எங்க அப்பா?" அவள் உதயகுமாரை ஐயா என்றுதான் அழைப்பாள். அந்த ஐயாதான் போய்விட்டாரே! அதை எப்படிச் செல்வது.......? டொக்ரரின் கட்டளை எச்சரித்தது.

'ஐயாவுக்குச் சின்னக் காயம்தான், அவையள் எல்லோரும் சுகமாயிருக்கினம்....... உனக்கு என்னம்மா நடந்தது.?"

"எனக்கு ஒன்றும் தெரியாதப்பா. மோட்டார் சைக்கிளில் ஐயாவுக்கு முன்னுக்கு இருந்து வந்ததுதான் தெரியும். எனக்கு இப்ப சுகம்......!" அவள் நம்பிக்கையோடு சொன்னாள். டொக்ரரும் நம்பிக்கையூட்டினார்.

இறந்த மகள் பிழைத்துவிட்டாள் என்ற மகிழ்ச்சியில் சிவகுமார் வெளியே வந்தார். மைத்துனனிடமும் சொன்னார். கொக்குவிலுக்குச் சென்று மனைவிக்கும் உறவினர்களுக்கும் சொன்னார். ஏற்கனவே நால்வரை இழந்ததன் மூலம் அனுபவித்துக் கொண்டிருந்த துயரை, அந்தக்கணத்தில் அனைவரும் மறந்தனர்......

இறந்தவள் மீண்ட மகிழ்ச்சி அங்கு கரைபுரண்டது.

வைத்தியசாலை நோக்கிப் படையெடுத்தனர். கண்டனர், களித்தனர், கதைத்தனர்....... முத்தமிட்டனர்.

அன்றைய இரவு சிவகுமாருக்கும் மனைவிக்கும் ஓரளவு நிம்மதியான இரவு. மறுநாளும் சுரேகாவைப் பார்க்கச் சென்றனர். இளநீர் போன்ற பானங்களைப் பருக அனுமதித்தார் டொக்ரர். சுரேகா மகிழ்ச்சியுடன் குடித்தாள்.

சுரேகா சுகம் என்று சந்தோசப்பட்டாள். அன்று இரவுக்குப் புனிதவதி அத்தை மட்டும் தன்னோடு நின்றால் போதும் என்று சொன்னாள். புனிதவதியை மட்டும் சுரேகாவுக்குத் துணையாகவிட்டு, அனைவரும் வீடு திரும்பினர். சுரேகா பிழைத்துவிட்டாள்.......!

அன்று நள்ளிரவு 12.45 மணியளவில், புனிதவதி அழுதுகொண்டு ஓடிவந்தாள். அவள் தந்த செய்தி இடியென அனைவரது நெஞ்சிலும் இறங்கியது. அது....... "சுரேகா பன்னிரண்டு மணியளவில் இறந்துவிட்டாள்........"

ஆமாம், இறைவன் அவர்களை வஞ்சித்து விட்டான். ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டான். கடவுள் அவளை அவர்களுக்குக் காட்டி மறைத்துவிட்டான்!

இப்படி ஒரு ஏமாற்றம் அவர்களுக்குத் தேவைதானா? இதனை அவர்களால் தாங்க முடியுமா?

தனது சோகங்களைச் சொல்லி முடித்தபோது, சிவகுமார் சோர்ந்து போயிருந்தார். இதற்கு மேலும் அவரால் சோகத்தை தாங்க முடியாது போல் தோன்றியது.

ஐந்து பெண்களுக்குத் தந்தையான எனக்கு அப்படி ஒரு சந்தேகம் எழுந்தது........ அடக்க முடியாமல் கேட்டுவிட்டேன்.

"சுரேகா பெரியவளாகி விட்டாளா?"

சிவகுமாரின் முகம் சோகத்தால் சுண்டிக் கறுத்தது. அவர் பதில் சொன்ன பிறகு, ஏன் கேட்டோம் என்ற குற்ற உணர்வு என்னை உறுத்தியது.

"அவள் பெரியவளாகி மூன்று மாசம், இந்த மாசம் (ஓகஸ்ற்) பதினாறாம் திகதியோட அவளுக்கு வயசு பதின்மூன்று ஆகுது. அவளோட பிறந்தநாளோட பெரிசாச் சொல்லி, கொண்டாடிச் செய்யத் திட்டம் போட்டிருந்தம், எல்லாம் போச்சுது."

புத்திர சோகத்தின் கொடுமையை முழுமையாக நான் அனுபவிக்கத் தொடங்கி இன்னும் முழுதாக மூன்று வருடங்கள் பூர்த்தியடையவில்லையே........ அந்தத் தந்தையின் உள்ளத்தை–பாசத்தை–துடிப்பை என்னால் உணர முடிந்தது....... கனத்த நெஞ்சோடு விடைபெற்றோம்.

"நாவண்ணன் எனக்கு கடவுள் நம்பிக்கையில்லை........ அப்பிடி ஒன்று இருக்குமானால், கடைசிவரைக்கும் இப்படி ஒரு சோதனையை, அந்தக் கடவுள் இந்தத்

அவல நிகழ்வுகளைக் குறுந் தலைப்புகளில் தி. இனியவன் தொகுத்து வெளியிட்டிருந்தார். அவற்றில் ஒன்று, 'மனிதம்' எனும் தலைப்பிலானது. 'மனிதனில் மிருகமுண்டு' என்று ஒரு கவிஞன் பாடியது தெரியும்: ஆனால் இங்கு 'மிருகத்தில் மனிதம் உண்டு' என்பதற்கு 'ஜிம்மி என்ற ஒரு நாய் சாட்சி பகன்றுள்ளது. உண்மையிலேயே, அந்த ஜிம்மியை நாய் என்று எழுதுவதற்கு என் கை கூசுகின்றது. ஏனென்றால், அந்த ஜீவனை நான் அவமதிக்கின்றேனோ என்ற ஒரு தயக்கம் என்னுள். அந்தச் சம்பவம் இதுதான் – அப்படியே இனியவன் தமிழில்....

பகலில் கூலி கிடைத்தால்தான், இரவிலாவது தீனி கிடைக்கும்.

இன்றைய உழைப்பில் மீதியில்லையென்றால், நாளைய காலையில் பாணுமில்லை.

மாற்றியுடுக்கக்கூட உடையற்ற பெருந்துயருக்குள் குழந்தைகள் வாடினார்கள். "கொடிதிலும் கொடிது இளமையில் வறுமை".

சீவரத்தினம் கௌரி தம்பதிக்குக் குழந்தைகள் ஆறு அல்ல! ஏழுதான். ஜிம்மியையும் அவர்கள் பிள்ளையாகத்தான் வளர்த்தார்கள்.

ஆனால்–

ஏழாலை மயிலங்காட்டில்–

மாட்டுத் தொழுவத்தைப் போல ஒரு உதிர்ந்த

ஆட்டும்.

நன்றியுள்ள மிருகம்–

அந்த நாள்–

மதியச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளுக்குப் பக்கத்தில் விழுந்து முழங்கியது பீரங்கிக் குண்டு.

வயிறு பிரிந்து தூக்கியெறியப்பட்டான் செந்தூரன்.

கை, கால்கள் சிதறி, குடல் வெளியேறி விழுந்தாள் கஸ்தூரி.

வேதனை குடியிருந்த வீட்டின் மடியில் விழுந்தது கொடுமை.

நிலத்தில் விழுந்து புரண்டு கதறிய அந்த அன்... அலறல்.

நெஞ்சை உருகச் செய்யும் கதறல்.

உடல்கள் உடல்களாகவும் இல்லை. ... பொறுக்கிச் சேர்க்க ஊரில் ஆட்களுமில்லை.

இரண்டு கைகளாலும் வாரி மகளை அள்ளி... தந்தை. செந்தூரனைத் தூக்கி எடுத்தார் பக்கத்... உறவினர்.

சுடலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

ஜிம்மியும் பின்னாலேயே போனது. தனது சகோதரர்... இழந்த பெருந்துன்பம் அதற்கு. விழிகளில் அழுகை.




தகப்பனுக்குக் கொடுக்கக் கூடாது" என்றார், என் நண்பன் கே.ஆர். டேவிட்.

## அத்தியாயம் - 8

அன்று சிவகுமாரின் மனைவி ஆதிலட்சுமியை அவரது

# வீழ்ந்தன

அலுவலகத்தில் சந்தித்தபோது, இந்த நூல் எழுதிக்கொண்டிருக்கும் விடயத்தைக் கூறினேன்.

"இணுவிலில புக்காரா அடிச்சுச் செத்துப்போன தேவநாயகம் குடும்பத்தைப்பற்றி விபரம் எடுத்தனீங்களோ?" என்று அவரிடமிருந்து கேள்வி பிறந்தது.

"ஓமோம், அது சம்பந்தமாக முழு விபரமும் கிடைத்திருக்கிறது" என்று கூறிய எனக்கு, ஐயாக்கிளி மாஸ்ரரின் நாயைப்பற்றிய எண்ணம் வந்தது: கேட்டுவிட்டேன்–

"ஐயாக்கிளி மாஸ்ரர் பாவம். நல்ல தெய்வ பக்தி மிக்க மனுசன். அவையளுக்குப் பிள்ளைகள் இல்லை. இந்த நாய் ஒரு பிள்ளைமாதிரித்தான். மாஸ்ரர் செத்த பிறகு அவருடைய மனைவி தாய் வீட்டுக்குப் போயிற்றா. இந்த நாயையும் அவ தன்னோட கூட்டிக் கொண்டுபோகத் தெண்டிச்சவ. ஆனால் அது, அவவிட கையில பிடிபடாமல் சுத்திச் சுத்தி அந்த வளவுக்குள்ளே நிற்குது. இப்ப அதை விட்டிட்டுப் போயிற்றா" என்றார்.

இந்த நாய்களுக்கு உள்ள அறிவையும், நன்றி மறவாத் தன்மையையும் எண்ணி வியந்து கொண்டிருந்த போதுதான், அந்த 'விடுதலைப்புலிகள்' ஆவணி நாள் இதழைப் படிக்க நேர்ந்தது.

அந்த இதழில், 'இரத்தக் கறை படிந்த நாட்கள்' என்னும் தலைப்பில், 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின்

கொட்டில்தான் அவர்களுக்கு வீடு.

மகிழ்ச்சியோடு இல்லாவிட்டாலும்– சீவியத்தைக் கவலையில்லாமல் ஓட்டவைத்த சீவல் தொழிலுக்கு–

அவரது நெஞ்சுவலி வந்து குறுக்கே விழுந்ததால்–

குடும்பத்தைக் கொண்டிழுக்கப் பெற்றோர்கள் இருவருமே கூலிவேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

அன்றிலிருந்து–

ஏழ்மையின் அடை யாளங்களை அந்தக் குடும்பத்தில் ஒ வ்வொரு அங்க முமே சுமக்கத் துவங்கியது.

பாவம்.

கிடைக்கும் சொற்ப த்தைப் பங்கிட்டு உண்ணும் போது 'ஏழு' பிள்ளைக ளுக்குமே அது அமிர்தம்.

தமக்கே உண வில்லாத கஸ்ர த்திலும் தனக்கும் உணவளிக்கும் அவ ர்களின் பாசத்தில் 'ஜிம்மி' யின் கண் கசியும்: அன்பு ணர்வோடு வாலை



நடந்துகொண்டிருந்தார்கள்.

வழியில்–

தந்தை சுமந்து சென்ற கஸ்தூரியின் சிதைந்த வயிற்றுப் பாகத்திலிருந்த தசைத் துண்டொன்று நழுவிக் கீழே விழுந்துவிட்டது.

துயரத்தின் சுமையில் சிந்தனையைச் சிதறவிட்டிருந்த தந்தை அதனைக் கவனிக்கவில்லை.

ஆனால் ஜிம்மி கண்டுவிட்டது! நாய்கள் என்றால் தின்றிருக்கும். ஜிம்மி கவ்வியது: தூக்கிக் கொண்டு பின்னாலேயே நடந்தது.

சுடுகாட்டில் – தந்தை இறக்கிவைத்த கஸ்தூரியின் உடல்மீது–அந்தத் தசைத் துண்டத்தைப் பக்குவமாக வைத்து விட்டு– இரண்டு கால்களிலும் மண்டியிட்டது ஜிம்மி–

**தொடரும்...**



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஆறு

( தொடர்ச்சி )

அவர்கள் இயந்திரத்துப்பாக்கி பூட்டிய ஒரு கவசவாகனத்தின் தலைமையில் ஒரு லொறிகளின் வாகனத் தொடர் துறைமுகத்திலிருந்து அழைத்துச் செல்லப்படுவதைக் கண்டார்கள். எல்லாமாக 25 லொறிகள் இயந்திரத்துப்பாக்கிகள் பூட்டப்பட்ட ஜீப்புகளினால் குழப்பப்பட்டுச் சென்று கொண்டிருந்தன.

லொறிகள் எல்லாவற்றிலும், இத்தாலியிலிருந்து பலஸ்தீனத்துக்கு, பிரிட்டிஸ் தடையை மீறிச் செல்ல முற்பட்ட டோர் ஒவ்கோப் (Door of Hope - நம்பிக்கையின் கதவு) என்ற கப்பல், அதில் சென்ற அகதிகளால் நிரம்பி வழிந்தது. டோர் ஒவ் கோப் கப்பல், கடற்படை நாசகாரி ஒன்று குறுக்காக மோதியபின் கைபாவுக்கு (Haifa) இழுத்துச் செல்லப்பட்டு அதிலிருந்த அகதிகள் விரைவாக சைப்பிரசுக்கு மாற்றப்பட்டனர்.

மாண்ட்றியாவின் வீட்டு மாடிக்குக் கிட்டவாகச் செல்லும் போது உரக்க வீரிட்டவாறு, லொறிகள் ஒவ்வொன்றாகக் கடந்து சென்றன. மூன்று பேரும் அவற்றில் துயரத்தின் மொத்த வடிவமாக உருக்குலைந்து சென்றுகொண்டிருந்த மக்களைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவர்கள் தோல்வியடைந்த மக்கள். வாழ்க்கையின் ஓரத்துக்கு வந்துவிட்டவர்கள். அதிர்ந்து போய் உருக்குலைந்துபோய், களைப்புடன் சென்று கொண்டிருந்தனர். சைரன் திரும்பவும் ஒரு முறை கிறீச்சிட்டது. வாகனத்தொடர் பழைய சுவரிலிருந்த லாண்ட் கதவால் (Land Gate) கராஓலொசிலிருக்கும் தடுப்பு முகாம்களை நோக்கி, சலாமிஸ் செல்லும் பாதையில் திரும்பின. வாகனத்தொடர் தொலைவில் சென்று பார்வைக்கு மறைந்தாலும், சைரனின் ஒலி தொடர்ந்து கேட்பது போலிருந்தது.

> நாங்கள் எப்போதும் போல் காட்டிக்கொடுக்கப்பட்டும், ஏமாற்றப்பட்டும் விடுவோம். எங்களுக்கு எங்கள் மக்களைத்தவிர வேறு நண்பர்கள் இல்லை. அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

டேவிட் பென் அமியுடைய கரங்களிரண்டும் முஸ்டியாக இறுகிப்போய் பற்களைக் கடித்தபடி, முகம் எதுவுமே செய்ய முடியாததால் ஏற்பட்ட கோபத்தால் சிவந்து கன்றிப் போயிற்று. மாண்ட்றியா வெளிப்படையாகவே அழுதான். அரி பென் கானான் மட்டும் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டவில்லை.

அவர்கள் மாடியிலிருந்து உள்ளே வந்தனர்.

"நீங்கள் இருவரும் கதைக்க வேண்டியது அதிகமாயிருக்குமென எனக்குத் தெரியும்" மாண்ட்றியா விம்மல்களுக்கிடையே கூறினான். உங்களுக்கான அறை வசதியாக இருக்குமென நம்புகிறேன். "மிஸ்டர் பென் கானான், காலையில் உங்களுக்கான சீருடை, ஆவணங்கள், சாரதி எல்லாம் ஆயத்தமாக வைத்திருப்போம். குட்நைற்."

அரியும், டேவிட்டும் தனித்து விடப்பட்ட அதே வினாடி ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக்கொண்டனர். பெரிய மனிதனான அரி சிறியவனான டேவிட்டை, குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கிவிட்டு கீழேவிட்டான். ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்த்துவிட்டு உடம்பை நன்றாக வைத்திருப்பதற்காகப் பாராட்டிக்கொண்டனர். திரும்பவும் ஒருமுறை கட்டியணைத்துக் கொண்டனர்.

நீ புறப்படும் முன் ஜோர்டானாவைக் கண்டாயா? ஆர்வத்துடன் டேவிட் கேட்டான். "அவள் ஏதாவது செய்தி தந்துவிட்டாளா?" அரி நாடியைத் தடவிவிட்டபடியே டேவிட்டைக் கேலி பண்ணும் விதத்தில் யோசித்துப் பார்க்க வேண்டும்........ எனத் தொடங்கினான்.

குறுக்கே பேசிய டேவிட் "தயவு செய்து பகிடி பண்ணாதே. மாதக்கணக்காக அவளிடமிருந்து கடிதமெதுவும் கிடைக்கவில்லை" அரி கடிதம் ஒன்றை வெளியிலெடுக்க, டேவிட் அதைப் பறித்துக் கொண்டான்.

"நான் இந்தக் கடிதத்தை ஒரு இரப்பர் உறையிலிட்டுக்கொண்டு வந்தேன். நான் நீந்திவரும்போது, எனக்கிருந்த கவலையெல்லாம் இப் பாழாய்ப் போன கடிதத்தை நனைய விட்டால் நீ எனது கழுத்தை முறித்துவிடுவாயே என்பது தான்."

டேவிட்டின் காதில் இவை விழவில்லை. அவன் கண்ணைக் குறுக்கிக்கொண்டு தன் பிரிவினால் வாடி, காதலனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெண் ஒருத்தியின் கடிதத்தைக் குறைவான வெளிச்சத்தில் மெதுவாக வாசித்துக்கொண்டிருந்தான். அக்கடிதத்தை மிகவும் மென்மையாகவும், கவனமாகவும் படித்துத் திரும்பத் திரும்ப வாசிப்பதற்காகத் தனது சட்டைப்பையில் வைத்துக் கொண்டான். ஏனெனில், இனி அவள் இன்னொரு கடிதத்தை அனுப்பப் பலமாதங்களாகலாம். வைத்து விட்டு "அவள் எப்படியிருக்கிறாள்?" டேவிட் கேட்டான்.

"எனது சகோதரி உன்னில் என்னத்தைக் காண்கிறாளோ தெரியவில்லை. ஜோர்தானா? ஜோர்தானா மாதிரித்தானிருக்கிறாள். அவள் முரட்டுத்தனமாகவும் அழகாகவும் இருக்கிறாள். உன்னை மிகவும் காதலிக்கிறாள்.

"எனது பெற்றோர்,........ எனது சகோதரர்கள்........ எனது பல்மாக்கும்பல் எப்படி? என்ன?"

"கொஞ்சம் பொறு........ கொஞ்சம்பொறு. நான் இங்கே சில நாட்கள் நிற்கப்போகிறேன். ஒரு நேரத்தில் ஒரு கேள்வியாகக் கேள்.

டேவிட் அந்தக் கடிதத்தைத் திரும்பவும் இழுத்து வாசித்தான். இருவரும் மௌனமாக யன்னலுக்கு வெளியே தெரிந்த புராதன சுவரைப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஊரில் நிலைமைகள் எப்படி. டேவிட் மெதுவாக முணுமுணுத்தான்.

> "நாங்கள் எல்லாவகையான வழிகளிலும் முய ற்சிக்கிறோம்." அரி தொடர்ந்தான்........ "அதனால் நாம் தெளிவான சிந்தனையுடன் இருக்கவேண்டும். சிலநேரங்களில் நாங்கள் வெற்றியடைகிறோம். சில நேரங்களில் தோல்வியடைகிறோம். ஒருதெளிவான சிந்தனையுடன் வேலை செய்யவேண்டும்........ எப்போது........."

"ஊர் நிலைமைகள் எப்போதும் போலத்தான். குண்டுவீச்சும், சுடுபடுவதிலும் நாங்கள் சிறுவர்களாயிருந்த நாட்களில் இருந்து எப்படியோ, அப்படி. அது எப்பொழுதும் மாறுவதில்லை. ஒவ்வொரு வருடமும் எங்களை நிச்சயமாக அழித்துவிடும் ஒரு பிரச்சினையைச் சந்திக்கிறோம். பிறகு அதைவிட மோசமான ஒரு பிரச்சினைக்குப் போகிறோம். ஊர் ஊர் மாதிரித்தான்," அரி சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தான். "ஆனால் இம்முறை ஓர் போர் நடக்கும்" அவன் தனது கைகளை, சிறியவனான நண்பனின் தோளைச்சுற்றிப் போட்டுக்கொண்டு சொன்னான், "நாங்கள் எல்லோருமே காராஓலொஸ் அகதிகளிடையே நீங்கள் செய்துள்ள வேலையைப்பற்றி மிகவும் பெருமைப்படுகிறோம்.

"என்னிடம் எதை எதிர்பார்க்க முடியுமோ, அதைத்தான் செய்திருக்கிறேன். தும்புத்தடிகளைப் பாவித்துப் போர் வீரர்களைப் பயிற்றுவிக்கிறேன். இந்த மக்களுக்கு, பலஸ்தீன் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இவர்களுக்கு நம்பிக்கைபோய்விட்டது அரி. மாண்ட்றியாவை மேலும் வருத்துவதை விரும்பவில்லை. அவன் ஒரு அற்புதமான நண்பன்."

"எனக்கு யாரும் எமது காவல் தேவதையாய் மாறுவதை விரும்பவில்லை டேவிட்."

"ஆனால் அவனும், கிரேக்க மக்களும் இல்லாவிட்டால் இங்குள்ள வேலைகளை முடிக்க முடியாது."

"உலகமெங்கும் நிறைந்திருக்கும் மாண்ட்றியாக்களால் ஏமாற்றப்படாதே. அவர்கள் எங்களுக்காக முதலைக் கண்ணீர்வடித்து எங்களில் கொல்லப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்காக வாயளவில் சேவை செய்கிறார்கள். ஆனால் கடைசியுத்தம் என்று வரும்போது நாம் தனியாகவே எதிர்கொள்ளுவோம். மாண்ட்றியாவும் எங்களை, மற்றவர்களைப் போலவே கையை விட்டுவிடுவான். நாங்கள் எப்போதும் போல் காட்டிக்கொடுக்கப்பட்டும், ஏமாற்றப்பட்டும் விடுவோம். எங்களுக்கு எங்கள் மக்களைத்தவிர வேறு நண்பர்கள் இல்லை. அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்."

இல்லை........ நீ சொல்வது சரியில்லை. டேவிட் குறுக்கே கூறினான்.

"டேவிட்....... டேவிட்........ டேவிட்........ நான் நீண்டகாலம் மொசாட்டிலும் பல்மாக்கிலும் இருக்கிறேன். நீ இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. இதுதான் உன்னுடைய முதல் பெரிய பணி. உணர்ச்சிகள் உனது மதிப்பீடுகளைத் தவறாக்க இடமளிக்காதே."

"உணர்ச்சிகள் எனது மதிப்பீடுகளைத் தவறாக்குவதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை. ஒவ்வொரு முறையும் இப்படியான வாகனத்தொடரைக்காணும் போது, எனக்குள்ளேயே தீய்ந்து போகிறேன். எங்கள் மக்களை மிருகங்களைப்போல் கூட்டில் அடைத்து........ சே.......

"நாங்கள் எல்லாவகையான வழிகளிலும் முயற்சிக்கிறோம்." அரி தொடர்ந்தான்....... "அதனால் நாம் தெளிவான சிந்தனையுடன் இருக்கவேண்டும். சிலநேரங்களில் நாங்கள் வெற்றியடைகிறோம். சில நேரங்களில் தோல்வியடைகிறோம். ஒருதெளிவான சிந்தனையுடன் வேலை செய்ய வேண்டும்........ எப்போது........."

இப்போதும் கூட, காற்றில் மிதந்துவந்த சைரன் ஓசையை அவர்களால் கேட்கக்கூடியதாக இருந்தது. ஜெரிசலேமிலிருந்து வந்திருந்த இளைஞன் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவனாக

**லியோன் யூரிஸ்**

நின்றுகொண்டிருந்தான். "நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே தொடங்கிய கதையொன்றின் புதிய அத்தியாயத்தை நடத்திச் செல்கிறேன் என்பதை, எப்போதுமே நம்பவேண்டும்." அவன் பயபக்தியாக அதை முணுமுணுத்தான். அவன் கிளர்ச்சியுடன் சுழன்று, மற்றப்பெரிய மனிதனுக்காகத் திரும்பிச்சொன்னான். "அரி நீ இன்று வந்திறங்கிய இடத்தையே நினைத்துப்பார் ஒருகாலத்தில் சலாமிஸ் (salamis) நகரம் அங்கே இருந்தது. சலாமிஸ் நகரில்தான் பார் கொச்பா (Bar Kochba) புரட்சி முதலாம் நூற்றாண்டில் தொடங்கியது. அவன் ரோமர்களை எமது மண்ணில் இருந்து விரட்டியபின் யூதாவின் இராட்சியத்தை மீள ஸ்தாபித்தான். தடுப்பு முகாம்கள் அருகே ஒரு பாலம் இருக்கிறது. அதை யூதர்களின் பாலம் என அழைப்பார்கள். அதை, கடந்த இரண்டாயிரம் வருடங்களாக அப்படியே அழைத்து வருகிறார்கள். இந்தவிடயங்களை என்னால் மறந்துவிட முடியாது.

தொடரும்

## உலக அரங்கு

# வட அயர்லாந்து

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் பலன் தருமா?

வட அயர்லாந்துக்குச் சமாதானத்தைக் கொண்டு வரும் நோக்குடன், 'சர்வ கட்சிப்' பேச்சுவார்த்தைகள் யூன் மாதம் 10ம் திகதி 'பெல்பாஸ்ட்' நகரில் ஆரம்பமாகியது. எனினும் ஐ.ஆர்.ஏ என அழைக்கப்படும் ஐரிஷ் விடுதலை இயக்கத்தின் அரசியல் அமைப்பான சின் பெய்னுக்கு இப்பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படவில்லை. ஐ.ஆர்.ஏ அமைப்பானது போர் நிறுத்தத்துக்கு மீண்டும் ஒத்துக்கொள்ளவில்லை என்ற காரணம் காட்டியே, சின் பெயின் தலைவர் ஜெரி அடம்சுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

> அமெரிக்காவில் 40 மில்லியன் ஐரிஷ் அமெரிக்கர்கள் இருப்பதும், இவர்கள் வட அயர் லாந்துப் போராட்டத்துக்கு நிதியுதவி வழங்குவதுடன், அரசியல் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான தினம், ஜெரி அடம்ஸ் மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்குடன் சென்றிருந்தாலும், காவற்காரர்கள் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெரி அடம்சின் தலைமைத்துவம் பற்றி தற்போது கத்தோலிக்கரின் ஒரு சாராரிடையேயும், புரட்டஸ்தாந்தரின் ஒரு சாராரிடையேயும் கேள்விகள் எழுந்துள்ளன.

ஐ.ஆர்.ஏ கடந்த 80 வருடங்களாக ஒரு இராணுவ அமைப்பாக இருந்துவருகிறது. ஐ.ஆர்.ஏ போர் நிறுத்தம் ஒன்றிற்கு இணங்குமாயின் விரைவில் சர்வ கட்சிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று அடம்ஸ் ஒன்றரை வருடங்களுக்கு முன் கூறியதால், அதன் தலைவர்கள் வன்செயல்களைக் கைவிட்டார்கள். எனினும், எதிர்பார்த்தபடி இச்'சர்வகட்சி' பேச்சு வார்த்தைகள் இடம் பெறவில்லை. எனவே வன்முறைப் போராட்டம் மூலமே தமது நோக்கினை அடையலாம் என்று கூறிய ஐ.ஆர்.ஏ இயக்கத்தினருக்குப் பதில் சொல்ல முடியாது ஜெரி அடம்ஸ் திக்குமுக்காடினார்.

பிரித்தானிய அரசின் நடவடிக்கைகளினால் சலிப்படைந்த ஐ.ஆர்.ஏ இயக்கத்தினர், பெப்ரவரி 9ம் திகதி இலண்டனில் வெடிகுண்டு ஒன்றை வெடிக்க வைத்து, 17 மாதமாக நிலவிய போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டனர். தாம் குண்டு வைக்கப் போகின்றோம் என்பதை ஐ.ஆர்.ஏ இயக்கத்தினர் ஜெரி அடம்சுக்கு அறிவிக்கவில்லை. இது, ஐ.ஆர்.ஏ இயக்கத்தினரைக் கட்டுப்படுத்தும் செல்வாக்கு ஜெரி அடம்சுக்கு இருக்கின்றதா எனும் கேள்வியை எழுப்பியுள்ளது. எனவே பிரித்தானியா, மற்றும் அயர்லாந்து அதிகாரிகளுடன் அடம்ஸ் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்போது, அவரால் அதிகார தோரணையில் அழுத்தம் கொடுத்து நடந்துகொள்ள முடியாதுள்ளது.

அடம்ஸ் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார் என, பிரித்தானிய அரசு குற்றம் சுமத்திய அதேவேளை, அமெரிக்கர்களும் அதிருப்தியடைந்தவர்களாகக் காணப்பட்டனர். பில் கிளிண்டனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் அடம்ஸ் தனிப்பட்ட உறவுகளை வளர்த்திருந்தார். இக்குண்டு வெடிப்பையடுத்து, குறுகிய காலத்துக்கு அடம்சின் தொலைபேசி அழைப்புக்கள் அவரால் உதாசீனம் செய்யப்பட்டது எனக் கூறப்படுகிறது. எனினும், அடம்சுடனான தொடர்புகளை அறுப்பதன் மூலம் நன்மை பயப்பதை விட, கூடுதலாகத் தீமையே விளையும் என பிற்பாடு இவர்கள் உணர்ந்துகொண்டனர்.

அமெரிக்காவில் 40 மில்லியன் ஐரிஷ் அமெரிக்கர்கள் இருப்பதும், இவர்கள் வட அயர்லாந்துப் போராட்டத்துக்கு நிதியுதவி வழங்குவதுடன், அரசியல் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யூன் மாதம் 15ம் திகதி மஞ்சஸ்டர் நகரின் மத்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பானது, நடந்துகொண்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இக்குண்டு வெடிப்பில் 200 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்ததுடன், குண்டு வெடித்த இடத்தில் இருந்து ஒரு சதுர கிலோ மீற்றருக்குட்பட்ட பகுதியில் உள்ள சுமார் 400 வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன எனவும் இவ்வழிவின் பெறுமானம் சுமார் 210 மில்லியன் டொலர்கள் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பின் பின்பான மிக மோசமான தாக்குதலாக இது கருதப்படுகிறது.

17 மாதகால போர் நிறுத்தத்தின்போது, புரட்டஸ்தாந்து யூனியனிஸ்ட் பேச்சுவார்த்தையில் ஈடுபடாத போது, இவ்வாறு இலண்டன் மாநகரில் குண்டுகள் வெடிக்கும் தருவாயில் பேச்சுவார்த்தையை அவர்கள் எவ்வாறு நடத்துவர் என்று எதிர்பார்க்கலாம் என அண்மையில் 'நியூஸ்வீக்' சஞ்சிகையின் நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அடம்ஸ், "இக்குண்டு வெடிப்புக்கள் அவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தாமல் இருக்க மேலதிக சாட்டுக்களை அளித்துள்ளது. ஆனால், மத்திய கிழக்கை எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு தடவையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தடங்கல்கள், முட்டுக்கட்டைகள் ஏற்பட்டபோது, "நாம் எமது முயற்சிகளை இருமடங்காக்கப் போகிறோம்" என ராபினும், அரபாத்தும் கூறினார்கள். தென்னாபிரிக்காவிலும் இதே மாதிரித்தான் நடைபெற்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரானவர்கள், தமது சொந்த நோக்கங்களுக்காக இப்பாதகமான குண்டு வெடிப்புக்களைப் பாவிக்கப்பார்க்கிறார்கள். ஆனால், எம்மைப் போன்ற ஏனையோரால் இச்சந்தர்ப்பங்கள் சரியான முறையில் பாவிக்கப்படல் வேண்டும்" எனக் கூறினார்.

> இக்குண்டு வெடிப்புக்கள் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தாமல் இருக்க மேலதிக சாட்டுக்களை அளித்துள்ளது. ஆனால், மத்திய கிழக்கை எடுத்துப் பாருங்கள் ஒவ்வொரு தடவையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தடங்கல்கள் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டபோது ""நாம் எமது முயற்சிகளை இருமடங்காக்கப் போகிறோம்"" என ராபினும், அரபாத்தும் கூறினார்கள்.

உண்மையில் கன்சர்வேடிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அண்மையில் எதிர்க்கட்சிக்குத் தாவியதனைத் தொடர்ந்து, ஜோன் மேஜர் இரண்டு மேலதிக உறுப்பினர் வித்தியாசத்தில் காலந் தள்ளிக்கொண்டிருக்கிறார். மேஜரின் பதவிக்காலம் 1997ஆம் ஆண்டு மே மாதம் வரை நீண்டிருக்கிறது. அது மட்டும் காலம் தள்ள, வட அயர்லாந்தின் ஒன்பது யூனியனிஸ்ட் அங்கத்தவர்களின் ஆதரவு தேவையாகவுள்ளது. எனவே பேச்சு வார்த்தையில் அவர்களின் விருப்பத்துக்கெதிராக ஓர் இணக்கம் காண்பது என்பது கடினமானதொன்றாக உள்ளது.

சேகரிக்கப்படும் பணம் எங்கு போகிறது எனப் பலவித வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இவ்வேளையில், சின்பெயின் அமெரிக்காவில் பணம் சேகரிக்க அனுமதிக்கப்படலாமா எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அடம்ஸ் "தாம் சேர்க்கும் பணத்துக்கும், ஐ.ஆர்.ஏ இன் ஆயுதக் கொள்வனவுக்கும் எதுவித தொடர்பில்லை. எனவே, இது பற்றி யாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை எனக் கூறினார்.

கடந்த வருடத்தில் மட்டும் சின்பெயின் அமெரிக்காவில் 1.3 மில்லியன் டொலர்கள் நிதி சேர்த்தது இங்கு குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 1997 மார்ச் 12ம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள நிதி சேகரிப்பு வைபவத்தில் கலந்துகொள்ள விசா வழங்குமாறு அடம்ஸ் விண்ணப்பித்துள்ளார். இவ் இரவுணவின்போது ஒரு தட்டுக்கு ஆயிரம் டொலர்கள் அறவிடப்படவுள்ளது என்பது கவனிக்கத்தக்கது..

இதேவேளை, ஜெரி அடம்சுக்கு அமெரிக்கா விசா வழங்குவதைப் பிரித்தானிய அரசு கண்டித்துள்ளது. 1994ல் ஜெரி அடம்ஸ் அமெரிக்கா வருவதற்குப் பில் கிளிண்டன் முதற் தடவையாக அனுமதி வழங்கியிருந்தார். மேற்கொண்டு இலண்டனில் குண்டு வெடிப்புக்கள் இடம் பெறாது போனால், அடம்சுக்கு விசா வழங்கப்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.

எனினும் ஐ.ஆர்.ஏ போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தாதுவிட்டால், அமெரிக்காவில் அடம்சின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்குத் தடைகள் ஏற்படலாம்.

அமெரிக்காவின் திரைமறைவு ஆதரவுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதற்கான புதிய திட்டங்கள் தற்போது வகுக்கப்படுகின்றன என அறிய வருகிறது. இலண்டன், டப்ளின் அரசுகளினால் உருவாக்கப்படும் இப்பொதியில், வட அயர்லாந்தில் பொதுத்தேர்தல் நடாத்துவது பற்றியும் இதனைத் தொடர்ந்து சர்வ கட்சிப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. ஆனால், "சர்வ கட்சி பேச்சுவார்த்தைகளே உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டியவை" என வற்புறுத்திக் கூறும் அடம்ஸ், "தேர்தல்கள் போன்ற ஏனைய விடயங்கள் இப்பேச்சு வார்த்தைகளின் அங்கமாக இருக்க வேண்டுமேயன்றி, முன்நிபந்தனைகளாக இருக்கக் கூடாது" எனக் கூறுகிறார்.

சர்வகட்சி பேச்சு வார்த்தைகளை ஒழுங்கு பண்ணி, பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கும் வட அயர்லாந்தின் சின் பெயினையும் அதில் பங்குகொள்ளச் செய்தால் அன்றி, தற்போது பெல்வாஸ்டில் இடம்பெறும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பலன் தராதென்றே கூறவேண்டும். *

சாள்ஸ் தேவசகாயம்

# அனைவரும் ஒன்றே

"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியற் பரவலாக்கற் திட்டத்தை நிறைவு செய்வதிற் பல நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன". இவ்வாறு அமைச்சர் பீரிஸ் வெளியிட்டதன் மூலம் தனது பொறுப்பில் இருந்து அரசு பின்வாங்க முனைகின்றமை வெளிப்படுகின்றது. அதாவது, இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென அரசு முன்வைத்த தீர்வு யோசனைகளுக்கு அரசியற் கட்சிகளிடமிருந்து போதிய ஆதரவு கிடைப்பதாக இல்லை. ஆகையினாற் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று நிறைவேற்றுவது என்பது நடைமுறைச் சாத்தியம் அற்றதொன்று என்பது அரசு கூறும் காரணமாகும். அரசின் கூற்றுக்கள் வெளிப்பார்வைக்கு நியாயமுள்ளவைபோல் இருப்பினும் அரசு, இத்தீர்வுத் திட்ட யோசனைகளில் எந்தளவிற்கு மனப்பக்குவமாகச் செயற்படுகின்றது என்பது கேள்விக்குறியே. ஏனெனில் அதிகாரப் பரவலாக்கற் திட்டத்தை முன்வைத்த அரசு, அவற்றிற் பெரும் பகுதியைத் தானே வாபஸ் பெற்றுக் கொள்வதன் மூலம் இவ்விடயத்தில் அது உறுதியுடன் இல்லை என்பதை அப்பட்டமான உண்மையாக்குகின்றது. இராணுவத்தீர்வு காணமுடியாத பிரச்சினை ஒன்றிற்கு, இராணுவத் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையைச் சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் அரசு முனைப்பாகவே உள்ளது. நாட்டின் பெரும் தொகை நிதியை அரசு போர்ச் செலவீட்டுக்கென ஒதுக்கியுள்ளபடியாற் சிங்களவர்கள் மத்தியில் அரசியற்தீர்வு ஏன்; இராணுவத்தீர்விலேயே கண்டுவிடலாம் என்ற மனோநிலையை உருவாக்கியது. அதாவது, ஒருபுறம் போர் என உரத்த குரலிலும் மறுபுறம் அரசியற்தீர்வு எனப் பலவீனமான குரலிலும் அரசு, பேசுவது இராணுவத்தீர்விற் சிங்களவர்களுக்கு அதிக நம்பிக்கையை ஏற்றுவதாகவே உள்ளது. இந்த வகையில் அரசின் தீர்வுக்கு எவ்வாறு மக்கள் மத்தியில் ஆதரவைத் திரட்ட முடியும்? அரசியற் தீர்வை மக்கள் எதிர்க்கும் போது அதன் அவசியத்தை வலியுறுத்தாமல் போரை முதன்மைப்படுத்தும் அரசு, எவ்வாறு அரசியற் தீர்வினை முன்வைக்க முடியும்? அரசு, அரசியற் தீர்வில் இவ்வாறு பின்னடிக்கின்றதென்றால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியோ தாம் ஒற்றையாட்சி அமைப்பைத் தவிர வேறு எந்த அமைப்பையும் ஏற்கப் போவதில்லை எனக் கூறியுள்ளது. ஏனெனில் இது நாட்டின் ஐக்கியத்தைப் பாதிக்கும் என்பது அவர்களின் வாதம். இது பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் குரலை முழுமையாக ஏற்பதாகும். இவ் விவாதமானது எத்துணைப் பொருத்தப்பாடானது? அதாவது, தன்னாட்சி என்பது நாடொன்றின் ஐக்கியத்துக்கு முரணானது எனக் கூறுவது எந்தளவிற்குச் சரியானது? சமஸ்டி ஆட்சி நிலவும் நாடுகளில் நாட்டின் ஒருமைப்பாடு நிகழ்வில்லையா? ஒற்றையாட்சி இருக்கும் நாடுகள் எவையும் பிரிவினைக்குப் போராடவில்லையா? அல்லது ஒற்றையாட்சியில் இருந்து சமஸ்டிக்கு மாறிய அரசுகள் யாவும் பிரிந்து போய்விட்டனவா?

> இனப்பிரச்சினைக்கு, பௌத்த சிங்கள பேரினவாதத்தை வெளிப்படையாக முன்வைக்கும் இராணுவத்தீர்வு என்பதே பொதுசன முன்னணியினதும், ஐ.தே. கட்சியினதும் உள்ளக்கிடக்கையாகும். இவர்கள் அரசியற் தீர்வு, அதிகாரப் பகிர்வு என்று பேசுவதெல்லாம் தம்மை ஒரு சனநாயகவாதிகள் என உலகம் நம்பிக்கொள்ளும் என்பதற்கே!

இந்தவகையில் ஐ.தே.க ஒற்றையாட்சி முறையின் கீழ்த்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக்கூறிப் போடும் முட்டுக்கட்டையானது, சந்திரிகாவின் அரசு, அதிகாரப் பரவலாக்க முறையின் கீழ்த் தீர்வு எனக்கூறி இராணுவத்தீர்வுக்கு முயற்சிப்பதில் இருந்து ஒன்றும் வேறுபட்டதல்ல. ஏனெனில் இருதரப்பினரதும் நடவடிக்கையானது, அரசியற் தீர்விற்குப் போடும் முட்டுக்கட்டை என்பதிற் சந்தேகமில்லை. பொதுப்படையாகப் பார்க்கப் போனால் ஆட்சியிலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியாயினும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும் ஐ.தே. கட்சியாயினும் சரி இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு ஒன்றின் மூலம் தீர்வு காணமுடியவில்லை எனக் கூறலாம். அதாவது இராணுவத்தீர்வு பௌத்த பேரினவாதத்தை வெளிப்படையாக முன்வைக்கும் என்பதே இரு கட்சிகளினதும் உள்ளக்கிடக்கையாகும். ஆனால், இவர்கள் அரசியற் தீர்வு குறித்தும், அதிகாரப் பகிர்வு குறித்தும் பேசுவதெல்லாம் தம்மை ஒரு சனநாயகவாதிகள் என உலகம் நம்பிக்கொள்ளும் என்பதற்கேயாகும். இது அவர்களுக்கு மட்டுமல்ல, உலகில் இவர்களை ஆதரித்து நிற்பவர்களுக்கும் நிதி வழங்குபவர்களுக்கும் ஏன், கொழும்பில் தங்கியுள்ள அரசியற் கட்சிகளுக்கும் இது அவசியமானதாகவே உள்ளது.✤

# அரசின் குறுக்குவழியும் அதிகரித்த நெருக்கடியும்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தனது மந்திரிசபையை அமைத்ததோடு, சிறிலங்காவில் 'இதுவரை இருந்த அமைச்சரவைகளில் புத்திஜீவிகளையும் துறை சார்ந்தவர்களையும் கொண்ட அமைச்சரவை இது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஆகையினால், இலங்கையிற் காணப்படும் சகல பிரச்சினைகளிலும் முன்னேற்றகரமான அணுகுமுறைகள் காணப்படும்; கடந்த 17 ஆண்டு கால ஆட்சியில் ஐ.தே.கட்சி தீர்க்கத் தவறிய பிரச்சினைகள் யாவற்றிக்கும் தீர்ப்பு காணப்படும் என்றும் கருதப்பட்டது. இக்கருத்துக்கு ஏற்ற வகையிலேயே அமைச்சரவையில் ஒரு முன்னாள் துணைவேந்தர், பல்கலைக்கழகச் சிரேஸ்ட விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள் எனப் பலர் அங்கம் வகித்ததோடு, சிறிலங்கா ஐக்கியத்திற்கு தலைமை தாங்கிய சனாதிபதிகளின் கல்வித்தரம் மிக்கதற்கான சான்றிதழ்களைக் கொண்டிருந்த சந்திரிகா, அமைச்சரவைக்குத் தலைவராகவும் இருந்தார். இவர்களின் தகமைகளுக்கு ஏற்ப ஆரம்பப் பேச்சுக்களும் இருந்தன. இன்றுகூடச் சிலசமயம் அவ்வாறான பேச்சுக்களையே அவர்கள் பேசுகின்றனர்.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், அமைச்சர் பீரிஸ் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்று வலியுறுத்திப் பேசுவதையும் தொடர்ச்சியான இராணுவச் செலவீட்டு அதிகரிப்பையும் அரசினால் தாங்க முடியாமல் போகுமென எச்சரிப்பதையும் சுட்டிக்காட்ட முடியும். இராணுவச் செலவீனங்கள் ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்லுமானால், நாட்டின் பொருண்மியத்தின் மீது பாரிய அளவினதான அழுத்தம் ஏற்படும். இந்த அழுத்தம் வேலைவாய்ப்பை மழுங்கச் செய்யும் – மூலவளங்களையும் பயனற்றதாக்கிவிடும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் பீரிஸ் மேலும், போர் ஏற்படுத்தியுள்ள பொருண்மிய அழுத்தம் காரணமாகத் தனியார் நிறுவனக் கடன்களைக் கையாள்வதிற் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதும், அதன் காரணமாக வேலைவாய்ப்புக்களில் மாற்றங்களும் தடங்கல்களும் தோன்றியுள்ளன. எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டியது அவசியமாகிறது எனப் பேசியுள்ளார்.

இவ்வாறான எச்சரிக்கைகள் அமைச்சரவையின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்ட போதும் அவர்களின் செயற்பாடுகள் எவையுமே ஐக்கிய தேசியக் கட்சி விட்டுச் சென்ற எந்தப் பிரச்சினையையுமே தீர்க்க உதவியாக இருக்கவில்லை. மாறாக, இனப்பிரச்சினையில் இருந்து சகல பிரச்சினைகளுமே முன்னரைவிடத் தீவிரமாகியுள்ளதோடு, என்றுமில்லாதவாறு நாடு முழுவதிலும் நிலைமை மோசமடைந்துள்ளது. இது இவ்வாறு செல்வதற்கு, அரசின் பேச்சிற்கும் – செயல்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடே காரணமாகும். சுருக்கமாகக் கூறுவதானால் அரசு, மக்கள் எதிர்பார்ப்பது போன்று தனது புத்திஜீவித்தனத்தை, பிரச்சினையைத் தீர்க்கும் நேர்வழியிற் பயன்படுத்தாமற் குறுக்குவழியைப் பயன்படுத்தியமையே காரணம் ஆகும். இதற்கு இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தைச் சுட்டிக்காட்ட முடியும்.

> இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு ஒன்று மட்டுமே காணமுடியும் என்பது வரலாறு தந்துள்ள பாடம். ஆனால், இவ்வாறு இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியற்தீர்வு என்பதைப் பேச்சளவில் மட்டுமே கொண்டுள்ளது. அரசியற் தீர்வு காண்பதற்கான எந்த ஒரு சூழ்நிலையையும் ஏற்படுத்த அது முயற்சிக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு ஒன்று மட்டுமே காணமுடியும் என்பது வரலாறு தந்துள்ள பாடம். ஆனால், இவ்வாறு இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியற்தீர்வு என்பதைப் பேச்சளவில் மட்டுமே கொண்டுள்ளது. அரசியற் தீர்வு காண்பதற்கான எந்த ஒரு சூழ்நிலையையும் ஏற்படுத்த அது முயற்சிக்கவில்லை. அத்தோடு, பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கூட ஏற்பட்ட முட்டுக்கட்டைகளைத் தீர்க்க அது முன்வரவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளுக்கெதிரான பெரும் எடுப்பிலான பிரச்சாரத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்வதில் அக்கறை காட்டியது. இதில் இராஜதந்திர முயற்சிகளும் அடங்கும். வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் இதிற் பகீரத முயற்சியை எடுத்துள்ளார். ஆனால், உண்மைக்கு மாறான இப் பிரச்சாரம் எவ்வளவு காலத்திற்கு நம்பிக்கை கொடுக்க முடியும். குறிப்பாக, இராணுவ வெற்றியானது புலிகளைப் பலவீனமடையச் செய்து அவர்களின் குரலை நசுக்கிவிடும் என்றும் அதன் மூலம் தமது பிரச்சாரத்தை யதார்த்தமாக மாற்றிவிடலாம் எனவும் அரசு கருதியுள்ளது.

ஆனால், வரலாற்றின் போக்கைத் தனது பிரச்சாரத் தந்திரத்தினால் மாற்றிவிடலாம் என்ற, ஆட்சியிலுள்ள புத்திஜீவிகளின் திட்டம் தோல்வி கண்டது. போரை முடிவுக்கு கொண்டு வர அரசினால் முடியவில்லை. மாறாக, யதார்த்தத்தை மாற்ற முனைந்ததின் விளைவாகப் பெரும் நெருக்கடிகளையும் சுமைகளையுமே அரசு எதிர்கொள்ள வேண்டி வந்துள்ளது. இந்நிலையுமே இன்று முழுமை பெற்றதாக இல்லை. நெருக்கடிகளின் தொடக்கத்திலேயே அரசு உள்ளது. இன்னும் சிறிது காலம் செல்லவே நெருக்கடியின் முழுவடிவமும் தெரியும். அது, புத்திஜீவித்தனத்தைக் குறுக்குவழியிற் செலுத்திய பலாபலனாகவே அமையும். ✷

## சிறுகதை

# தவிப்பு



தாமரைச்செல்வி

காலை பத்து மணிக்கு மேல் அந்தச் செய்தி நகரெங்கும் காட்டுத்தீயாக பரவியது. "மணலாற்றில சண்டை தொடங்கிட்டுதாம். காயப்பட்ட பிள்ளையளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருகினமாம்". ஆ.........வென்று நகரம் அதிர்ந்தது.


போக்குவரத்து ஒருவித பரபரப்புடன் சீராய் மாறியது. நீல உடைப்பொலீஸ், தெருநீளம் நின்று பிரயாணிகளை நிதானப்படுத்தியது. வேகமாய் வந்த வாகனங்கள் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து திரும்பின.

பன்னிரண்டு மணிக்கு மேல் ஆஸ்பத்திரியை மொலு மொலுவென சனம் சூழ்ந்து கொண்டது.

> எல்லோர் முகங்களிலும் ஏக்கம்... தவிப்பு...... கண்ணீர்....... என்ர பிள்ளையும் சண்டைக்குப் போயிருக்குமோ என்ற கலக்கம். காயப்பட்டதுகளில ஒன்றாய் இருக்குமோ என்ற பதறல்.........

எல்லோர் முகங்களிலும் ஏக்கம்.......... தவிப்பு..........கண்ணீர்.......... என்ர பிள்ளையும் சண்டைக்குப் போயிருக்குமோ என்ற கலக்கம். காயப்பட்டதுகளில ஒன்றாய் இருக்குமோ என்ற பதறல்......... வாய்க்குள் பெரும் நெருப்பு எரிந்தது.

காயப்பட்டுக் கொண்டுவரும் போராளிகளுக்கு உதவி செய்ய வந்திருந்த இளைஞர்கள் ஆட்களைக் கட்டுப்படுத்த இயலாமல் திகைத்தார்கள். சர்.... .......சர்ரென்று வந்து நின்ற வாகனங்களிலிருந்து காயப்பட்டவர்களை இறக்கி உள்ளே கொண்டுபோகும் ஒவ்வொரு தடவையும் அழுகுரல் எழுந்தது.




அழுது கொண்டிருந்தவர்கள் தவிர, என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தவர்கள் ஒருபுறம் நெரிந்தார்கள். "அண்ணைமார்! இங்க நிற்காமல் உள்ள வந்து உதவி செய்யுங்கோ. இல்லை புதினம் பார்க்க வந்தது எண்டால் வெளியாலை போங்கோ" உதவிக்கு வந்த இளைஞர்கள் வந்தவர்களுடன் மல்லுக்கு நிற்கவேண்டியதாயிற்று.

முன்புறம் மாமர நிழலில் கூட்டமாய் நின்றவர்கள் முகங்களில் கலக்கம்.

அந்த நேரம்தான் செல்லத்துரை பதறியடித்துக் கொண்டு உள்ளே வந்தார். சைக்கிளைப் பாதுகாப்பு நிலையத்தில் விட்டுவிட்டு ஆஸ்பத்திரி வாசலுக்குள் நுழைந்தார். காலத்தின் சுமைகளின் அழுத்தங்களினால் களைத்துப்போன முகம். இழுப்பு வருத்தத்தினால் ஒடுங்கிப்போன உடல், வெய்யிலில் ஆறுமைல் சைக்கிள் ஓடியதில் ஏற்பட்ட களைப்பு......... அதையும் மீறி மனத்தில் ஏற்பட்ட பதைப்பு.........

காலையில் தோட்டத்தில் வாழைக்குக் கொத்திக்கொண்டு நின்றபோதுதான் கணேசு வந்து செய்தியைச் சொன்னான். ஆடிப்போய்விட்டார். "அய்யோ......... என்ர பிள்ளையும் மணலாற்றுப் பக்கந்தானே நிற்கிறதாய் வேற பிள்ளையள் சொன்னதுகள்........"

நெஞ்சுக்குள் எதுவோ வந்து அடைத்துக் கொண்டதுபோல் இருந்தது. வீட்டுக்குப் போய் மனைவிக்குக் கூட சொல்லவில்லை. தோட்டத்தில் நின்றபடி அப்படியே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார்.

'சேட்'டுக்கூட போடாமல் தோளில் போட்ட துவாயோடு வந்துவிட்ட அந்த ஏழ்மைக் கோலம் பற்றி அவர் கவலைப்படவில்லை. நெஞ்சுபதற எங்கே போய் யாரிடம் விபரம் கேட்பது என்று மலைத்துப் போய்நின்றார்.

காலையில் குடித்த வெறும் தேனீர் எப்போதோ வயிற்றுக்குள் ஆவியாகிவிட, இப்போது தலையைச் சுற்றியது. பசியை மீறி வயிற்றுக்குள் கலவர இரைச்சல்.........

விறாந்தை அருகில் தயங்கி நின்றவரிடம், "இப்ப உள்ள போக ஏலாது பெரியவர். அங்கால போய் நில்லுங்கோ........" அந்த இளைஞன் இதமாகச் சொல்லிவிட்டு வாகனம் வரும் வழியை ஒழுங்குபடுத்தினான்.

வந்து நின்ற வாகனத்திலிருந்து இரத்தம் தோய்ந்த கட்டுடன் மூன்று இளைஞர்களை இறக்கி உள்ளே கொண்டுபோக, அவர் வயிறு சுருண்டது. அவரையும் அறியாமல் கண்கள் கலங்கின. "கடவுளே ஆர் பெற்ற பிள்ளையளோ.........."

வெய்யில் கொழுத்திக் கொண்டிருந்தது. முகத்தில் வழிகின்ற வியர்வையைத் தோள்த் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். வாசலையே பார்த்தபடி நின்றார்.

சுற்றி நின்றவர்களில் பேச்சுக்கள் காதில் விழுந்தது.

"கன பிள்ளையளுக்குக் காயமாம். கொஞ்சம் பெரிய சண்டை போலக் கிடக்கு."

"ஓம்...... ஓம்...... நிலவரத்தைப் பார்த்தா கவலையாய்த்தான் கிடக்கு"

"எங்கட ராசலிங்கத்தாற்ற மகனுக்கும் கடுங்காயமாம். தாய் தகப்பனுக்கு இப்பதான் அறிவிச்சிருக்கு"

'அய்யோ......... என்று மனம் தழும்பியது.

துவாயால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார். கடவுளே......... இத்தினை பிள்ளையளுக்குப் பாதிப்பு வந்திட்டுதே........ அன்பரசனும் இந்தச் சண்டைக்குப் போயிருப்பானோ இல்லையோ........

அன்பரசன் அவர்களது மூத்த மகன். திருமணம் செய்து எட்டு ஆண்டுகளின் பின்னர் பிறந்தவன். அவனுக்குப் பிறகு இரண்டு பேர். அன்பரசன் அவர்களை விட்டுப்போய் எட்டு ஆண்டாகிறது.

இந்த இடைநாட்களில் எங்கே சண்டை என்றாலும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கும் நிலை. ஆண்டில் இரண்டு, மூன்று தடவை வீட்டிற்கு வருவான். இப்போது பிள்ளையைப் பார்த்தும் ஆறு மாதமாய் விட்டதே என்று மனம் ஏங்கியது.

மணலாற்றுப் பக்கம் அவன் நிற்பதாய்த்தான் மற்றப் பிள்ளையள் சொல்லியிருந்தார்களே என்று மனம் கலங்கினார்.

திடீரென்று தலையைச் சுற்றுவது போல் இருந்தது.

சாரத்தின் இடுப்பு மடிப்புக்குள் பத்து ரூபா இருக்கிறது. ஒரு வடை சாப்பிட்டு, தேநீர் குடிக்கப் போதுமானது. ஆனால், எதுவும் குடிக்க அவருக்கு மனம் வரவில்லை.

கொஞ்சம் ஒதுங்கி, கட்டிட ஓரத்தில் நின்றார். ஆஸ்பத்திரிக்கே உரிய வாசனை. வழக்கமான மருந்துகள் எடுக்க வந்தவர்களின் நெரிசல்......... குழந்தைகள் வீறிட்டு அழும் குரல்கள்.

வேகமாக வந்து நின்ற மோட்டார் சைக்கிளிலிருந்து இரண்டு இளைஞர்கள் இறங்கி அவசரமாக உள்ளே போனார்கள். அவர்களில் ஒருவனை முன்பு பார்த்தது போல் இருந்தது அவருக்கு. உற்றுப் பார்க்கும் முன் அவர்கள் உள்ளே போய்விட்டார்கள். முன்பே தெரிந்தவனாய் இருந்தால் ஏதும் விபரம் கேட்கலாம்.

நேரம் போகப் போக பதட்டம் பிடித்துக் கொண்டது. இந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் யாராவது தனக்குப் பழக்கமானவர்களா என்று யோசித்துப் பார்த்தார். அப்படிப் பார்த்தும் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாய் யாரும் இல்லை என்றே தோன்றியது. அவர் யோசனையோடு சுற்றும் முற்றும் பார்த்தார்.

அப்போது.......... பாதுகாப்பு நிலையத்துக்குள் சைக்கிளை விட்டு விட்டு உள்ளே நடந்துவரும் அந்த உயரமான மனிதரைக் கவனித்தார்.

நீளக்காற்சட்டையும் வெள்ளைச் 'சேட்'டும் அணிந்து வருபவர் இங்கு வேலை செய்பவராக இருக்கக்கூடும் என்ற எண்ணம் மனதுள் பளிச்சிட்டது. பார்க்கக் கொஞ்சம் படித்த, விபரம் தெரிந்த மனிதராய் தோன்றியமை, மனதுக்கு நம்பிக்கையைத் தந்தது.

எப்படியும் தன்னை விட ஐந்தாறு வயது குறைவாய் இருக்கக்கூடும் என்ற ஊகிப்பில் "தம்பி........" என்று கூப்பிட்டார். அவர் சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தார். ஒரு வினாடி பார்த்துவிட்டு அருகில் வந்தார்.

"தம்பி! இங்க காயப்பட்டு வந்திருக்கிற பிள்ளையளை பார்க்கலாமே......... என்ர பிள்ளையுமோ தெரியேலை......... என்ர பிள்ளையும் மணலாற்றிலதான் நிற்குது எண்டு சொன்னவை" சொல்லும் போது குரல் உடைந்தது.

அவர் ஒரு வினாடி செல்லத்துரையை அனுதாபத்தோடும் ஆதரவோடும் பார்த்தார். அந்த ஏழ்மைக்கோலமும் பரிதவித்த முகமும் பசிக்களைப்பும் தெரிந்த கண்களும் அவர் மனதை நெகிழ்த்தியிருக்க வேண்டும். அவர் முகத்தில் மிகுந்த வருத்தம் தென்பட்டது.

> "மணலாற்றில சண்டை தொடங்கிட்டுதாம். காயப்பட்ட பிள்ளையளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருகினமாம்".

"நான் வெள்ளணவே வந்து நிற்கிறன் தம்பி. தண்ணிவென்னிகூட குடிக்கப் போகேலை. ஆரிட்ட விபரம் கேட்கிறது எண்டு தெரியேலை........" எங்கே இவர் மறுத்து விட்டுப் போய்விடுவாரோ என்ற பயத்தில் அவசரமாய் வார்த்தைகள் வெளிவந்தன.

"கவலைப்படாதேங்கோ ஐயா, இப்ப உடனும் ஒண்டும் அறிய ஏலாது. உள்ள போய் விசாரிச்சுப் பார்க்க வேணும். இப்பிடி வெய்யிலுக்குள்ள பசியோட நிண்டு என்ன செய்யப் போறீங்கள்."

"எனக்கு இப்ப என்ன சாப்பாடு........ பிள்ளையைப் பற்றி ஏதும் அறிஞ்சாப் பிறகுதான் நெஞ்சுக்க தண்ணி வரும்." அவர் ஒரு வினாடி நின்று யோசித்தார்.

"சரி ஐயா. நான் விசாரிச்சு வந்து சொல்லுறன். யோசிக்காதையுங்கோ, பிள்ளைக்கு என்ன பேர்?"

"அன்பரசன்"

"சொந்தப் பேரையும் சொல்லுங்கோ"

"செல்லத்துரை குணநாதன்"

"சரி ஐயா. நான் உள்ள போய் விசாரிச்சுக் கொண்டு வாறன். நீங்கள் அந்தா அதில இருக்கிற கடையில ஏதும் சாப்பிட்டு,

தொடர்ச்சி 16 ம் பக்கம்...

# புலிகள் இயக்கம் ...

இணைக்கப்பட்டன" என அவர் கூறினார். அவர் மேலும் கூறுகையில், "தமிழர்கள் தங்களைத் தனியான ஒரு தேசிய இனம் என்றும் கருதுகின்றனர்: அவர்களுக்குத் தனியான தாயகம் உண்டு. ஆகவே, புலிகள் இயக்கம் ஒரு தேசிய இயக்கமாகும்" என்றார்.

> "ஜெனீவா பிரகடனத்தின் மேலதிகக் குறிப்பின்படி புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கமாகும். புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் எனக் குற்றம் சாட்ட முடியாது""
>
> -பேராசிரியர் பிரான்சிஸ் பொயிலி (இல்லினொயிஸ் பல்கலைக்கழகம் - அமெரிக்கா)

### பேராசிரியர் பீற்றர் சால்க்

சுவீடன் பேராசிரியரான பீற்றர் சால்க் நிபுணத்துவ சாட்சியம் அளிக்கையில், "சிங்கள ஆட்சிக்கெதிரான தனது போராட்டத்தைத் திரு. பிரபாகரன் அவர்கள், பிரித்தானிய ஆட்சிக்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் ஒப்பிட்டுள்ளார்" எனத் தெரிவித்தார். "ஒரு முழுமையான தியாகமாகவே உயிர்த் தியாகத்தைப் புலிகள் கருதுகின்றனர்" என்று கூறிய அவர், கரும்புலிகளுக்கும் 'ஹமாசின்' தற்கொலைக் குண்டுதாரிகளுக்கும் இடையேயான வேறுபாட்டை விளக்குகையில், "கரும்புலிகளின் தியாகச் செயலுக்கு மதரீதியான நியாயத்தன்மைகள் கற்பிக்கப்படுவதில்லை" என்றார். உயிர்த் தியாகம் தொடர்பான புலிகளின் கொள்கை மதச்சார்பற்றது. அத்துடன், புலிகளது தாக்குதல் இலக்குகள் பெரும்பாலும் இராணுவ இலக்குகளாகும்" என்றும் அவர் விளக்கினார். மேலும் கூறுகையில், "சயனைட் உட்கொள்வது என்பதை சாவை அரவணைப்பதற்கான ஒரு நடைமுறையாகப் புலிகள் கருதவில்லை: அதற்கு மாறாக, மற்றவர்களைப் பாதுகாத்து–உயிர்வாழவைக்கும் ஒரு நடவடிக்கையாகவே அதைக் கருதுகின்றனர்" என்றார். "1988ஆம் ஆண்டு, ஜெனீவா ஒப்பந்தத்தில் புலிகள் கையெழுத்திட்டனர்" என்று தெரிவித்த அவர், "அந்த நாளில் இருந்து நீதிக்குப் புறம்பான கொலைகளில் ஈடுபடவில்லை" என்று வலியுறுத்தினார். மேலும், "புலிகள் ஒரு விடுதலை இயக்கம் மட்டுமல்ல, அது ஒரு சமூக இயக்கமும் ஆகும்" என்று கூறினார். "சாதிய முறைமையையும், சீதன வழக்கத்தையும் புலிகள் இயக்கம் ஒழித்துவிட்டது" என்று கூறி, அதை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அத்துடன், "பாரம்பரியமாக இருந்துவந்த தேசவழமைச் சட்டத்தின் விதிகளில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து, ஒரு சிறந்த நீதி அமைப்பொன்றைப் புலிகள் அமுல்படுத்துகின்றனர்" என நீதிமன்றிற்கு விளக்கினார். அதேவேளை, "தேசத் துரோகத்திற்கும் சமூக விரோதக் குற்றங்களுக்கும் இடையே தெளிவான வரையறைகளைப் புலிகள் வகுத்துள்ளனர்" என்றும் சுட்டிக்காட்டினார்.

> "கனடாவிடம் வெளிநாட்டுப் புலனாய்வுச் சேவை இல்லை. புலிகளுக்கு எதிரான இரகசிய சேவைகளான இந்திய - சிறிலங்கா புலனாய்வு நிறுவனங்களிடமிருந்து கனடா பெறும் புலிகள் பற்றிய புலனாய்வுத் தகவல்கள் நம்பகத்தன்மை அற்றவையே""
>
> -பேராசிரியர் விற்றகன்

> "தமிழரின் தகைமை பெற்ற இராணுவக் கட்டமைப்பாக புலிகள் இயக்கம் இருக்கிறது. சீருடை அணிந்தவர்களாகப் போராளிகள் உள்ளனர். ஒழுங்கான முறையில் கட்டளை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது""
>
> -சட்டத்தரணி கரன் பாக்கர் (மனித உரிமைகள் விவகார நிபுணர் - அமெரிக்கா)

'யாழ் நூல்நிலைய எரிப்பை' ஒரு பண்பாட்டுப் படுகொலையாக, பீற்றர் சால்க் வர்ணித்தார். கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சர், காமினி திசநாயக்காவே அந்த நூல்நிலைய எரிப்பிற்குப் பொறுப்பு என, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா விடுத்த அறிக்கையையும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார். அத்துடன், "தனிநாடு ஒன்று அமைவது பற்றிய மக்கள் ஆணையை, 1977 தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் வழங்கிவிட்டனர்" என்றும் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

### திரு. சாம் துரைச்சாமி

கனடாவாழ் தமிழர்களின் ஒன்றியம்–மற்றும் ஈழத்தமிழர் சங்கம் ஆகியவற்றின் தலைவரான சாம் துரைசாமி விளக்கமளிக்கையில், "உலகத் தமிழர் இயக்கத்தின் இணைப்பாளர்தான் சுரேஷ்:

> "தமிழர்கள் தங்களைத் தனியான ஒரு தேசிய இனம் என்று கருதுகின்றார்கள். அவர்களுக்குத் தனியான தாயகம் உண்டு. ஆகவே புலிகள் இயக்கம் ஒரு தேசிய இயக்கமாகும்""
>
> -கலாநிதி. டக்மர் கெல்மன் ராஜநாயகம் (ஜேர்மன் - மலேசிய இணைந்த பல்கலைக்கழகம்)

இந்த அமைப்பு தமிழரின் தன்னாட்சி உரிமைப் போருக்கு ஆதரவளிக்கின்றது. அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை அது ஏற்றுக்கொண்டுள்ளது" என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், "புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று எப்போதுமே கனடிய வெளிவிவகார அமைச்சு அறிக்கை விடவில்லை: அதேவேளை, புலிகளும்–சிறிலங்கா அரசும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக் காணவேண்டும் என்றே வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. கனடாவாழ் தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் ஒழுங்குசெய்த கூட்டம் ஒன்றில், சிறிலங்காவுக்கான கனடாத் தூதுவர் பேசுகையில், தன்னாட்சி உரிமை கோரும் உரித்து இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு என்று வலியுறுத்தினார்" எனத் தெரிவித்தார்.

> "1988ஆம் ஆண்டு, ஜெனீவா ஒப்பந்தத்தில் புலிகள் கையெழுத்திட்டனர். அந்த நாளில் இருந்து புலிகள் நீதிக்குப் புறம்பான கொலைகளில் ஈடுபடவில்லை""
>
> -பேராசிரியர் பீற்றர் சால்க் (உப்சலா பல்கலைக்கழகம் - சுவீடன்)

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. ✷

# ஆடிக்காற்றில் அம்மிகள்...

திரும்ப வேண்டிவந்ததை இங்கு நினைவு கூரவேண்டும்.

இப்போது பிரான்சு நாட்டுப் பிரதமர் Alain Juppe கொஞ்சம் இராசதந்திரமாக ஒட்டாவாவில் "Vive le Canada" என்றும், கியூபெக்கில் "Vive le Quebec" என்றும் குரல் கொடுத்துள்ளார்.

கியூபெக் பிரிவினையைத் தடுக்க அல்லது அதனை மழுங்கடிக்க மாகாண அரசுகளுக்கு மேலும் பல அதிகாரங்களைப் பாரப்படுத்த கனேடிய அரசு முன்வந்துள்ளது.

தொழிற்பயிற்சி சம்பந்தமான அதிகாரத்தை ஏற்கனவே கனேடிய மைய அரசு, மாகாண அரசுகளிடம் கையளித்து விட்டது.

இப்படி இணைப்பாட்சி அரசுகளே பிரிவினையைத் தடுக்க, மேலதிக அரசியல் பரவலாக்கலை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கும்போது துணை நிதி, நீதி அமைச்சர் பீரிஸ், சனாதிபதி சந்திரிகா தங்களது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் இனப் பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு என பகற்கனவு காண்கிறார்கள்.

முதலில் அரசியல் பரவலாக்கல் யோசனைகள் பாராளுமன்றத்தில் நிறைவேறும் என்பதே குதிரைக்கொம்பு. அது நேரடி வாக்கெடுப்பில் சிங்கள மக்களால் ஆதரிக்கப்படும் என்பது அதைவிடக் குதிரைக்கொம்பு. இந்த இலட்சணத்தில் பேராசிரியர் துணை நிதி, நீதி அமைச்சர் 'பயங்கரவாதத்தை' இராணுவ பலம் கொண்டு ஒழித்து விடப்போவதாக உளறுவதும் அதன்பின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணப் போவதாக அலட்டுவதும் மொட்டைத் தலையன் சிலிப்பிக்காட்டிய கதையைத்தான் ஞாபகப்படுத்துகிறது.

ஆடிக்காற்றில் அம்மிகள் (இந்தியா, கனடா) பறக்கும்போது குளவி (சிறிலங்கா) எம்மாத்திரம்? குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட நினைக்கிறார் நீதியமைச்சர். ✷

# தவிப்பு (சிறுகதை)...

தேத்தண்ணி குடிச்சிட்டு வந்து நில்லுங்கோ"

"வேண்டாம், எனக்குப் பசியில்லை."

"உங்கட முகத்தைப் பார்த்தா அப்படித் தெரியேலை. நான் பார்த்து வாறதுக்குள்ள நீங்களும் போய் வந்திடலாம். தலை சுத்தி விழுந்திடுவீங்கள் போல இருக்கு. போங்கோ ஐயா"

முன்பின் தெரியாத மனிதர் தன் மீது இத்தனை பரிவு காட்டிக் கதைத்ததும் அவருக்கு அழுகைதான் முட்டிக் கொண்டு வந்தது.

அந்த மனிதர் உள்ளே ஆட்களை விலத்திக்கொண்டு போக, செல்லத்துரை ஒரு நிமிடம் நின்றார். இப்போது வயிறு இன்னும் இரைச்சலுடன் புரண்டது.

அவர் விசாரிச்சுக் கொண்டு வருமுன் வந்துவிடலாம் என்ற நினைவில் ஆஸ்பத்திரிக்கு முன்புறம் உள்ள கடைக்கு ஓடிப்போனார். ஒரு தேநீர் மட்டும் குடித்தார். துவாயால் வாயைத் துடைத்துக் கொண்டு மறுபடி ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்தார்.

இப்போது, ஆட்கள் இன்னும் அதிகமாய் வந்து நின்றிருந்தார்கள். அவருக்குக் கவலையாய் இருந்தது.

இந்த நேரம் வரை வீடு திரும்பாமல் விட்டதால் மனைவி யோசிக்கப் போகிறாள். யாராவது விசயம் சொன்னால் ஐயோ என்று ஏங்கப் போகிறாள். அவளும் சாப்பிடாமல் அழுது கொண்டிருக்கப் போகிறாள்.

மூன்று மணிக்கு மேலாகியும் வெய்யிலின் சூடு தணியவில்லை.

"ஐயா......"

திடுக்கிட்டுத் திரும்பினார்.

அவர்தான். பக்கத்தில் ஒரு போராளி இளைஞன்.

'திக்'கென்றது. என்ன சொல்லப் போகிறாரோ என்று மனதுக்குள் கலவரம் எழுந்தது.

"ஐயா! இங்க காயப்பட்டு வந்தவையில உங்கட பிள்ளை இல்லை. இந்தப் பிள்ளை காயப்பட்ட ஆட்களோட உதவியாய் இங்க வந்தவன். இந்தப் பிள்ளைதான் சொன்னது. இவனுக்கு அன்பரசனைத் தெரியுமாம். அவன் சண்டைக்கு வரேலையாம். இங்கால உதவிக்குத்தான் நிண்டவனாம். அங்க 'மெடிக்சில' நிக்கிறானாம். நீங்கள் கவலைப்படாமல் போங்கோ ஐயா." அந்த வார்த்தைகள் எவ்வளவோ ஆறுதலைத் தந்தன. ஆனாலும், சந்தோசப்பட முடியாமல் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"மற்றப் பிள்ளையளின்ர நிலைமையும் கவலையாத்தான் இருக்கு" அவர் ஒரு வினாடி பேசாமல் நின்றார்.

"தம்பி! நீங்களும் என்ன அலுவலுக்காக வந்தீங்களோ தெரியாது. என்னைப் பாவம் பார்த்து எனக்காகக் கஸ்டப்பட்டிட்டீங்கள்" அவரின் கண்கள் சட்டென்று நிறைந்தது. முகத்தில் எல்லையில்லாத சோகம் அப்பிக் கொண்டது.

"ஐயா! இவற்ற மகன் வீரச்சாவடைஞ்சிட்டார். அதுக்காகத்தான் இங்க வந்தவர்"

விக்கித்துப் போய் அவர் பார்க்க – அவர்கள் ஆஸ்பத்திரியின் உட்புறம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். ✷

## இத்தாலியில்

# மாவீரர் நினைவு

## சுற்றுப் போட்டிகள் -96

தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக, இத்தாலி பலெர்மோவில் மாபெரும் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் 19-05-96 தொடக்கம் 9-06-96 வரை சிறப்பாக நடைபெற்றன. தொடக்க நாளன்று தமிழீழத் தேசியக் கொடியினை அனைத்துலகச் செயலகத்திலிருந்து வருகை தந்திருந்த திரு. சந்திரன் அவர்கள் ஏற்றி வைக்க, விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளைப் பிரதிநிதி திரு. து. மேதா, ஈழத்தமிழர் விளையாட்டுக்கழக சம்மேளனப் பொறுப்பாளர் திரு. கணேஸ், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. கிட்டு (கிருஸ்ண குமார்) ஆகியோர் ஆரம்பநாள் விளையாட்டுக்களைத் தொடக்கி வைத்தனர்.

ஆரம்பநாள் போட்டியில் சென் அன்ரனிஸ், அன்புப் பறவைகள், நண்பர்கள், அன்பு (மாவீரன்), புனித பேதுருவானவர், காவலூர், ஏழுமீன், புளூடைமன், வீனஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொண்டன.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி நாளன்று (9-06-96) 1ஆம், 2ஆம், 3ஆம் இடத்திற்கான போட்டியும், பலெர்மோ கல்வி நிலைய மாணவர்களுக்கிடையேயான இல்ல விளையாட்டுப் போட்டியுடன் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது. பார்வையாளர்களுக்கான வேக நடை, ஓட்டப் போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம் என்பனவும் பெண்களுக்கான சங்கீதக் கதிரை, 35 வயதுக்கு மேற்பட்டோரின் ஓட்டப் போட்டி என்பனவும் நடைபெற்றன.



பாடசாலைகளுக்கிடையேயான இல்ல விளையாட்டுப் போட்டியில் 1ஆம் இடத்தை மில்லர் இல்லமும், 2ஆம் இடத்தை அன்னைபூபதி இல்லமும் பெற்றுக் கொண்டன. உதைபந்தாட்ட 1996ஆம் ஆண்டிற்கான சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தைப் புளூடைமன் கழகம் பெற்றுக் கொண்டது. 2ஆம், 3ஆம் இடங்களைச் சென். அன்ரனிஸ், அன்புப் பறவை ஆகிய கழகங்கள் பெற்றுக் கொண்டன. கரபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை வீமன் பேனாட் கழகம் பெற்றுக் கொண்டது. 2ஆம், 3ஆம் இடங்களை முறையே அன்பு, வீனஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பெற்றுக் கொண்டன.

போட்டி இறுதிநாளன்று திலீபன் கல்வி நிலைய மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையுடன், தமிழீழத் தேசியக் கொடியிறக்கல் நடைபெற்றது. இந்நிகழ்வுடன் 1996ஆம் ஆண்டிற்கான மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நிறைவுற்றன. இப்போட்டிகள் யாவும் ஈழத்தமிழர் விளையாட்டுக்கழக சம்மேளத்தின் மேற்பார்வையில் அதன் விதிகளுக்கு அமைய நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. ✷

## வன்னியில்

# பல குடியேற்றங்கள் திறந்துவைப்பு

தமிழீழக் குடிசார் நிருவாகம் வன்னியிற் பல குடியேற்றங்களை அமைத்து வருகிறது. இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், கோவில்களிலும் தங்கியிருக்கும் மக்களை, நிரந்தரமாகக் குடிமயர்த்தும் நல்லெண்ணத்துடனேயே இக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வடிப்படையிற் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முறிகண்டி எனுமிடத்தில் 400 குடும்பங்களைக் குடிமயர்த்தப் போதுமான ஓர் குடியிருப்புத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புடன் கல்விநிலையமும், மருத்துவ நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் மக்களுக்கு எந்நேரமும் சேவையை வழங்கக்கூடிய விடுதலைப் புலிகளின் நடமாடும் மருந்தகச் சேவையும் வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கான போசாக்கு நிலையமும், உள்ளூர்க் கைத்தொழிலுக்கான வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பங்களுக்கே இக்குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த 400 குடும்பங்களிலும் உள்ள சுமார் 2000 குடும்ப அங்கத்தவர்கள் தங்கக் கூடியதாகவே இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### குடியிருப்பு விஸ்தரிப்பு

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் பகுதியிற் கடந்த 14-01-96 அன்று திறந்து வைக்கப்பட்ட காந்த ரூபன் குடியிருப்புத் திட்டம், மேலும் விஸ்தரிக்கப்பட்டுத் தற்போது 1294 குடியிருப்பாளர்கள் வசிக்கக்கூடியதான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழீழக் குடிசார் நிருவாகத்தாற் காற்பங்கு ஏக்கரில் உருவாக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட இக்குடியிருப்பில் ஆரம்பத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனியான வீடுகள் என்ற வீதத்தில் 295 குடும்பங்கள் தங்கியிருந்தன.

தற்போது தமிழீழப் புனர்வாழ்வுக் கழகமும், அக்கராயன் அபிவிருத்திச் சபையும் இணைந்து இக்குடியிருப்பை மேலும் பலர் வசிக்கக்கூடியவகையில் விரிவு படுத்தியுள்ளன. இக்குடியிருப்புக்கு அண்மையில் ஓர் பாடசாலை உருவாக்கப்பட்டு அது சிறந்த முறையில் இயங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ✷


# சுதந்திரதாகம்

இடம் : SAMFUNNSHUSET, OSLO
காலம்: 03-08-96 சனிக்கிழமை
மாலை 7 மணி

- கிராமிய நடனம்
- இசை நிகழ்ச்சி
- நாட்டிய நாடகம்
- நாடகம்

உள்ளடங்கலான கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

தொடர்புகட்கு: ☎ 22- 350 - 980

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

ஒழுங்குகள் : தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, நோர்வே.


## சுவிசில் முத்தமிழ் விழா

கடந்த மாதம் 8ஆம் நாள் சுவிஸ் பேர்ண் மாநிலத்தில் 'பறோவ்' எனுமிடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் முத்தமிழ் விழா நடாத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட விழாவின் ஆரம்ப நிகழ்வுகளாக தமிழீழத் தேசியக் கொடியேற்றல், அமைதி வணக்கம், மங்கள விளக்கேற்றல் வரவேற்புரை எனத் தொடர்ந்தது. யேர்மனியில் இருந்து வருகை தந்திருந்த வானதி வாணி நர்த்தனாலய மாணவிகளினதும், சுவிஸ் கலைமகள் வித்தியாசாலை சுமிஸ்வால்ட் மாணவிகளினதும் எழுச்சி நடனங்களுடன், கவிதைகள், பேச்சுக்கள், எமந்தாள் இளைஞர்களின் "பாட்டு வாத்தியாரும் மோட்டு வேலைக்காரனும்" என்ற நகைச்சுவை நாடகமும் இடை வேளை வரை தொடர்ந்தன.




கூர் மாநில பொறுப்பாளர் திரு. அல் பேட்டின் சிறப்புரையைத் தொடர்ந்து, சூரிச் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'போர்கால இராகங்கள்' இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. சுக் மாநில கலைஞர்களின் சமூக சீர்திருத்த நாடகமான "குந்த ஒரு குடி நிலம்" இருமுனை நாடகமாக மேடையின் ஒருகரையில் புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் எம்மவர் சிலரின் தேசிய ஒருமைப்பாட்டையும் - பிள்ளைகளின் கேள்விக்குரிய எதிர்காலத்தையும், மறுகரையில் தாயகத்தில் எம் உடன் பிறப்புக்களின் அன்றாட வாழ்க்கையையும் சித்தரித்து நெறிப்படுத்தி இருந்தார்கள்.

இவ்விழாவில் உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவையினாலும், சுவிஸ் சைவத்தமிழ்ச் சங்கத்தாலும் நடாத்தப்பட்ட, முறையே தமிழ், சமய பாடங்களுக்கான தேர்வில் பங்குபற்றி சித்தி அடைந்தோரிற்கான சான்றிதழ்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளைத்தலைவர் வினாசித்தம்பி பாலா அவர்களால் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்களின் கையொப்பங்கள் நேரடியாக பெறப்பட்டு வழங்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ✤

# திருமலையில் புலிகள்...

ரோந்து வந்த அவ்இராணுவ அணி தாக்கியழிக்கப்பட்டது. இதன்போது, இராணுவத்தினரின் 'பவள்' கவச வாகனம் ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு, பின்னர் அழிக்கப்பட்டது. பி.கே.எல்.எம்.ஜி ஒன்று, ஏ.கே.எல்.எம்.ஜி மூன்று உட்பட பல ஆயுதங்கள், மற்றும் இவற்றிற்கான பெருமளவு ரவைகளும் கைப்பற்றப்பட்டன. இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது, 2ஆம் லெப். தர்மபுரி என்றழைக்கப்படும் அம்பாறையைச் சேர்ந்த நவரட்ணம் குணசேகரம், வீரவேங்கை ஜெயம் என்றழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த மயில்வாகனம் தவேந்திரன் ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தாயக மீட்புப் போரில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிட்ட இத் தேசிய வீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

### தாக்குதல் பற்றி சர்வதேச செய்தி நிறுவனங்கள்

திருமலை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட இவ்வெற்றிகரமான தாக்குதலைப் பற்றி பி.பி.சி., ரொய்ட்டர், 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' போன்ற பல சர்வதேச செய்தி நிறுவனங்கள் விபரிக்கையில், இவ்வாண்டில் சிறிலங்காப் படை மீது நடாத்தப்பட்ட பெரும் தாக்குதல்களில் ஒன்று எனவும், கடந்த மூன்று மாதத்திற்குள் நடந்த மிகப்பெரிய சமர் எனவும், கிழக்கில் இவ்வாறு அரச படைகளுக்கு ஏற்படும் இழப்புக்கள், படையினரின் மனோநிலையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளன.

### தாக்குதல் பற்றிய சிறிலங்கா அரசின் கதை

இது இவ்வாறிருக்க, திருமலை தாக்குதல் பற்றி சிறிலங்கா அரசு நகைப்பிற்கிடமான செய்தியை வெளியிட்டுள்ளது. தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது உதவிக்கு விரைந்த படையினர் எறிகணைகளாலும், மோட்டார்களாலும் நடத்திய தாக்குதலில் 40 புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் இதனைத் தாம் புலிகளின் வானொலித் தொடர்பை ஒட்டுக் கேட்டதில் இருந்து தெரிய வந்ததாகவும் வழமைபோல் கதை அளந்துள்ளது. தெற்கில் உள்ள சிங்களவர்களுக்கு உண்மை நிலவரம் தெரியவந்தால், அது அரசுக்குப் பெரும் நெருக்கடிகளைக் கொடுக்கும் என்ற காரணத்தினால், சிறிலங்கா அரசு, தனது பிரச்சார ஊதுகுழல்கள் மூலம் அப்பட்டமான பொய்ச் செய்தியை பரப்பியுள்ளது. கிழக்கில் புலிகளுக்கெதிராகத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளதாகவும், புலிகளின் பல முகாம்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் தமது நிலைகள் மேலும் உறுதிப்பட்ட நிலையிலேயே இருப்பதாகவும் பிரச்சாரம் செய்யும் சிறிலங்கா அரசு தன்னையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்ற முயல்கிறது

### 2ஆம் நாள் தாக்குதல் 4 இராணுவம் பலி

01-07-96 தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கிடையில், அதற்கு அவகாசமே இல்லாமல் 02-07-96 அன்று காலை 9.30 மணியளவில் திருமலையில், மூதூர் பாலத்தோப்பூர் எனுமிடத்தில் வைத்து ரோந்து சென்ற அணி மீது, விடுதலைப் புலிகள் நடாத்திய 5 நிமிடத் தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பிலும் 5 இராணுவம் பலி

03-07-96 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில், அரந்தளவ இராணுவ முகாமிலிருந்து தேடியழிக்கும் நடவடிக்கைக்காக வீதிக்கு வந்த இராணுவம் மீது, புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

# "தளபதி கிட்டு சென்ற...

இந்த வழக்கிலேயே நீதிபதி லெட்சுமண ரெட்டி, ,தனது தீர்ப்பில் இந்தியக் கடல் எல்லையிருந்து 440 கடல் மைல்களுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் பயணம் சென்ற கப்பலை இடைமறித்து, அதனை இந்தியக் கடற்பரப்பிற்குள் கொண்டு வர இந்திய கடற்படைக்கு எவ்வித உரிமையோ, அதிகாரமோ கிடையாது. இந்திய அரசை அச்சுறுத்தவோ, அதன் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கவோ அவர்கள் திட்டமிடாத போது, எதற்காக இடைமறித்துத் திருப்பி அழைத்து வரவேண்டும் என்றும், இந்திய அரசுக்கு எந்த வகையிலும் எதிரான நடவடிக்கையில் ஈடுபடாமல் வேறு திசை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது, தென் அமெரிக்காவின் கொண்டுராஸ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட அக்கப்பலை - சமாதானத் திட்டத்துடன் சென்ற அவர்களை, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துத் தடுத்து நிறுத்த எவ்வித காரணமோ, அவசியமோ இல்லை என்றும் இந்தியா எவ்வித உரிமையும் இல்லை என்றும் தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளார்.

கப்பற் பணியாளர்கள் 9 பேரும் எவ்விதக் குற்றமும் செய்யாத நிலையில் இவர்களை இந்திய அதிகாரிகள் 'தடா' சட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளாக சிறை வைத்துள்ளார்கள், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எவரும் இந்தியா நோக்கி வரவும் இல்லை, இந்தியாவுக்குத் தீங்கு செய்யவும் இல்லை என்றும், நிரபராதிகளான இவர்களை உடன் விடுதலை செய்யும்படியும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

தளபதி கிட்டு சென்ற கப்பல் இந்தியாவுக்கு எதிரான காரியங்களைச் செய்ய வந்ததெனவும் அதனாலேயே அக்கப்பலைத் தாம் கைப்பற்ற முயன்றதாகவும் இந்தியாவின் முன்னைய காங்கிரஸ் அரசு செய்த பிரச்சாரம் முற்று முழுதான பொய் என்பதும், தளபதி கேணல் கிட்டுவினதும், சக 9 போராளிகளினதும், "எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது" என்ற தன்மான உணர்வின் வெளிப்பாடாக அவர்கள், தம்முயிர்களைத் தற்கொடையாக்கியதின் புனிதத்தன்மையும் இவ் இந்திய நீதிமன்றத்தின் தீர்ப்பால் உலகுக்குச் சட்டரீதியாக உணர்த்தப்பட்டுள்ளது. ✷

# கிழக்கில் புலிகள் பெறும்...

சிங்கள மக்கள் வாழும் ஒரு குடியேற்றப் பிரதேசம் என்பதாலும் -

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அங்கமாகி, இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய மக்கள் சமூகமாகத் திகழும் முஸ்லிம்கள் - தமது பாரம்பரிய வாழ்விடமாகக் கொண்டு - கூடிய அளவில் வாழும் ஒரு பிராந்தியம் என்பதாலும் -

சிங்கள தேசத்தோடு நிலத்தொடர்ச்சிகொண்ட நீண்ட எல்லையைக் கொண்டது என்பதாலும் -

நீண்ட கடற்பரப்பையும், வளம் நிறைந்த நிலப்பரப்பையும் மட்டுமன்றி திருக்கோண மலையின் இயற்கைத் துறைமுகத்தைத் தன்னகத்தே உடையது என்பதாலும் -

அரசியல், குடியியல், புவியியல் ரீதிகளிலும், அதன் காரணமாக இன்று போரியல் ரீதியிலும் இன்றியமையாத ஒரு பாத்திரத்தை கிழக்கு மாகாணம் பெற்றுள்ளது.

இத்தகைய சிறப்புத் தன்மைகளின் காரணமாக, சிங்களப் படைகள், கிழக்கு மாகாணத்தின் இராணுவ சமநிலையில் தமது மேலாதிக்க நிலையை - எந்த ஒரு கட்டத்திலும் விட்டுக் கொடுக்காமல் - தொடர்ந்தும் பேணியே வருகின்றன.

இந்தியப் படைகள் தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தில் சிங்களப் படையினரின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு, அங்கு புலிகள் நூறு வீத செயற்பாட்டுத் திறனைக் கொண்டிருந்தனர். ஆனால், 2ஆவது ஈழப்போர் தொடங்கியதன் பின், வடக்கை முற்றாகக் கைவிட்டாலும் கிழக்கை முழுமையாகக் கைப்பற்றியே தீர வேண்டுமென முழுமுயற்சியெடுத்த பிரேமதாசா அரசு, அதில் வெற்றியும் கண்டது.

2ஆவது ஈழப்போரின் முடிவில் புலிகள் இயக்கத்துடன் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கைக்கு வந்து, சமரசப் பேச்சுக்களை நடாத்தியபோதும் - கிழக்கு மாகாணத்தில் இறுக்கமான பிடியையே சந்திரிகா அரசு கடைப்பிடித்தது. சமரசப் பேச்சுக்களை நடாத்திக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திற்கூட, புலிவீரர்களின் செயற்பாடுகளுக்குச் சிங்களப் படைகள் பெரும் தடையாக இருந்தன. தற்காப்பு ஆயுதங்களைக்கூட கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. படகில் வந்த போராளிகள் சிலரைக் கைது செய்த பொலிசார், அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தனர்; குருமண்வெளி முகாமில், வீதியால் போகும்போது தடுத்துத் துன்புறுத்தப்பட்டதால், 2வது லெப். சிறீநிவாசன் என்ற போராளி 'சயனைட்' உட் கொண்டு வீரச்சாவடைய நேர்ந்தது.

இவ்வாறாக - அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு மாகாணத்தை எப்போதும் தமது ஆளுகைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, சிங்களப் படைகள் அங்கு நிலைநாட்டியிருந்த இராணுவ மேலாதிக்க நிலையை, இப்போது -

3ஆவது ஈழப்போரின் ஆரம்பத்திலிருந்தே புலிகள் இயக்கம் படிப்படியாகச் சரித்து வருகின்றது.

வடக்கில் படையினர், 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கையில் கவனம் செலுத்த, புலிகள் கிழக்கில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர்.

இதனால், கிழக்கு களநிலைமை படிப்படியாகச் சிங்களப் படைக்குப் பாதகமானதொன்றாக மாறத் தொடங்கியது.இன்று, கொழும்பின் இராணுவ ஆய்வாளர்களே அரசுக்கு அபாயச் சமிக்ஞை காட்டும் அளவுக்கு, கிழக்கின் இராணுவநிலை உள்ளது. குடாநாட்டில் அரசு பெற்ற இராணுவ வெற்றியால் அரசுக்குக் கிடைத்த நன்மைகளைவிட, கிழக்கில் அது சந்திக்கும் இராணுவப் பின்னடைவுகள், சந்திரிகா அரசுக்குப் பாரிய அரசியல் - இராணுவ நெருக்கடிகளை வழங்கப்போகின்றன! ✷

# நந்திக்கொடி இராமலிங்கம் சுட்டுக்கொலை

சிங்கள இனவெறி இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து, யாழ்ப்பாணத்திற் சிங்களத் தேசியக்கொடியை ஏற்றித் தமிழர்களைத் தாம் வெற்றி கொண்டுவிட்டோம் என்று இறுமாந்திருந்தவேளை, அவர்களின் வெற்றிக் கொண்டாட்டத்திற் கலந்துகொண்டு நந்திக்கொடி யேற்றிய தம்பு இராமலிங்கம் என்பவர் கடந்த யூலை மாதம் 7ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறியப்படுகின்றது. சிங்கள அரசின் விசுவாசியான இவருக்கு அரசு, தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறிக்கொள்ளும் பகுதிக்குள்ளேயே பாதுகாப்பு வழங்கியிருந்தது. இவ்வாறிருந்தும் சம்பவதினம் அவரது வீட்டுக்குள் நுழைந்த இளைஞர்கள் சிலர் அவரைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில வாரங்களுக்கு முன், இந்நபர் வாழும் அரியாலைப் பகுதியில், 60 வயதுடைய ஓர் பெண்ணைச் சிறிலங்கா இராணுவத்தினன் அவரது வீட்டில் வைத்துப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்க முனைந்த போது, அப்பெண் கூக்குரல் எழுப்பவே அயலவர் ஓடிவரத் தனது ஆயுதத்தையும் விட்டு விட்டு இராணுவத்தினன் ஓடி மறைந்து விட்டான். அவ்விடத்திற்குச் சென்று இராணுவத்தினன் விட்டுச் சென்ற ஆயுதத்தைப் பத்திரமாக எடுத்துச் சென்று ஒப்படைத்ததும் இந்த இராமலிங்கமே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ✷

# வெள்ளைக் கொடி கட்டிய வீட்டிலிருப்பது விடுதலை அல்ல..........

'இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!"

பாரதி!
சுதந்திர தேவியின் பாதங்களை வருடி
ஆயிரம் வரிகளால் அர்ச்சித்த பாவலனே!
எட்டயபுரத்து அரசே!
எங்களுக்காகவா எழுதினாய் இப்பாட்டு?
கைதொழத் தக்க கவிஞனே!
காலம் கடந்தாலும் நீளும் உன்குரல்
இன்றுமெம் காதில் ஒலிக்கிறது.
நெருப்பிற் புதைத்து பழுக்கக் காய்ச்சிய சொற்களால்
பொய்யில்லாப் பாடல் புனைந்தவனே!
விடுதலையை விருப்புறும் எவருக்கும்
உன்பாடல் உருவேற்றும்
விடுதலை! விடுதலை!! விடுதலை!!! என்று
உன் இதயக்குகையெங்கும் இருந்தது விடுதலை.
எம் தேசத்திசை யெங்கும் எழுவதும் விடுதலை.
விடுதலை என்பதின் விளக்க மென்ன?
சுதந்திரத்தின் சுருதிப் பொருள் யாது?
அனுபவித்தறியாததுக்கு உவமை கூறமுடியாது.
கற்பனையிற்தான் கொஞ்சம் கண்டு கொள்ளலாம்
விடுதலையை விரித்துரைக்க முடியா தெனினும்,
அது காற்றைப் போலவும் ஒரு உல்லாசம்
கட்டளையற்றுப் பொழியும் மழை போன்ற சல்லாபம்
சிட்டுக்குருவியின் சிறகசைப்பைப் போல ஆனந்தம்
அதிகாலை இதழ்விரிக்கும் மல்லிகைப் பூவின் பரவசம்
மலைதழுவும் கருமுகிலின் மகிழ்ச்சி.
இரு என்று சொல்லவும்
எழு என்று உத்தரவிடவும்
எஜமானர்களற்ற இருப்பு
என்னை நானே தீர்மானிக்கும் வாழ்வு
இதுவே விடுதலை.
அதற்காகவே போராட்டம்
அப்படியா?
கற்பனையிற்கூட எத்தனை ஆனந்தம்
கைவிலங்குகளற்ற கைதிகளாக வாழ்வதிலும்
மூச்சைத்துறந்து முடிந்துவிடுவது மேலானது.
எம் ஊரில்
எம் வீட்டில்
சுற்றம் சூழ இருப்பது மட்டும் சுதந்திரமல்ல
எம் வாழ்வை இன்னொருவன் தீர்மானிப்பது
விடுதலையுமல்ல.
பட்டிமாடுகளின் கழுத்தில் கயிறில்லை என்பதற்காக
மாடுகள் சுதந்திரமானவை என்று சொல்லமுடியுமா?
கூண்டுக்கிளியைக் கொஞ்சி மகிழ்வார்கள்.
பறந்து செல்லப் பார்த்திருப்பார்களா?
இன்னொருவனுக்குக் கீழே இருந்துகொண்டு
என்னைநானே தீர்மானிக்கின்றேனென்பது
எவ்வளவு வேடிக்கையானது?
வீட்டுநாய் விறாந்தையில் ஏற முடியுமென்பதற்காக
நான் சுதந்திரமானவனென்று
நாயெப்படிக் கூறமுடியும்?
இன்று
ஊருக்குப் போன உறவுகளெல்லாம்
"ஆனந்தசுதந்திரம்" அடைந்து விட்டோமென்று
பாட்டுக்கள் பாட பகைவன் விடுவானா?
சின்னத்திரையில் வண்ணப்படம் பார்ப்பதும்
"சீமைச்சரக்கில்" வாய்நனைத்துக் கொள்வதும்
பள்ளிக்குப் போவதும்
பரீட்சை எடுப்பதும்
வெள்ளைக் கொடி கட்டிய வீட்டில் இருப்பதும்
விடுதலையல்ல.
விளக்கேற்றாதே
வீதிக்கு வராதே
ஆறுமணிக்குள்ளே அடங்கிப்போ என்றதும்
கூனிக் குறுகிக் கிடப்பதும்
சுதந்திரமல்ல..........

எம் வீட்டில்,
எம் ஊரில்,
தும்மவும், இருமவும் அனுமதிபெற வேண்டுமென்றால்
அந்த வாழ்வு யாருக்கு வேண்டும்?
எந்தையர் பூமியில் உலாவரும் உரிமம்கூட
எமக்கில்லை என்றான பின்பு
சும்மா மூச்சுவிடுவதற்குப் பெயர் சுதந்திரமென்றால்
சொன்னவன் மனிதனல்ல........ சோற்றுப்பிண்டம்.
கைகட்டிச் சேவகம் செய்பவனுக்கு
காற்சட்டை வேண்டியதில்லை
வெட்கமென்ன வெட்கம்?
நிர்வாணமாகவே நிற்கலாம்.
அடிமைவாழ்வில் அழுந்திக் கிடப்பவனுக்கு
தோலின் துவாரத்தில் வியர்வை கசிவதில்லை.
நாயாய் கிடப்பவனுக்கெதற்கு கோயிலும், குளமும்?
சுதந்திரமற்ற ஊரில் திருவிழா எதற்கு?
நான் நானாக இல்லை யென்றான பின்னர்
தேனென்ன? திரவியமென்ன?
உன்னுடலுக்கெதற்கு உணவென்று,




– வியாசன்

நாக்குக்கூட நகைத்துக் கொள்ளும்.
ஊரிருத்தல் உன்னதம் தான்.
ஆனால், அடிமையற்று இருத்தல் வேண்டும்.
ஏவல்செய்துகொண்டு இந்திரபுரியில் இருப்பதிலும்
சுதந்திரமாக வனாந்திரத்தில் வாழ்வது சுகமானது.
அச்சத்தோடு அரியணையில் இருத்தலிலும்
பயமேதுமின்றி தரையிலிருத்தல் தாழ்வன்று,
மீளா அடிமையென ஊரிருத்தலிலும்
கைவீசிக் கொண்டு காட்டிலிருத்தலே ஆனந்தம்.
வாய்பொத்திக் கொண்டு வலிகாமத்தில் வாழ்வதிலும்
வாய்திறந்து பாடி வன்னியிலிருத்தல் மேலானது.
ஊர்வந்த பகை தொலைத்தெம் பிள்ளைகள் வருவர்.
தலைவன் கொடியேற்றினானெனும் செய்தியும் வரும்.
""எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே"" என்று மகிழ்ந்து
பரந்தன் வீதியில் பாடிக்கொண்டும்
ஆனையிறவால் ஆடிக் கொண்டும்
நாமுமெம் ஊர்புகுவோம் ஓர்நாள்.
அன்று வலிகாமம் மட்டும் மீட்டதாய் இராது.
தேசம் முழுமையும் எம்வசமானதாய்
"தமிழீழம்" எல்லையிடப்பட்டு தனிநாடானதாய்
விடுதலையின் மெய்ப்பொருள் உணர்ந்ததாய் இருக்கும்.
உறுதிகுலையாது ஒருவனுள்ளான்
அவனெம் தலைவன்.
மானம் பெரிதென்ற மகுடம் அவன் தலையில்
ஈனம் துடைக்கின்ற இறுமாப்பு அவன் நெஞ்சில்.
வானம் இடிந்தாலும் வளையாத மனமுண்டு.
வரிவேங்கைப் படைவென்று வருமென்ற திடமுண்டு.
அடிமைத்தளத்தில் உழலும் உறவுக்கு
சுதந்திரதேவி!
உன் கண்ணின் ஒளி கொடு.
நிமிர்ந்தெள நெஞ்சில் உரம்கொடு.
விடுதலை எம் மூச்சு.
விடுதலை எம் வாழ்வு.
அடிமை நரகில் அழுந்திக் கிடப்பதிலும்
விடுதலைக்காக எழுந்து வீழ்ந்துமடிந்தாலும்
அது பெருவாழ்வெனப் பெருமை கொள்வோம்.
ஒன்றே தேசம்!
ஒருவனே தலைவன்!
வென்றே வருவோம்!
விடுதலை பெறுவோம்! ✣

# நீதியான சமாதானத்தை நோக்கி...




"தமிழீழ விடுதலைப் புலிகளே சமாதானப் பேச்சுவார்த்தையை முறித்தனரென சிறிலங்கா அரசு கூறுவது, ஒரு அப்பட்டமான பொய்"

- அதி வணக்கத்திற்குரிய. கலாநிதி இம்மானுவேல்

=>




மங்கள விளக்கேற்றி மகாநாட்டை ஆரம்பித்துவைத்தவர்களில் ஒருவரான

- திரு.அலெக்ஸ் கில்ஹுர்
(அவுஸ்திரேலிய மனித உரிமைகள் சங்கத் தலைவர்)

<=

"தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தை ஒருபோதும் எதிர்த்ததில்லை. ஆனால் சமாதானம் என்பது நீதியானதாகவும், நிலையானதாகவும் தமிழரின் சுயநிர்ணய உரிமையை மதிப்பதாகவும் இருக்க வேண்டும்"

- திரு.லோறன்ஸ் திலகர்
விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினர்

=>




"நீதியான சமாதானம்" என்ற தலைப்பில், அவுஸ்திரேலியா தலைநகர் கன்பராவில் இருநாட்கள் நடைபெற்ற சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்த பேச்சாளர்கள், அவதானிகள், செய்தியாளர்களில் ஒரு பகுதியினர்.




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224